உதயன்
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30
UTHAYAN - A Lively National Tamil Daily
தெளிவான வானிலை, சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°C 28°C
பக்கம் 36 | சுடர்: 28 | கதிர்: 254 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 22, புதன் 07.08.2013

பாக். ராணுவ உடையில் வந்தவர்கள் தாக்குதல் 06

ஆயுதப் போட்டிக்கு முடிவு வேண்டும் 07

கிரிக்கெட் சபையின் நற்பெயர் முக்கியம் 22

# வடக்குத் தேர்தலை நிறுத்தவே முடியாது

## மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 7
வடமாகாணசபைத் தேர்தலை இரத்து செய்ய மேல்முறையீட்டு நீதிமன்றம் மறுத்து விட்டது. சிங்கள தேசிய முன்னணி அமைப்பு தாக்கல் செய்த மனுவை விசாரித்த பிறகு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.
ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய வடமாகாணசபைக்கு தேர்தல் நடக்கவுள்ளதால், நாட்டின் அரசியல் சாசன சட்டத்தின்படி, இந்த மனுவை விசாரிக்க நீதிமன்றங்களுக்குஅதிகாரம்இல்லைஎன்று அரச தரப்பில் வாதிடப்பட்டது.
மேலும் சிங்கள தேசிய முன்னணி ஓர் அரசியல் கட்சி என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், தேர்தல்கள் ஆணையாளர் அந்தக் கட்சியை இதுவரை அங்கீகரிக்கவில்லை என்று வழக்கு விசாரணையின் போது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா சுட்டிக்காட்டினார்.
ஆகவே, இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் நீதியரசர் கூறிவிட்டார்.

> “ வடமாகாண தேர்தலை நிறுத்துவதற்கு பேரினவாத அமைப்புகள் மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றே இந்த வழக்கு. ஆயினும் வடக்குத் தேர்தலை நிறுத்த முடியாது என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பேரின அமைப்புகளுக்கு விழுந்த அடியாகும்.

அதன் பிறகு மனுவை நிராகரிக்க நீதியரசர் முடிவெடுத்தாக சிங்கள ஜாதிக பெரமுனவின் தேசிய அமைப்பாளர் விஜித ரோஹன விஜயமுனி பி.பி.சியிடம் தெரிவித்தார்.
வடக்குத் தேர்தலை ஒத்திவைக்குமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் திருத்தங்களுடன் அதை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரியதையடுத்து வழக்கு விசாரணைகள் நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## வெளியாகின விருப்பு இலக்கம்



யாழ்ப்பாணம்,ஓக.07
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குரிய விருப்பு இலக்கங்கள் நேற்றிரவு தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.
இவை இன்றைய தினம் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.
தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் நேற்று முன்தினம் வெளியிடப்பட இருந்த போதும் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதி கிடைக்காததால் அவை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஙு-5-400)

## இந்திய அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 7
உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்திய பெற்றோலிய வளத்துறை அமைச்சர் இலங்கை வரவுள்ளார்.
இந்தப் பயணத்தின்போது அவர், வாயுவைப் பெறுவது சம்பந்தமாக இலங்கை அரசுடன் முக்கிய பேச்சுகளில் ஈடுபடுவார் எனத் தெரியவருகிறது. (த-சி)

# அமெரிக்கப் படைகள் குடாநாட்டில்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 7
அமெரிக்காவின் பசுபிக் விமானப்படையும், இலங்கை விமானப்படையும்இணைந்து, யாழ். குடாநாட்டில் 'பசுபிக் ஏஞ்சல்' பயிற்சியை முன்னெடுத்துள்ளன. குடாநாட்டில் குறிப்பிட்ட சில கிராமங்களில் இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தக் கூட்டுப் பயிற்சியில் அமெரிக்க ஆண், பெண் விமானப் படையினர் பங்கேற்றுள்ளனர்.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மருத்துவ முகாமுடன் ஆரம்பமான இந்தப் பயிற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டுப்பயிற்சி, மருத்துவ முகாம்களை நடத்துதல், திருத்தியமைத்தல் திட்டம் என்ற இரு பகுதிகளாக நடத்தப்படவுள்ளது.
மருத்துவ முகாம் அல்வாய் வடக்கு, அச்செழு கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.
திருத்தியமைக்கும் திட்டப் பயிற்சிகள் , பிரதானமாகப் பாடசாலைகள் திருத்துதல் மற்றும் அவற்றின் உட் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றை மையப்படுத்தி மேற்கொள்ளப் படுகின்றன.
புன்னாலைக் கட்டுவன் ஆரம்பப்பாடசாலை, குட்டியப் புலம் கலவன் பாடசாலை, அச்செழு சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் அமெரிக்க, இலங்கை விமானப்படை பொறியியலாளர்களால் திருத்தியமைக்கப்படவுள்ளன.
இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையுடன், அமெரிக்கா தொடர்ச்சியாக மனிதாபிமான மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டுப்பயிற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-5)

# நட்பு நாடாக இலங்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது

## ஜெயலலிதா சீற்றத்துடன் மன்மோகனுக்கு கடிதம்



சென்னை, ஓக 7
தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கையை நிச்சயம் ஒரு நட்பு நாடாக ஏற்க முடியாது என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.
பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தமிழ்நாட்டைச் சேர்ந்த 70 அப்பாவி மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்

தொடர்ச்சி: பக்கம் 21

# இராணுவ விசாரணையை ஒருபோதும் ஏற்கமுடியாது

## நாடாளுமன்றில் ரணில் காட்டம்



கொழும்பு, ஓக.7
வெலிவேரிய தாக்குதல் சம்பவம் குறித்தான இராணுவ விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நேற்று நாடாளுமன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சுயாதீன விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு உண்மை வெளிக்கொணரப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.
சபாநாயகர் அறிவிப்பு, மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விநேரம் ஆகியன முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 23(2)இன் கீழ் வெலிவேரியவில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு தொடர்பில் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே

தொடர்ச்சி: பக்கம் 21

# கட்சிகள் கோரினால் போக்குவரத்து வசதி

## தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஓக.7
வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித்தருமாறு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் தேர்தல்கள் திணைக்களத்தினால் அதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு, வட மேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் போது வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கு இலங்கை போக்குரத்துச் சபையின் பஸ்கள், தனியார் பஸ்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடும்.
[illegible] யான வாக்காளர்களை அவர்களின் போக்குவரத்து வசதி இல்லாத வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கான விசேட போக்குவரத்து வசதிகள், அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் கோரிக்கை விடுத்தால் தேர்தல்கள் திணைக்களம் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து கொடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனைத் தவிர்த்து அரசியல் கட்சிகள் வாக்காளர்களை தேர்தல் வாக்களிப்புக்காக ஏற்றி இறக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-5)

# தொலைபேசி அழைப்பினால் பறிபோனது 16 ஆயிரம் ரூபா

தென்மராட்சி, ஓக. 7
தொலைபேசியில் தெரிவிக்கப்பட்ட தகவலை உண்மை என நம்பிய இளைஞர் 'லீசிங்' கில் பெறப்பட்ட வாகனத்துக்கு மாதாந்தத் தவணைக் கட்டணமாகச் செலுத்த வைத்திருந்த 16 ஆயிரம் ரூபாவை பறிகொடுத்து ஏமாந்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி நுணாவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
நுணாவில் மேற்கைச் சேர்ந்த 21 வயது இளைஞர் கடன் அடிப்படையில் ஓட்டோ ஒன்றை கொள்வனவு செய்தார். கடன் தொகையின் மாதாந்தத் தவணைக் கட்டணம் செலுத்தும் அளவுக்கு தொழில் இடம்பெறாமையால் அவர் தினமும் கட்டட வேலைக்குச் சென்று

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்ராஸ் கபே படத்துக்கு ஜனாதிபதி முதலிடவில்லை


கொழும்பு,ஓக 07

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான 'மெட்ராஸ் கபே' திரைப்படத் துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதியுதவி வழங்கவில்லை என்று அந்தத் திரைப்படத்தின் கதாநாயகனான நடிகர் ஜோன் ஆப்ரகாம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரகசியமான முறையில் நிதி உதவி செய்துள்ளார் என்று வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று நடிகர் ஆப்ரகாம் தெரிவித்துள்ளார்.

'வியாகொம் 18 மோஷன் பிக்ஷர்ஸ்' நிறுவனமே இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கின்றது. இந்த வதந்தியால் நிறுவனம் கவலையடையும். இது தவிர, இரகசியமான முறையில் எவரும் என்னுடைய திரைப் படத்துக்கு முதலீடு செய்யவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1990களில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு இரகசிய நடிவடிக்கை தொடர்பான உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தத் திரைப் படம் தயாரிக் கப்பட் டுள்ளது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)



ஆடி அமாவாசை தினமான நேற்று செவ்வாய்க்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கேணியில் பிதிர்க்கடன் செலுத்தும் மக்கள். (த-20)

## 12 படையினருக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையின் 12 அதிகாரிகளின் விளக்க மறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

அவர்களை, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் ஏ.எல்.அஸ்ஹர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன் றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் ஏ.எல். அஸ்ஹர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இந்த வழக்கின் 12ஆவது பிரதிவாதியாகக் குறிப்படப்பட்டுள்ள விசேட அதிரடிப்படை உயர் அதிகாரி மட்டக்களப்பு நீதி மன்றில் நடைபெறும் வழக்கு ஒன்றில் பிரசன்னமாகிய படியால் அவர் மன்றில் சமூகமளிக்கவில்லை என அறிவிக்கப் பட்டது.

அத்துடன் 10ஆவது சந்தேகநபருக்குப் பிறந்துள்ள குழந்தையின் பெயர் சூட்டும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அவர் பிணை கோரியிருந்தார். எனினும் இதற்கு அரச தரப்பு சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. இதனால் சிறைச்சாலை ஆணையாளரின் ஆலோசனையினைப் பெற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

உதவிப் பொலிஸ் அதிகாரி உட்பட 12 பொலிஸ் விசேட அதிரடிப் படையினருமே விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து காத்திருந்த 4 மாணவர்களும் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்த மாணவர் ஒருவருமே 2006 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## வெலிவேரிய தாக்குதல்களுக்கு உத்தரவிட்டோரே குற்றவாளிகள்

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக 07

வெலிவேரிய தாக்குதல்களுக்கு உத்தரவிட்டவர்களே தண்டிக்கப்படவேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இராணுவத்தினரை வெறுமனே குற்றம் சுமத்துவதில் எவ்வித பயனும் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உயர் அதிகாரிகளினால் வழங்கப்படும் உத்தரவுகளுக்கு அமையவே படையினர் செயற்பட்டிருப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார். எனவே வெலிவேரிய சம்பவத்துக்காகப் படையினரைத் தண்டிப்பதில் பயனில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழப்புக்கள் பதிவாகியிருந்ததாகத் தெரிவித்துள்ளார். இந்த உயிரிழப்புக்களுக்கு இராணுவத் தளபதி, ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரே பொறுப்புச் சொல்ல வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

# வெலிவேரிய சம்பவம் தொடர்பில் ராணுவ விசாரணை கேலிக்கூத்து

## சர்வதேச மன்னிப்புச் சபை சாடல்

கொழும்பு, ஓக.7

வெலிவேரியாசம்பவம் தொடர்பில் இலங்கை ராணுவம் விசாரணை நடத்துவதென்பது கேலிக் கூத்தான விடயம் எனச் சுட்டிக்காட்டிய சர்வதேச மன்னிப்புச் சபை, இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது. சுத்தமான குடிதண்ணீர் கேட்டு வெலிவேரிய மக்கள் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தை ராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்கினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினால் 3 பேர் கொல்லப்பட்டும் 50 பேர் வரை காயமடைந்தும் உள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசியாவுக்கான பிரதி இயக்குநர் பொலிட்ரெஸ்ட் கொட் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

ஆயுதங்கள் இல்லாது போராடிய மக்களைப் பொலிஸார் போன்று செயற்பட்ட ராணுவத்தினர் அடக்கியதே முதல் தவறு. அதிலும் அவர்கள் இழைத்த குற்றங்களை அவர்களே விசாரணை செய்வது கேலிக் கூத்தான விடயமாகும்.

இலங்கை அரசு, சட்டரீதியாகப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தாம் செய்த தவறுக்காகப் படையினரே விசாரணை நடத்துவது மீண்டும் அந்த மக்கள் மீது பலப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கு சமனான விடயம் என பொலிட்ரெஸ்ட் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## முன்னாள் அமைச்சருக்கும் சகோதரருக்கும் பிடியாணை

கொழும்பு,ஓக 07

வடமேல் மாகாண சபையின் முன்னாள் கடற்றோழில் அமைச்சர் சனத் நிசாந்த மற்றும் அவரது சகோதரர் ஆராய்ச்சி கட்டுவ பிரதேச சபையின் தலைவர் ஜகத் சமந்த ஆகியோரைக் கைது செய்வதற்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் சிலாபம் நீதிவான் நீதிமன்றில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பிலேயே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத விறகு குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய்ச்சிகட்டுவ பிரதேசசபை செயலாளர் அவரது கடமையைச் செய்வதற்காகக் கருக்குலிய பிரசேத்துக்குச் சென்றுள்ளார். இதன்போது அவரது கடமையைச் செய்ய விடாது தடுத்ததாக இவர்கள் மீது முறைப்பாடு செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதன்படி நேற்று வழக்கு விசாரணைகளின்போது பிரதிவாதிகள் இருவரும் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த)

## காதல் தூதுத் தாக்குதலை இணக்கத்துக்கு விட்ட பொலிஸ்

### நீதிமன்றை நாடவே பாதிக்கப்பட்டவர் விருப்பம்

யாழ்ப்பாணம்,ஓக 07

காதல் தூது செல்ல மறுத்த மாணவனின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தது மட்டுமன்றி அந்த மாணவனின் தந்தை மீது தாக்குதல் நடத்திக் காயம் ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு சுன்னாகம் பொலிஸாரினால் இணக்க சபைக்கு விடப்பட்டுள்ளது.

எனினும் இந்த வழக்கை இணக்க சபையில் விசாரணை செய்வதைத் தாம் விரும்பவில்லை என்றும், நீதிமன்ற விசாரணையைத் தான் விரும்புவதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

பதின்ம வயதுச் சிறுமிக்குக் காதல் தூது செல்ல மறுத்ததை அடுத்து குறித்த மாணவனைத் தாக்கிய மன்மதக் கும்பல் அவனது தந்தையையும் தாக்கிக் காயப்படுத்தியது. இதில் உடுவில் கற்பக்குளையைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசன், அவரது மகன் கிருஸ்ண நேசன் ஆகிய இருவருமே தாக்கப்பட்டவர்களாவர். உடுவில், டச்சு வீதியைச் சேர்ந்த கனகலிங்கம் மன்மதன், சுதா, சங்குவேலியைச் சேர்ந்த ஶ்ரீவர்மன், பரராஜசிங்கம் சஞ்சீவன், உடுவில் றொட்டியாலடியைச் சேர்ந்த காந்தன் ஆகியோரே அத்துமீறி வீட்டினுள் புகுந்து தாக்குதலை நடத்தியவர்கள் என முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலினால் தலை உட்பட பல இடங்களில் காயமடைந்த கணேசன் தெல்லிப்பழை வைத்தியசாலையில் இரண்டு நாள்களாகத் தங்கிச் சிகிச்சை பெற்றார்.

பொலிஸார் கணேசனின் வீட்டுக்குச் சென்று பார்வையிட்டனர். தாக்குதலாளிகள் கணேசனைத் தாக்கிவிட்டுச் செல்லும்போது தம்முடன் வைத்திருந்த கத்தியை அங்கு விட்டுச் சென்றுவிட்டனர். அதனைச் சான்றுப் பொருளாக வீட்டார் பொலிஸாருக்குக் காட்டினர். ஆனால் பொலிஸார் அதனை எடுத்துச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார், விசாரணை மேற்கொண்டனர். கணேசனையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் தாக்குதலாளிகள் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியபோது அவர்களில் ஒருவருக்குத் திருப்பித் தாக்கியது குற்றம் என்று கூறி அவரைப் பொலிஸில் நேற்றுமுன்தினம் தடுத்து வைத்திருந்துள்ளனர். பின்னர் இரவு 9 மணியளவில் அவரைப் பிணையில் விடுவித்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர்களும் பிணையில் விடப்பட்டனர்.

இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல் இணங்கிப்போகுமாறு பொலிஸார் கூறினர். எனினும் நான் அதனை ஏற்கவில்லை. அவ்வாறிருந்தும் இதனை இணக்க சபைக்கு விட்டுள்ளனர். இணக்க சபையில் இந்த வழக்கு விசாரிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. நீதிமன்ற விசாரணைக்கே விரும்புகின்றேன் எனக் கணேசன் தெரிவித்தார். (த-4)

# மின்சாரத் தடைக்கு உடனடித் தீர்வு தேவை

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக 07

யாழ்.மாவட்டத்தில் பரவலாகப் பரீட்சைக் காலத்தில் மின் தடைப்படுவது மாணவர்களின் கல்வியைப் பாதிப்பதாக உள்ளது. மின்தடைக்கு என்ன காரணமாக இருந்தாலும் அதற்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:

வடக்கில் ஏதாவது பரீட்சை நடைபெறுவதாக இருந்தால் அந்தக் காலப்பகுதியில் மின் தடைப்படுவது தொடர்ச்சியான சம்பவமாக உள்ளது. ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சைக் காலத்தில் தொடர்ச்சியாக மின்தடைப்படுகிறது. தற்பொழுது ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையில் மாணவர்கள் இரவில் படிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில மாதங்களில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை நடைபெறவுள்ளது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தக் காலத்தில் இவ்வாறு மின்சாரம் தடைப்படுவது மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

> மின்தடைப்படுவதற்கு மின்சார சபையினர் கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

மின்தடைப்படுவதற்கு மின்சார சபையினர் கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. காரணம் சொல்லிக் கொண்டிருக்காது இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## வலல்லாவிட பிரதேச சபை தலைவருக்கு பிணை

கொழும்பு,ஓக 07

இலஞ்சம் பெற்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த வலல்லாவிட பிரதேச சபையின் தலைவர், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளார்.

50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும்தலா 25 ஆயிரம் ரூபா இரு சரீரப் பிணைகளில் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவருடைய கடவுச் சீட்டை நீதிமன்றத்தின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மணல் அகழ்வுக்காகப் பெந்தர பிரதேச சபைத் தலைவரிடமிருந்து 15 இலட்சம் ரூபாவினை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே வலல்லாவிட பிரதேச சபையின் தலைவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணியம்தோட்ட மக்களின் ஏக்கம்

கொழும்புத்துறை, ஓக. 7

மணியம் தோட்டப் பகுதியில் உள்ளக வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. அதனால் அந்தப் பகுதி மக்கள் போக் குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மணற்பாங்கான இந்தப் பிரதேசத்தில் கற்கள் கொண்டு பாதைகள் அமைக்கப்படாமையால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோரும் உருட்டிச் செல்ல வேண்டியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் பல இடங்கள் பள்ளமாகக் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இந்த கிராமத்தின் போக்குவரத்து பாதைகள் சீரின்றி காணப்படுவதால் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை நிறை வேற்றுவதில் பல்வேறு சிர மங்களை எதிர்நோக்குகின்றனர்.

உள்ளக வீதிகளில் அமைக்க வேண்டிய நீரோட்ட மதகுகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து பலமாதங்களாகியும் வீதிகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இலகுவான போக்கு வரத்தை மேற்கொள்ள வசதியாக விரைவாக வீதிகளை அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-135)

# ஆடி அமாவாசை தினத்தில் கீரிமலையில் மக்கள் திரள்



யாழ்ப்பாணம்,ஓக.7

ஆடி அமாவாசை தினமான நேற்று செவ்வாய்க்கிழமை பல்லாயிரக் கணக்கான மக்கள் கீரிமலை புனித தீர்த்தத்தில் பிதிர் கிரியைகளை மேற்கொண்டனர்.

கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த முறை பெரும் எண்ணிக்கையான மக்கள் கீரிமலைக்குச் சென்று தமது பிதிர்க் கடமைகளை நிறை வேற்றியுள்ளனர்.

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து கீரிமலைக்கு விசேட பஸ் சேவைகள் இடம்பெற்றன.

கீரிமலை சுற்றாடலில் மக்களின் வசதி கருதி சுகாதார மற்றும் அத்தியாவசியப் பணிகளும் ஏற்படுத்தப்பட்டன.

பொலிஸாரும் மோப்ப நாய்களின் உதவியுடன் தமது பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

ஆடி அமாவாசை தினத்தில் நகுலேஸ்வரர் ஆலயம், கீரிமலை தீர்த்தக்கரை விநாயகர் ஆலயம் போன்றவற்றில் விசேட பூஜை வழி பாடுகள் இடம்பெற்றன.

(ச-17-86)

" கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த முறை பெரும் எண்ணிக்கையான மக்கள் கீரிமலைக்குச் சென்று தமது பிதிர்க் கடமையை நிறைவேற்றியுள்ளனர்

## ஆனைக்கோட்டை ஆதி விநாயகர் ஆலயத்துக்கு இராஜகோபுரம்

நவாலி, ஓக. 7

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்துக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தை சோம சிவகுமாரக் குருக்கள் மக்களின் பங்களிப்புடன் பகுதி பகுதியாக புனரமைப்புச் செய்துள்ளார்.

இந்த நிலையில் ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் பலரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களின் பங்களிப்புடன் கோபுர வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ச-100)

## பாராட்டு விழா

தென்மராட்சி, ஓக.7

சாவகச்சேரி நகரசபையின் அலுவலகம், பொதுச் சந்தை, நூலகம் ஆகியவற்றில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற எட்டு உத்தி யோகத்தர்களுக்கு நகரசபை ஊழியர் நலன் புரிசங்கத்தினால் திங்கட்கிழமை சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விழா, நலன் புரி சங்கத் தலைவரும், நகரசபைச் செயலாளருமான கா.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

நகரசபை அலுவலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கணக்காளர் திருமதி சி.பரமசிவம், முகாமைத்துவ உதவியாளர்களான க.நவரத்தினசிங்கம், க.ஜீவானந்தம், செல்வி இ.ஜீவிதா, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான ந.கேதீஸ்வரன், க.சிவபாதசுந்தரம், இளைப்பாறிச் சென்ற நூலகர் ந.சுந்தரலிங்கம், கநவரத்தினம் ஆகி யோருக்கே சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இந்த உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பாராட்டி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, உப தலைவர் கு.சதாசிவமூர்த்தி, நிர்வாக அலுவலர் திருமதி க.கணேசலிங்கம், வருமானப் பரிசோதகர் சொ.சிவசுதன், நூலக உதவியாளர் சு.சுரேஸ்குமார் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். (ச-9)

# வலி. கிழக்கில் நடைபெற்ற அ.அட்டைகளுக்கு 2,500 பேர் நடமாடும் சேவையில் மனு

அச்சுவேலி, ஓக. 7

இந்த வருடம் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஐந்து தினங்கள் நடைபெற்ற தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவையில் 2,533 விண்ணப்பங்கள் ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பலர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளனர்.

முதலாம் கட்டமாக கடந்த ஜூன் மாத முற்பகுதியில் மூன்று தினங்கள் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. அதில் 1,830 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 328 விண்ணப்பங்களும், திங்கட்கிழமை அச்சுவேலி இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 375 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.



" தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவையில் 2,533 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பலர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஆகக்கூடுதலான நாள்கள் நடமாடும் சேவை வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்டிருப்பதோடு, ஆகக்கூடிய அளவு விண்ணப்பங்களும் அங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் கட்ட நடமாடும் சேவை 'பவ்ரல்' அமைப்பின் அனுசரணையுடனும் இரண்டாம் கட்ட நடமாடும் சேவை 'கபே' மற்றும் 'சீ.ஏச்.ஆர்' நிறுவனங்களின் கூட்டு அனுசரணையுடன் நடத்தப்பட்டன.

இரண்டு கட்டங்களாக ஐந்து தினங்கள் நடைபெற்ற நடமாடும் சேவையில் விண்ணப்பத்துக்கான முத்திரை, புகைப்படம், பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணங்கள் முழுவதையும் அனுசரணை வழங்கிய நிறுவனங்கள் வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மேலும் பலர் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ச-11)

# போன கூரை இன்னும் வரக் காணோம்

தவம் கிடக்கும் தனியார் பஸ் நிலையம்



கொழும்புத்துறை,ஓக.7

யாழ். பண்ணைப் பகுதியில் அமைந்திருக்கும் தனியார் பஸ் நிலையக் கட்டடத்தின் கூரைப்பகுதி முற்றாக அகற்றப்பட்டு பல மாதங்கள் கடந்தும் இதுவரை மீளவும் கூரை அமைக்கப்படாது திறந்த நிலையில் காணப்படுகிறது.

கொழும்புச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் இந்தப் பகுதியில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்கின்றது. அதனைத் தவிர உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களும் தமது மார்க்கத்துக்கான பயணநேரம் வரும் வரை இப் பகுதியிலேயே தரித்து நின்று யாழ். பஸ் நிலையப் பகுதிக்கு செல்வது வழமையாகும்.

எனவே கொழும்புப் பயணிகளும், உள்ளூர் மினி பஸ் சாரதிகள், நடத்துநர்களும் பஸ் நிலையக் கூரையின்றி வெய்யிலில் காய்வதைத் தவிர்க்க அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களுக்கு உள்ளேயே முடங்கிக் கிடக்க நேரிடுகின்றது.

இந்தப் பகுதியில் இருந்து கொழும்புப் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் அடுத்து வரும் மழை காலத்தில் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே பஸ் நிலையக் கூரைப் பகுதியை புனரமைக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வைத்திய அதிகாரி (MBBS/RMO)
பகல்நேர வெளிநோயாளர் கடமைக்கு.
**தொடர்புகளுக்கு:- 021 221 9332**
நிர்வாகம், பரி ஓிக்கா மெதடிஸ்த வைத்தியசாலை, புத்தூர்.



## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள்.
0779086737 **GUNAA BEST PC**
52, Hospital Road, Jaffna.


# மரண அறிவித்தல்கள்

## டானியல் அந்தோனிப்பிள்ளை (அன்ரன்)

### (ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் அந்தோனிப்பிள்ளை நேற்று(06.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல்- ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், றோஸ்மலரின் அன்புக் கணவரும், அமலதாஸ்(பிரான்ஸ்), கலைச் செல்வி, தேவஜானகி(ஜானு, லண் டன்), ஜெயந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி (பிரான்ஸ்), வின்சன் போல் (றேமன்), ரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ரியேசன்(பிரான்ஸ்), தனுஸ், ரனிஸ்ரன், கிசோன்(லண்டன்), ஷானியா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(07.08.2013) புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனிதமிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.** **பிள்ளைகள், மருமக்கள்.**

## இராசேந்திரம் இராயப்பு



யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இராயப்பு கடந்த 04.08.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் -திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜேம்ஸ் -எவிசேமியா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் (மாணிக்கம்) பாசமிகு கணவரும் யூட் (பிரான்ஸ்), ரஜனா (சுவிஸ்), றொபினா, றீகன் (பிரான்ஸ்) டயானா, ரினா (பிரான்ஸ்), ஜெனற் (ஆசிரியர், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரியதாஸ், காலஞ்சென்ற ராசா, மற்றும் ராசாத்தி, மாசில்லா, மகாராசா, குமாரி (ஜேர்மனி), சூசைநாதன் (கனடா), றேமன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஜான்சன் (சுவிஸ்), அமலசேகர் (ஆசிரியர், புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை), உமா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஜெற்சன், ஜெனுஷா, கோமேக்சன், ருத்சயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (07.08.2013) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்று புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்:**
0776181272 0778470627 (30304) **குடும்பத்தினர்.**

## லொறியின் சாரதிக்கு அபராதம்

வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார், லொறியை நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போது நிறுத்தாமல் சென்ற லொறியின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பிரிவினரால் நடத்தப்பட்ட வீதிப் பரிசோதனையின்போது தென்னிலங்கையிலிருந்து காட்டு மரங்கள் ஏற்றி வந்த லொறி ஒன்றை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது லொறி நிற்காமல் சென்றுள்ளது. லொறியைத் துரத்திச் சென்று பிடித்து பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றபோது நீதிமன்றில் சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ச-9)


**இன்று சந்நிதியானுக்கு கொடியேற்றம்**
சந்நிதியானின் அருள் திக்கெட்டும் பரவட்டும்.

**சந்நிதியானின் திருவிழாக் காலத்தில்**



**விசேட விலைக்குறைப்பு**

HONDA CD 70- 135, 000 மட்டுமே

**HONDA WORLD**
பருத்தித்துறை பிரதான வீதி, நெல்லியடி.
021 226 4416, Hot- 0770387444



இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 1:2)

## வேதாகம கருத்தரங்கு



இடம் :- A.O.G சபை
இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

காலம் :- 8th, 9th திகதி, ஒகஸ்ட் 2013
வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை

நேரம் :- காலை 9.00 மணிமுதல் 1.00 மணிவரை

இக்கடைசி காலத்தில் சத்தியத்தை இன்னும் அதிகமாக அறிந்து கர்த்தருக்குச் சாட்சியாய் எழும்பிப்பிரகாசிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

இடம் :- பிளைக்றோட்,
புலியடி, சங்கானை.

காலம் :- 10th, 11th திகதி, ஒகஸ்ட் 2013
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- மாலை 4.30 மணிக்கு

*தீராத வியாதிகள், பிசாசின் பிடி, கவலை, கண்ணீர், கஸ்ரம் யாவற்றிலிருந்தும் விடுதலை பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.*

யாழ் கிறிஸ்தவ சபைகள், ஸ்தாபனங்களின் ஐக்கியம்.


# மரண அறிவித்தல்

## திருமதி நீலாயதாக்ஷி சிவஞானம் (வண்ணார் பண்ணை)



வண்ணார் பண்ணை கோபால் ஒழுங்கையைச் சேர்ந்த பண்ணிசைப்புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்களின் துணைவியார். திருமதி. நீலாயதாக்ஷி அவர்கள் (06.08.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வே.சிவஞானத்தின் (நில அளவை உத்தியோகத்தர்), அன்புத் துணைவியாரும், முத்துத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவகிருபா(R.M.O Chilaw), சிவ பாலன்(தொழில் நுட்ப உத்தியோகத்தர், றூலிங்ஸ் நிறுவனம்), சிவகேதீசன், சிவகலா (ஆசிரியை, யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா விதித்தியாலயம்), Dr. சிவகோணேசன் (போதனா வைத்திய சாலை யாழ்ப்பாணம்), சிவகீதா(ஆயுர் வேத மருத்துவ உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், சாம்பவதாஸ்(மருந்தாளர், ஆதார வைத்தியசாலை, சிலாபம்), மல்லிகா, சண்முகராசா(சுன்னாகம், ப.நோ.கூ.சங்கம்), Dr. தாரணி (போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்), முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ் சென்றவர்களான நடராசா, கருணாகடாட்சி மற்றும் தியாகராசா, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பூமகள் மற்றும் நாமகள், சிவராசா ஆகியோரின் மைத்துனியும், சத்தியா, சிவதாமினி, சிவசங்கர், சிவவாசினி, சுபப்பிரியன், மயூரி, மனாமிர்தன், சிவாம்சன், கோபிராம், மாதங்கி, தேஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.08.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2.00மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, கோபால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

**தகவல்: குடும்பத்தினர்.**
021 222 8892


10 August 2013 அன்று கொழும்பு BMICH இல் நடைபெறவுள்ள
பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு

# NORTH LANKA IIT

வழங்கும் அரிய சந்தர்ப்பம்!

**50% Scholarship!**

**SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!**
**Business University - Costa Rica**

நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!

*** B.Sc. in Comp. Sc.**
Qualification:- HND or O/L or A/L
Duration:- 1 - 3 Years

*** M.Sc.**
*** MBA**
Duration:- 01 Year

**Special Batch!**

கல்வியியற் கல்லூரி மற்றும்
பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!

சலுகைக் கட்டணத்தில் ....

பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் மாணவர்களுக்கு
North Lanka IIT இனது வாழ்த்துக்கள்!

#113, Luxan Plaza, Navalar Road, Jaffna. Tel: 0215677774 Mob: 0777592666


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் உரிமையைப் பெற களம் அமைத்தது தேர்தல்

### கூட்டமைப்பு வேட்பாளர் கூறுகிறார்

மன்னார்,ஓக.7
கடந்த 30 வருடங்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்கள், தமது சுய உரிமையையும், சுய கௌரவத்தையும் ஈட்டிக் கொள்ளும் தருணமாக வடமாகாண சபைத் தேர்தல் அமைந்துள்ளது. இந்த நிலையில் ஒட்டு மொத்த தமிழர்களும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பின் அணிதிரண்டு தமிழர்களின்பலத்தை அரசுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட வேட்பாளர் இருதயநாதன் சாள்ஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடமாகாண சபைத் தேர்தலை உலக நாடுகள் மிகவும் அக்கறையுடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்கள் பட்ட துன்ப, துயரங்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள வடமாகாண சபை தேர்தல் எமக்குக் களம் அமைத்துத் தந்துள்ளது. தமிழ் மக்களின் சுய உரிமையை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்று முதல் இன்று வரை பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

எமது மக்களை அடிமைகளாக்கி வேடிக்கை பார்க்கும் அரசுக்கு தமிழர்களின் பலம் என்ன என்பதை நாம் காட்ட வேண்டும்.

தமிழர்கள் அடிமைகள் என்ற அவபெயரில்இருந்து விடுதலை பெற அனைவரும் தமிழ் தேசியக்கூட்டமைப்பை ஆதரித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பை வெற்றியடையச் செய்ய வேண்டும்-என்றார்.(ச-12)

## தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் நாம் அதை வெளிப்படுத்தவே தேர்தலில் போட்டி

### கூறுகிறார் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி தலைவர்

கிளிநொச்சி, ஓக.7
தமிழர்கள் எப்போதுமே தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்ற செய்தியை உலகுக்கு வெளிப்படுத்தவே வடமாகாணத் தேர்தலில் களம் இறங்குகிறோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வடமாகாணச் சபைத் தேர்தல் வேட்பாளரும் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் தலைவருமாகிய அ.பசுபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டதாகவே சிங்கள தேசம் நம்பிக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் எப்போதுமே தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்ற செய்தியை சிங்கள தேசத்துக்கும் உலகுக்கும் தெரியப்படுத்தும் வகையில் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழர்கள் தமது வாக்கு பலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

எமது மண்ணை 30 ஆண்டு காலமாக ஆயுதப் போருக்குள் தள்ளிவிட்ட சிங்கள அரசுகளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் காரணமாக எமது சொந்த மண்ணிலே நிம்மதியாக வாழ முடியாத இக்கட்டான சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மேலோட்டமாகப் பார்க்கின்றவர்களுக்கு தமிழ் மக்கள் நிம்மதியாக உள்ளார்கள் என்ற தோற்றம் தெரியலாம்.



கிளிநொச்சி நகரைப் பார்க்கின்ற போது அது அத்தகைய விதத்தில் தோன்றும் ஆனால் நகரிலிருந்து கிராமங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தால் உண்மை நிலை தெரியும்.

எமது மண்ணிலே சுயமாகச் சுயதொழில் செய்து வாழ்ந்த மக்கள் தான் கிளிநொச்சி மக்கள். ஆனால் இன்று அந்த நிலை காணப்படவில்லை.

கிளிநொச்சி நகரின் மிக வசதி படைத்த வர்த்தகர்கள் கூட கடன் சுமையால் தலைமறைவாவதும், தற்கொலை செய்து கொள்வதும் வழக்கமான நிகழ்வாக மாறிவிட்டது. தேர்தலில் நிற்கும் நான் கூட புலனாய்வுத் துறையாளர்கள் என்று கூறுபவர்களினால் மறைமுக அச்சுறுத்தல்களை எதிர் கொண்டுள்ளேன்.

கொண்ட இலட்சியம் குன்றிடாத கொள்கை வீரர்கள் வாழ்ந்த மண்ணிலே மிகுந்த நெருக்கடிகளுடன் நாம் வாழ்கின்றோம். ஆனால் நாம் தோற்க மாட்டோம் என்ற செய்தியை உலகுக்கு இந்தத் தேர்தல் வெற்றி மூலமாக நாம் அறிவிக்க வேண்டுமென அவர் மேலும் அங்கு தெரிவித்தார். (க)




## காணி, பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்குமென்பதே எதிர்பார்ப்பு

### கூறுகிறார் கிளிநொச்சி வேட்பாளர் குருகுலராசா

கிளிநொச்சி, ஓக.7
காணி, பொலிஸ் அதிகாரங்கள் எமக்குக் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் தேர்தலில் களம் இறங்கியுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளராக போட்டியிடுபவருமான த.குருகுலராஜா.

வடமாகாணசபைத் தேர்தலில் எதற்காக போட்டியிடுகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணசபைத்தேர்தலில் போட்டியிடுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் ஒரு முக்கியமான காரணம் உள்ளது. மக்களால் நாம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் மக்களுக்கு நல்லாட்சியை எம்மால் வழங்க முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல தரப்பில் இருந்தும், நண்பர்களிடம் இருந்தும் தேர்தலில் போட்டியிடுமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அனைவரதும் விருப்பத்துக்கேற்ப இந்தத் தேர்தலில் களம் இறங்கியுள்ளேன்.

இன்று பலரும் பலவாறாக பேசிக் கொள்கிறார்கள். 13 ஆவது திருத்தச் சட்ட மூடாக எமது மக்களுக்கு விடிவு கிடைக்குமா என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

ஆனால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எமக்கு வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் நாம் களம் இறங்கியுள்ளோம் என நம்புகின்றேன்.

மேலும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைவரும் புதியவர்களாக உள்ளனர். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எமக்குத் தலைமை தாங்குகிறார்.

கிளிநொச்சியின் புளியம்பொக்கணைப் பிரதேசத்தில் தான் நான் வாழ்கின்றேன். வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் அரச ஊழியர்கள் பெருமளவில் கலந்து கொண்டசமுர்த்தி வங்கிக்கான அடிக் கல் நடும் நிகழ்வு ஓர் அரசியல் நிகழ்வாகவே நடந்துள்ளது. இது தேர்தல் விதிகளுக்கு முரணானது - என்று தெரிவித்தார். (க)

## தேர்தல் பரப்புரை கூட்டம்

வவுனியாவடக்கிலுள்ளநெடுங்கேணியில் ஆளும் தரப்பினரின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டம் கடந்த 4 ஆம் திகதி காலை 9 மணியளவில் அமைச்சர் றிசாத் பதியுதீனின் கட்சியின் சார்பில் போட்டியிடும் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்படி கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

சுமார் 300 வரையான பொதுமக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

## அபிவிருத்தியை எதிர்பார்த்த மக்கள் ஏமாந்துபோய்விட்டனர்

### அரசே காரணம் என்கிறார் பிரதேச சபை உறுப்பினர்

வீதி அபிவிருத்தி- உட்கட்டுமான அபிவிருத்தி என்பன நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி சபைகள் ஊடாகச் செய்யப்படும் என எதிர்பார்த்த மக்களை நாம் ஏமாற்றி விட்டோம் என்று வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ். பண்டத்தரிப்பு பிரான்பற்று - மாதகல் - மானிப்பாய் - நவாலியில் மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இதற்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

வரலாற்றில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு சந்தர்ப்பம். தாம் விரும்பிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பு.

இந்த மேலான வாய்ப்பைப் பயன்படுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து கட்சிகளும் ஒருங்கிணைந்து போட்டியிடுகின்றன.

தமிழரின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தருணம் இதுவாகும். இந்தத் தருணத்தில் நாம் ஒருங்கிணைந்த ரீதியில் பேதங்களை மறந்து போரினால் அழிவடைந்த வடக்கு பிரதேசத்தை மீட்க செயற்பட வேண்டும்.

ஏனைய கட்சியினர் தமிழர்களின் உரிமை, போர் அழிவு தொடர்பாகப் பேசமாட்டார்கள். அற்ப சலுகைகள் குறித்து மட்டுமே பேசுவர். அரசினால் உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக என்ன செய்ய முடிந்தது? வடக்கு-கிழக்கு உள்ளூர்சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக 200 மில்லியன் செலவழிக்கப்படும் என அரசுதான் கூறியது. ஆனால் அது முழுமையாக நடைபெறவில்லை.

மத்திய அரசு ஏ-9 வீதியை மட்டுமே புனரமைத்தது.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளின் கீழும் 200 முதல் 300 வரையிலான வீதிகள் உள்ள போதும் பல வீதிகள் புனரமைப்பு செய்யப்படவில்லை.

எனவே, இது தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான தேர்தல் - மக்கள் ஒன்றிணைந்து வாக்களித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டும்- என்றார். (எ-41)

## கிளிநொச்சியில் தேர்தல் விதிகளை மீறுகின்றனர் அரச தரப்பினர்

அக்கராயன், ஓக.7
கிளிநொச்சி மாவட்டத்தில் அரச தரப்பினரால் தேர்தல் விதிமுறைகளை மீறிய வகையில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டாவளை புளியம்பொக்கணையில் சமூர்த்தி வங்கிக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வடமாகாண தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கரங்களைப் பலப்படுத்துங்கள் என்று குரல்கள் எழுப்பியுள்ளனர்.

> வடமாகாண ஆளுநர் எந்தவொரு பாடசாலை நிகழ்விலும் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளக்கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பிய போதிலும் அரச தரப்பினர் இதனைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை

இதேவேளை- கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தமிழ் விழா என்ற பெயரில் மேற்படி அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தனது பரிவாரங்களுடன்கலந்துகொண்டு அரசியல் பணிகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண ஆளுநர் எந்தவொரு பாடசாலை நிகழ்விலும் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளக்கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பிய போதிலும் அரச தரப்பினர் இதனைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை என இங்குள்ள மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துடன் இணையுங்கள்

## நகரி மக்கள் கோரிக்கை

சித்தூர், ஓக.7
ஆந்திரா பிரிவது உறுதியானால் தமது பகுதிகளை தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் நகரி பகுதி மக்கள்.

இந்தியாவின் ஆந்திரா மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் தமிழர்கள் அதிக அளவில் வசிக்கிறார்கள். இங்குள்ள நகரி, நாகலா புரம், விஜய புரம் போன்ற பகுதிகளில் 60 சதவீதம் தமிழர்கள் உள்ளனர்.

ஆந்திரா பிரிக்கப்பட்டு தெலுங்கானா அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இங்கும் போராட்டங்கள் நடந்து வருகிறது.

இந்தநிலையில் ஆந்திரா பிரிவது உறுதியானால் எங்கள் பகுதிகளை தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்ற புதிய கோரிக்கையை வைத்து நகரி தமிழர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகிறார்கள்.

அதேவேளை, ராயலசீமா பகுதியில் உள்ள கர்னூல் மாவட்டத்தை தெலுங்கானாவுடன் சேர்க்க வேண்டும் என அந்தப் பகுதி காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

புதிதாகக் கிளம்பியுள்ள இந்தக் கோரிக்கையால் இந்திய மத்திய அரசுக்குப் புதிய தலைவலி ஏற்பட்டுள்ளது.(ற)



இந்தியாவின் ஹைதராபாத்தில் வருடாந்தம் 11நாள்கள் நடைபெறும் இந்துக்களின் பாரம்பரியத் திருவிழாவான போனலு ஆரம்பமாகவுள்ளது. அதையடுத்து இடம்பெற்ற வீதிப் பவனியில் காளியம்பாள் போன்று வேடமிட்டுக் கலந்துகொண்ட பக்தர்.

## மழைகால கூட்டத் தொடர் ஆரம்பம்

புதுடில்லி, ஓக.7
இந்திய நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத்தொடர் பெரும் எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் நேற்று ஆரம்பமாகியது.

12 நாள்கள் மட்டுமே இந்த மழைக்காலக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளதால் நிதித்துறை சார்ந்த பிரேரணைகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசு முனைப்புக் காட்டி வருகிறது.

அதற்காக பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களுடன் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

எனினும் இந்திய எல்லையில் இடம்பெற்ற ஊடுருவல் சம்பவத்தால் நேற்றைய கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. அதையடுத்து நேற்றைய கூட்டம் பயனின்றி முடிந்தது. (ற)

# பாக். ராணுவ உடையில் வந்தவர்கள் தாக்குதல்

## இந்திய இராணுவத்தினர் ஐவர் சாவு

இஸ்லாமாபாத், ஓக.7
பாகிஸ்தான் இராணு உடையில் இந்திய எல்லைக்குள் ஊடுருவியவர்கள் நடத்திய தாக்குதலில் 5 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் எல்லையை கடந்து உள்நுழைந்த பாகிஸ்தான் இராணுவ உடையில் இருந்தவர்கள் இந்திய நிலைகள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதையடுத்து இந்திய நிலைகளில் இருந்தும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி,



''பாகிஸ்தான் இராணுவத்தின் உடையுடன் வந்தவர்கள் எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் 5 பேர் உயிரிழந்ததுடன் ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இதுகுறித்து பாகிஸ்தான் அரசிடம் கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் குறித்து விளக்கம் கேட்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள காஷ்மீர் முதலமைச்சர் ஓமர் அப்துல்லா,

''இது ஏற்றுக்கொள்ள முடியாதது. இவ்வாறான தாக்குதல்கள் பாகிஸ்தானுடன் எமக்கு உள்ள ராஜதந்திர உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்பதை பாகிஸ்தான் புரிந்துகொள்ள வேண்டும்'' என்று தெரிவித்தார். (ற)

# தெலுங்கானா பிரச்சினை: சமாதானப்படுத்தக் குழு

சீமாந்த்ரா, ஓக.7
தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் அந்தப் பகுதித் தலைவர்களைச் சமாதானப்படுத்த இந்திய மத்திய அரசு ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளது.

ஏ.கே.அந்தோனி தலைமையிலான இந்தக் குழுவில், காங்கிரஸ் பொதுச் செயலாளரும், ஆந்திரா மாநில பொறுப்பாளருமான திக் விஜய் சிங்கும் இடம் பெற்றுள்ளார்.

இந்தக் குழு குறித்த பகுதிகளுக்குச் சென்று காங்கிரஸ் தலைவர்களையும் அந்தப் பகுதிகளைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட உள்ளது.

இந்த நிலையில் கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமாவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அடுத்த கட்டம் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்ற இல்லத்தில் சந்தித்து பேசியுள்ளனர்.

சந்திப்பின் முடிவில் தெலுங்கானா மாநில அறிவிப்பைத் திரும்ப பெற வேண்டும் என்ற கோரிக்கையுடன் பிரதமர் மன்மோகன் சிங்கையும், ஏ.கே.அந்தோனியையும் சந்திக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதேவேளை, தனித் தெலுங்கானாவுக்கு எதிராக சீமாந்திரா பகுதிகளில் நடைபெறும் தீவிரப் போராட்டம் காரணமாக தினமும் ஆந்திர மாநில போக்குவரத்து கழகங்களுக்கு சுமார் 9 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது என்று அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது. (ற)

## மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

சென்னை, ஓக.7
எரிபொருள் விலை உயர்வை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய தா.பாண்டியன், ''பெற்றோல், டீசல் விலை உயர்வால், அத்தியாவசிய பொருள்ளகளின் விலையும் உயர்ந்து வருகின்றது'' என்று தெரிவித்தார்.(ற)

# அணு உலைக்குக் கீழே எரிமலை

## அணு உலை எதிர்ப்பாளர்கள் 'திடுக்' தகவல்

காஞ்சிபுரம், ஓக. 7
கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்கு அருகே நிலத்துக்குக் கீழ் எரிமலை உண்டு என்று தேசிய பேரிடர் மேலாண்மைக் கழகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் மத்திய அரசு இது குறித்த கேள்விக்கு எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லை என்று திடுக்கிடும் தகவலை தெரிவித்துள்ளனர் கல்பாக்கம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள்.

ஹீரோசிமா – நாகசாகியின் அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நினைவுதினத்தை முன்னிட்டு கல்பாக்கம் அணு உலை எதிர்ப்பாளர்கள் சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

அப்போது கருத்துத் தெரிவித்த கல்பாக்கம் அணுஉலை



எதிர்ப்பாளர்கள் குழுவில் இடம்பெற்றுள்ள டாக்டர் புகழேந்தி,

''சர்வதேச அணுசக்தி கழகம், புகுசிமா அணு உலை விபத்து ஏற்பட்ட பின்னர் வெளியிட்ட ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டி கல்பாக்கம் அருகில் கடலுக்கடியில் எரிமலை இருப்பதை சுட்டிக் காட்டினோம். ஆனால் அணுசக்தி நிர்வாகத் தரப்பில், 'இந்திய புவியியல்த்துறை ஆய்வுகளில் எரிமலை இருப்பதற்கான சான்றுகள் ஏதும் இல்லை' என பதில் தரப்பட்டது.

பின்னர் இந்தியப் பிரதமரை தலைவராகக் கொண்டு இயங்கும் தேசிய பேரிடர் மேலாண்மைக் கழகத்தின் இணையதளத்தில் கல்பாக்கம் அருகே எரிமலை வரைபடம் உள்ளது.

அதனை மேற்கொள்காட்டி இந்திய புவியியல் துறைக்கும், அரசுக்கும் எரிமலை இருப்பது குறித்தான தகவல் தெரிந்துதானே இருக்கின்றது என்று நாங்கள் எழுப்பிய கேள்விக்கு இதுவரை அரசிடம் இருந்து எந்த பதிலும் இல்லை'' என்று தெரிவித்தார். (ற)

## சோனியா, ராகுல் பாதி நாள்களே நாடாளுமன்றுக்கு

புதுடில்லி, ஓக.7
கடந்த நான்காண்டுகளில் நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற மக்களவைக் கூட்டங்களில், ஏறத்தாழ பாதி நாள்களே காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் துணைத்தலைவர் ராகுல் காந்தியும் கலந்துகொண்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்திய நாடாளுமன்ற மக்களவைக் கூட்டம் மொத்தம் 314 நாள்கள் நடைபெற்றன. அவற்றில் சோனியா காந்தி 48 சதவீதமும், ராகுல் 43 சதவீத கூட்டங்களிலும் கலந்து கொண்டனர்.

கட்சித் தலைவர்களில் முலாயம்சிங் யாதவ் (சமாஜ்வாதி) அதிக நாள்கள், அதாவது 86 சதவீத கூட்டங்களுக்கு வந்து இருக்கிறார்.(ற)

# பேஸ்புக்கால் மாட்டிய திருடன்

சென்னை, ஓக.7
மும்பையில் வேலை செய்த வீட்டில் இருந்து ரூபா 75 லட்சம்பெறுமதியான பொருள்களை சுருட்டிக் கொண்டு ஓடியவர் பேஸ்புக்கில் 'பிரண்ட்ஸ் ரிக்குவஸ்ற்' கொடுத்து மாட்டிக் கொண்டார்.

மும்பையில் பொறியியலாளர் ஒருவரின் வீட்டில் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த சுப்ரதா சன்யால் என்ற இளைஞன் வீட்டு வேலைக்கு சேர்ந்தான். ஐந்து நாள்கள் ஒழுங்காக வேலை பார்த்த சன்யால், ஆறாம் நாள் பொறியியலாளருக்கும் அவரது மனைவிக்கும் பாலில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து விட்டு, வீட்டிலிருந்த 75 லட்சம் ரூபா பெறுமதியுள்ள பொருள்களைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விட்டான். பொலிஸார் சல்லடை போட்டுத் தேடியும் சிக்கவில்லை.

இந்தநிலையில் அமெரிக்காவில் வசிக்கும் குறித்த பொறியியலாளரின் மகன்கள் இருவருக்கும் பேஸ்புக்கில் ஒரு 'பிரண்ட்ஸ் ரிக்குவஸ்ற்' வந்தது.

அதை அனுப்பியது வேறு யாருமல்ல. சுப்ரதா சன்யால் தான். அவனை இனங்கண்ட பொறியியலாளரின் மகன்கள் இருவரும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதையடுத்து பேஸ்புக்கில் அவனுடன் தொடர்பில் இருந்தபடி வலை விரித்தனர் இணையக் குற்றத் தடுப்புப் பொலிஸார். பலநாள்களாக 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டிருந்த சன்யால் நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டான்.

திருடிய வீட்டுக்காருக்கு ஏன் பேஸ்புக்கில் 'பிரண்ட்ஸ் ரிக்குவஸ்ற்' கொடுத்தாய் என்று கேட்டபோது, ''அது வேண்டுமென்று செய்தேன். அதை வைத்து என்னைப் பிடிக்க முடியும் என்று எனக்குத் தெரியாது'' என்று தெரிவித்துள்ளான் சன்யால்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 வருடங்களை மருத்துவ மனையில் கழிக்கும் மனிதர்

பேர்லின், ஓக.7

தனது வாழ்க்கை முழுவதையும் ஒருவர் மருத்துவ மனையிலேயே கழித்து வருகிறார். பிரேசிலைச் சேர்ந்தவர் போலோ ஹென்பீக் மச்சேடோ.

குழந்தையாக இருந்த போது போலோவை போலியோ நோய் தாக்கியதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் இன்றுவரை செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டு சிகிச்சை பெற்று வரும் போலோவுக்கு மருத்துவ மனையே உலகம்.

தற்போது கணினி வரைகலை நிபுணராக இருக்கும் போலோ தனது வாழ்க்கையை தொலைக்காட்சிக்கு வரைகலை படமாக உருவாக்கி வருகிறார். மருத்துவமனை படுக்கையிலும் சக்கர நாற்காலியிலும் 45 ஆண்டுகளை அவர் இது வரை கழித்துள்ளார்.

''எனது இரண்டாவது வயதில் தாயை இழந்து விட்டேன். மருத்துமனையின் தளங்கள், அறைகள், அங்கு வரும் மனிதர்கள் தான் எனது உலகம். வாழ்க்கையின் பெரும்பாலான விடயங்களைக் கற்பனையிலேயே இரசித்துள்ளேன். இங்குள்ள மருத்துவர்களும், பணியாளர்களுமே எனது நண்பர்கள். எனது 32 வயதில் முதன்முதலாக கடலைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்'' என்று கூறுகின்றார் போலோ ஹென்பீக். (ற)

## கராச்சியில் குண்டு வெடிப்பு; 3 பேர் சாவு


இஸ்லாமாபாத், ஓக.7

பாகிஸ்தான், கராச்சி நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் குழந்தை உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

லாகூரில் இருந்து கராச்சிக்குச் சென்று கொண்டிருந்த ரயிலிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுவரை குறித்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை. எனினும் தலிபான்கள் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாக மிரட்டல்கள் விடுத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)





இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் தலைநகர் ஹிரோஷிமா மீது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அமெரிக்காவால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரத்தைத் தாண்டியது. உயிரிழப்பு எண்ணிக்கையை விட, பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகம். அதுவே உலகின் முதலும், கடைசியுமான அணுகுண்டுத் தாக்குதல். உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும், உலகில் அமைதி நிலவ வேண்டியும் வருடந்தோறும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி ஹிரோஷிமா நினைவு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஜப்பானில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் ஒரு காட்சி. (ற)

## வேலைக்காக பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

பீஜிங், ஓக.7

நல்ல வேலைவாய்ப்புக்காக பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்து கொள்ளும் சீன இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

நன்கு படித்திருந்தாலும் அதிக சம்பளத்தில் நல்ல வேலை கிடைப்பதற்கு முக அமைப்பும் முக்கியம் என்ற எண்ணம் பெரும்பாலான சீன இளைஞர்களிடையே பரவியுள்ளது.

சராசரியாக தினமும் 200 பேர் முக சீரமைப்பு அறுவை சிகிச்சைக்காக வருகின்றனர் என்று அங்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று கூறுகின்றது.

தற்போது சீனாவில் கோடை விடுமுறை என்பதால் அந்த எண்ணிக்கை இரண்டு மடங்காகியுள்ளதாம். (ற)



# ஆயுதப் போட்டிக்கு முடிவு வேண்டும்

## வலியுறுத்துகிறார் பாக். பிரதமர்

இஸ்லாமாபாத், ஓக.7

தெற்காசியப் பிரந்தியத்தில் ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்.

சவூதி அரேபியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

''தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதே அனைவரது விருப்பமுமாகும். அந்தப் பிராந்தியத்தில் நிலவும் ஆயுதப் போட்டிக்கு அனைவரும் இணைந்து முடிவு கட்ட வேண்டும். போர்த் தளபாடங்கள், ஆயுத உற்பத்தி என்பவற்றில் சம



நிலை காணப்படாதவிடத்து அதற்கான சாத்தியங்கள் அறவே இல்லை.

இந்தியாவும், பாகிஸ்தானும் பாதுகாப்புத் துறைக்கான செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவிடயத்தில் இரு நாடுகளும் பாதுகாப்புத் துறைக்கான செலவின் உச்சவரம்பை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். காஷ்மீர் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசித்து ஒருங்கிணைந்தவரைவுக் கொள்கை ஒன்று உருவாக்கப்படவுள்ளது'' என்று தெரிவித்துள்ளார் நவாஸ் செரிப்.

ஆப்கன் பிரச்சினை தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்ட போது, ''அயல் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையை பாகிஸ்தான் கடைப்பிடிக்கின்றது. அங்குள்ள எந்தவொரு தனிப்பட்ட அமைப்பையும் பாகிஸ்தான் ஆதரிக்காது'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கைக்கு வரவுள்ள மாலைதீவு பொலிஸார்

## ஆலோசிக்கிறது அந்நாட்டு அரசு

மாலே, ஓக.7

போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கும் முகமாக இலங்கையில் தனது பொலிஸ் பிரிவொன்றை நிலைநிறுத்துவதற்கு மாலைதீவு அரசு ஆலோசித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவில் போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலனவர்கள் வெளிநாட்டவர்களே. அதையடுத்தே இந்தத் திட்டம் குறித்துக் கரிசனை கொண்டுள்ளது மாலைதீவு அரசு.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்நாட்டின் பொலிஸ் ஆணையாளர் அப்துல்லா றியாஸ்,



''மாலைதீவுக்குள் போதைப் பொருள்களைக் கொண்டு வருபவர்கள் வெளிநாட்டவர்களே. இந்தியா மற்றும் இலங்கையில் இருந்தே பெருமளவிலான கடத்தல்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான கடத்தல்களைத் தடுப்பதற்கு அந்தந்த நாட்டில் மாலைதீவுப் பொலிஸார் கடமையாற்றுவது அவசியமானதே'' என்று தெரிவித்துள்ளார்.(ற)

# கைமாறவிருக்கின்றது 'வாஷிங்டன் போஸ்ட்'

வாஷிங்டன், ஓக.7

அமெரிக்காவின் பிரபல பத்திரிகை நிறுவனமான 'வாஷிங்டன் போஸ்ட்டை' புகழ்பெற்ற இணைய வர்த்தக நிறுவனமான அமேசன்.கொம் நிறுவுநனர் ஜெப் பெசோஸ் வாங்கவுள்ளார்.

அமெரிக்காவின் மிகப்பெரிய ஊழல் விவகாரமான 'வோட்டர்கேட் ஸ்கேண்டலை' வெளிச்சத்துக்கு கொண்டு வந்த பெருமையைக் கொண்டது வாஷிங்டன் போஸ்ட். 80 வருடப் பாரம்பரியம் மிக்க வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை அண்மைக்காலமாக விளம்பர வருவாய் சரிவினாலும், வாசகர் வட்டம் சரிவடைந்ததாலும் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது. இந்த நிலையில் ஜெப் பெசோஸ் 250 மில்லியன் டொலர் கொடுத்து அந்தப் பத்திரிகை நிறுவனத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவுள்ளார்.

மிகச் சிறந்த தொழிலதிபராக விளங்கும் ஜெப் பெசோஸ் வாஷிங்டன் போஸ்ட்டை எப்படி வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்லவுள்ளார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

### ஜெப் பெசோஸ்

அமெரிக்காவில் பிறந்த ஜெப் பெசோஸ் அமேசன்.கொம் என்ற இணைய வர்த்தக நிறுனத்தின் தலைவரும், முக்கிய தலைமை நிர்வாகியும் ஆவார். சாதாரண புத்தக விற்பனையில் தொடங்கிய இந்த நிறுவனத்தை தற்போது இணைய விற்பனையில் உலகளவில் பெரிய நிறுவனமாக மாற்றியுள்ளார் பெசோஸ். (ற)

# காட்சி மாறும் சிரியப் போர்

## அலிபோ நகரையும் சுற்றி வளைக்கிறது சிரிய இராணுவம்

அலப்போ, ஓக. 7

சிரிய உள்நாட்டுப் போரில் கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியிருந்த நிலை மாறித் தற்போது சிரிய இராணுவத்தினரிடம் ஒவ்வொரு நகரமாக இழந்து வருகின்றனர் கிளர்ச்சியாளர்கள்.

போர் ஆரம்பித்த காலப் பகுதியில் சிரிய இராணுவத்தினருக்கு அடி மேல் அடி கொடுத்து முக்கிய நகரங்களைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர்.

தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சில கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி வரும் நிலையில் சிரிய இராணுவத்தின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது கிளர்ச்சியாளர்கள் தடுமாறி வருகின்றனர்.

முன்னர் வெளியே தலை காட்டாது இருந்த சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்தும் தற்போது களமுனைகளுக்குச் சென்று இராணுவத்தினரை உற்சாகப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

முக்கிய நகரான ஹோம்ஸை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள நிலையில் தற்போது அலிபோ நகரைக் குறிவைத்து பெரும் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகி வருகின்றது சிரிய இராணுவம்.

[illegible] அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. (ற)

## துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் சாவு

நியூயோர்க், ஓக.7

அமெரிக்காவில் பென்சிவேனியா மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபரொருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளான்.

[illegible] பிரயோகத்தை [illegible] செயற்பட்ட பொலிஸார் துப்பாக்கிதாரியைக் கைதுசெய்துள்ளனர்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07/08/2013

# இலங்கையில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பு

கொழும்பு,ஓக.7
இலங்கையில் இந்த வருடத்தின் முதலாவது அரையாண்டில் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
இந்தக் காலப் பகுதியில் 90 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பாலியல் தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார்.
இலங்கையில் கடந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான 41 பேர் அடையாளம் காணப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டார்.



இந்த வருடத்தின் குறித்த காலப் பகுதியில் இதுவரை 46 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இலங்கையில் இதுவரை 1,739 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகி உள்ளனர். எயிட்ஸ் தொற்றுக்குள்ளான 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கரை ஒதுங்கியது ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், ஓக.7
புங்குடுதீவு கண்ணகி அம்மன் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.
திங்கட்கிழமை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் வழங்கிய தகவல்களை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் சடலத்தை மீட்டனர்.
பின்னர் ஊர்காவற்றுறை நீதிவானின் பணிப்புரைக்கு அமைய சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ந-4-400)

# மனைவியை கொன்றவருக்கு தூக்கு தண்டனை

கொழும்பு,ஓக.7
கிருமி நாசினி ஊசியை ஏற்றி, தனது மனைவியைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிக்கு கேகாலை மேல் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை தூக்கு தண்டனை விதித்துள்ளது.



இந்த தண்டனை கேகாலை மேல் நீதிமன்றத்தின் நீதிபதி மேனகா விஜேசுந்தரவினால் விதிக்கப்பட்டுள்ளது.
2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி கேகாலை அங்ஹெட்டிகம பகுதியில் தனது மனைவியைக் கொலை செய்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டு இவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**காணி விற்பனைக்கு**

சுதுமலை வடக்கு அம்மன் கோயில் வீதியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி (ஒரு பக்கம் Road side lane face பண்ணியிருக்கிறது) சுத்தமான உறுதிப் பத்திரத்துடன் plan உட்பட விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 509 1731 (C/10836) (6.3)

**பாடசாலை சேவை**

யாழ். பிரபல பெண்கள்
பாடசாலைகளுக்கு
சென்றுவருவதற்கு
769, 764 மற்றும் 782
வழிகளினூடான வான்
சேவை எம்மிடம் உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம்:
077 220 9566,
077 220 9595
(C/10783)(3.6.11)

# மந்திகை புதிய மீன் சந்தை மக்கள் பாவனைக்கு



வடமராட்சி, ஓக.7
பருத்தித்துறை பிரதேச சபை யினால் மந்திகை பொதுச் சந்தை வளாகத்தில் புதிய மீன் சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் வடக்கின் வசந் தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மந்திகை பொதுச் சந்தை மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கட்டடத்துக்கு அருகில் மீன் சந்தை ஒன்று அதே நிதியில் கட்டப்பட்டு பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. (ச-8)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.7
வட மாகாணத்தில் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ந-14)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

நல்ல இன ஜேர்மன்
செப்பேட் தாய் மற்றும் ஆண்
குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 121 7541
(30295) (4.6.3)

மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில்

சுடர்ஒளி புலமைச்சுடர் நடத்தும்
தரம் 5 மாணவர்களுக்கான
வருடாந்த இலவசக் கருத்தரங்கு



காலம் :
08/08/2013
(வியாழக்கிழமை)

நேரம் :
காலை 09.00
மணி தொடக்கம்
04.00 மணிவரை

இடம்
மன்னார் நகரசபை மண்டபம்

வளவாளர்கள்
ரீ. திலீப்குமார், ஜி. கஜன், ஏ.ஜெயநேசன்

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து
மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை
பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது
சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
011 5738855 / 071 6850005

**சிறுநீரகம் தேவை**

41 வயதுடைய ஆண் நோயாளி ஒருவருக்கு O⁺ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:
077 955 9443, 077 903 0383
(30193) (3.6.11)

**AAT வகுப்புக்கள் ஆரம்பம்**

வவுனியாவில் AAT,I,II,III புதிய பிரிவுகள் ஆரம்பம். டிசெம்பர் மாத பரீட்சைக்கானது. விண்ணப்ப முடிவு திகதி 07.08.2013. ஆரம்பம் 10.08.2013. Sun British College
தொடர்பு: 077 971 3221, 024 222 6649
(35212)(3.6.11)

**வாடகைக்கு உண்டு**

நிலம் அல்லது கடைத்
தொகுதி கட்டி
வாடகைக்குக் கொடுக்
கப்படும். பதிவு
செய்யப்பட்ட நிறு
வனங்களுக்கு மட்டும்.
தொடர்பு:
075 5086767
முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.
(35217) (4.6.3)

**அறிவித்தல்**

புங்குடுதீவு- காட்டுப்புலம்பதி அரசடி
ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய திருப்பணி நிதிக்கான
அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

2013-08-05 அன்று நடைபெற இருந்த மேற்குறிப்பிட்ட சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.
இச் சீட்டிழுப்பு 2013-09-08 அன்று நடைபெறும் என்பதையும் முடிவுகள் ஏற்கனவே குறிப்பிட்ட நாளிதழ்கள் மூலம் 2013-09-10 அன்று அறிவிக் கப்படும் என்பதையும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றோம். ஏற்கனவே விற்பனையில் உள்ள பரிசுச் சீட்டுகள் 2013-09-08 வரை விற்பனைக்கு செல்லுபடியாகும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

-ஆலய பரிபாலன சபை-
(30274) (4.6.3)

**Tokyo Cement Company**

**READY MIXED CONCRETE PLANT-JAFFNA**
Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following position.
*** ASSISTANT QUALITY CONTROLLER - JAFFNA**
The ideal candidate for this position should possess BSc in physical science chemistry as one subject or equivalent with a minimum of 3 years experience in the similar field. Being in overall supervision, you would see to all functions of quality assurance and production of the plant. Previous exposure in a similar capacity would be an added advantage.
*** SALES PROMOTION OFFICER**
The ideal candidate for this position should have a minimum of 2 years experience in sales field.
Age below 30 years
The chosen candidate would be entitled to an attractive salary, along with other perquisites.
Applications with names and addresses of 2 non-related referees should be forwarded by post or e-mail to reach the under mentioned within 7 days.
E.mail : tokyoravi@yahoo.com
Address : P.o Box-2, Cod Bay,
China Bay, Trincomalee.
(30292) (10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைசார் உற்பத்தி எழுவைதீவில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.7


போதிய பனை வளம் இருந்த போதும் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எழுவைதீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


கடந்த காலங்களில் பனம் தொழிலாளர்கள் அதிகமானோர் எழுவைதீவில் வாழ்ந்ததால் பனம்பொருள்கள் உற்பத்தியில் எழுவைதீவு முன்னிலை வகித்திருந்தது. எனினும் தற்போது அங்கு பனம் தொழிலில் ஈடுபடுபவர்கள் இருவர் மட்டுமே உள்ளனர்.

அதனால் பனை ஓலைகளை வெட்டுவதற்குக் கூட அதிக கூலி வழங்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களைப் போல் பெரியளவில் பனம்பொருள் உற்பத்திகள் தற்போது இடம்பெறுவதில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில் பனை ஓலையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவான நார்க்கடகங்கள் மற்றும் பெட்டிகள் மற்றும் பாய்கள் உட்பட அலங்காரப் பொருள்கள் வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தன.

அந்த நிலை தற்போது அருகிவிட்டதாகவும் எழுவைதீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-7)





## குடாநாட்டில் 125 ஹெக்ரேயர் நிலத்தில் உண்மை விதை வெங்காயச் செய்கை

அச்சுவேலி, ஓக. 7

உண்மை வெங்காய விதை நாற்று நடுகை மூலம் யாழ். மாவட்டத்தில் 125 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வெங்காயப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாற்றுமூலம் நடுகை செய்யப்பட்ட வெங்காயப் பயிர்கள் எதுவித நோய்த் தாக்கமும் இன்றி வளர்வதோடு எதிர்பாராத நல்ல விளைச்சலையும் கொடுத்துள்ளது.



இந்த வருடம் விதை வெங்காயத்துக்கு பெரும் பற்றாக்குறை, கடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டதால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேதாளவெங்காயம் உண்மைவிதைகளைப் பயன்படுத்தி நாற்றுமேடை அமைப்பதில் யாழ்.மாவட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வருட இடைப்போக வெங்காயப் பயிர்ச் செய்கையில் (ஆனி, ஆடி மாதம்) நாற்று நடுகை மூலம் 125 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வெங்காயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வேதாள வெங்காய உண்மை விதை நாற்றுமூலம் மேற்கொள்ளப்படும் வெங்காயப் பயிர்ச்செய்கை தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராஜன் தெரிவித்ததாவது:

''யாழ்.மாவட்ட இடைப்போக வெங்காயப் பயிர்ச் செய்கையில் 85 வீதத்துக்கு மேல் உண்மை வெங்காய நாற்றைப் பயன்படுத்தி வெங்காயப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாற்றுநடுகை வெங்காயப் பயிர் குறிப்பிடத்தக்க நோய்த் தாக்கம் இன்றி வளர்ந்து வருவதோடு நல்ல விளைச்சலையும் கொடுப்பதால் விவசாயிகள் அதில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர்.

வெங்காய குமிழ் நடுகையிலும் பார்க்க உற்பத்திச் செலவும் நாற்று நடுகை பயிர்ச் செய்கையில் குறைவு. அத்துடன் பயிர்ச்செய்கைக் காலமும் குறைவு'' எனத் தெரிவித்தார். (வ-11)

## கடும் வறட்சிப் பாதிப்பால் கிணறுகளில் நீர் குறைவு

### விவசாயிகள் பெரும் கவலை

அச்சுவேலி, ஓக. 7


யாழ்.மாவட்டத்தில் அளவுக்கு அதிகமான வறட்சியும் வெப்பநிலை வீச்சும் நிலவுவதால் கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைந்திருப்பதோடு பயிர்ச் செய்கை நீர்ப்பாசனத்துக்கு பயன்படுத்தும் கிணறுகள் நீர்வற்றி விடுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வறட்சி நிலவுவதோடு வெயிலும் அளவுக்கு அதிகமாக அதிகரித்துள்ளது. அத்தோடு தென்மேல் பருவப் பெயர்ச்சிக்காற்றும் கடுமையாக வீசுகின்றது.

கடும் வறட்சி, வெப்பநிலை வீச்சு அதிகரிப்பு, கடும்காற்று போன்ற நிலைமைகளால் கிணறுகளின் நீர்மட்டம் 50 வீதத்துக்கு மேல் குறைவடைந்துள்ளது. குளங்களும் நீர்வற்றி நிலம் வெடித்த நிலையில் காணப்படுகின்றன. கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைந்திருப்பதால் கிணறுகளை பயன்படுத்தி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகள் உரியவேளையில் நீர் இறைக்க முடியாமல் கிணறுகள் வற்றி விடுவதோடு வற்றிய கிணறுகளில் நீர் ஊற்றெடுப்பதற்கு நீண்ட நேரம் எடுக்கின்றது. இதனால் மேலதிக எரிபொருள் செலவு ஏற்படுவதோடு காலதாமதமும் ஏற்படுவதாககவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தோட்டப் பயிர்ச் செய்கைக்கான நீர்பாய்ச்சுதல் முழுமையாக கிணறுகள் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு பங்குக்கிணறுகளில் காலை, மாலை என முறை வகுத்தே நீர் இறைப்பதும் வழமை. கிணறுகள் நீர்மட்டம் குறைந்தளவு நேரத்தில் வற்றிவிடுவதால் குறிப்பிட்ட நாள் இடைவெளியில் பயிர்களுக்கு நீர்பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11)





மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தீர்த்தத் திருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது முருகப்பெருமான் கீரிமலைக்கு எழுந்தருளி தீர்த்தமாடிய பின்னர் இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் போது.... (ச-17)

## நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பு

தென்மராட்சி, ஓக.7

நாட்டில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் தம்மாலான பெருமுயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற போதிலும் நோயினால் பாதிக்கப்படுபவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்போது மாதம் மாதம் நோயின் தன்மை அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வாராந்தம் நடத்தப்படும் நீரிழிவு கிளினிக்குகளில் கடந்த மாதங்களில் பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் கிளினிக்குகளில் வழங்கப்படும் நான்கு வகையான மாத்திரைகளில் ஒன்றான மெற்போலின் மாத்திரையை பாவிப்பதில் இவர்கள் காட்டும் அசண்டையே இதற்குக் காரணமென அறியப்படுகிறது.

சுகாதாரத் திணைக்களத்தால் காலாண்டுகளுக்கு வழங்கப்படும் மருந்துகளில் சில குறைந்தளவில் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதும் இதற்கு ஒரு காரண மாகும்.

நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தப்படும் மெற்போலின் மருந்து குறித்த அளவே வழங்கப்படுவதால் அவற்றை மட்டுப்படுத்தி வழங்க வேண்டிய நிலை வைத்தியசாலைக்கு ஏற்படுகிறது.

மிகக் குறைந்த விலையில் உள்ள மெற்போலின் மருந்தை தனியார் மருந்தகங்களில் வாங்கிப் பயன்படுத்துமாறு தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதனை வாங்க நோயாளர்கள் அக்கறை செலுத்தாமையே நோயின் தாக்கம் அதிகரிக்கக் காரணமாகியுள்ளது.



கிளினிக்குகளில் வழங்கப்படும் மாத்திரைகளை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பாக எவரும் கண்காணிப்பதில் அக்கறை செலுத்துவது இல்லை எனவும் கண்டறியப்பட்டது.

வெளிநாடுகளிலும் எமது நாட்டில் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுவோர் மாத்திரைகளுக்குப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் வைத்தியசாலையில் நீரிழிவுக்குரிய அனைத்து மருந்துகளும் வழங்கப்பட்டு அனைவருக்கும் மருந்துகள் கிடைக்க வேண்டும் என நோயாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சில வேளைகளில் பயன்படுத்த வேண்டிய மாத்திரையை தனியார் மருந்தகங்களில் வாங்கிப் பாவிக்குமாறு சொல்லப்பட்டும் மாத்திரைகளை நோயாளர்கள் பாவிக்காததால் நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் கோட்டை அகழி புனரமைப்பு



மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சுத்தப்படுத்தி திருத்தியமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இந்தக் கோட்டையை அழகுபடுத்தும் வேலை 30 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோட்டையின் மேல்தளப் பகுதி, கோட்டையின் வெளிச் சுவர்களின் சிதைவுகளைத் திருத்தியமைக்கும் வேலைகள் நிறைவடைந்துள்ளன.

இந்தநிலையில், கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சுத்தப்படுத்தி திருத்தியமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் தெரிவித்தார். (ச)

# மூங்கிலாறு பாலம் மறுசீரமைப்பு



மட்டக்களப்பு,ஓக.7


மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் பிரசேத்தில் வெள்ளத்தால் முற்றாக சேதமடைந்த மூங்கிலாறு பாலத்தை முழுமையாக புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்ட வரைபுகள் நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளர் வி.ஜீவானந்தம் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் முயற்சியியால் பாலம் புனரமைக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

மண்டூர் பிரதேச மக்களின் பிரதான போக்குவரத்துக்குரிய பாலமாக மூங்கிலாறு பாலம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அட்டாளைச்சேனைக்குள் நுழைந்தன யானைகள்



**சம்புக்களப்பின் ஊடாகவே ஆறு யானைகள் கூட்டமாக அட்டாளைச் சேனை பிரதேசத்தினுள் நுழைந்துள்ளன.**

அட்டாளைச்சேனை,ஓக.7

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்குள் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் யானைகள் பிரவேசித்துள்ளன. சம்புக்களப்பின் ஊடாகவே ஆறு யானைகள் கூட்டமாக அட்டாளைச் சேனை பிரதேசத்தினுள் நுழைந்துள்ளன.

எனினும் பகல் வேளையில் யானைகளை வெளியேற்றுவது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்று வனவிலங்கு பரிபாலன அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனால் மாலை வேளையே இந்த யானைகளை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வனவிலங்கு பரிபாலன அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, அக்கரைப்பற்று பிரதேசத்தினுள் அண்மையில் யானைகள் பிரவேசித்தமையினால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ச)

# போதைக்கு இலக்கான 70 பேருக்கு மறுவாழ்வு

மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் மது மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையான 70 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்று விமோச்சனா இல்லம் தெரிவித்துள்ளது.

மட்டு மாவட்டத்தில் போதை வஸ்துப் பாவனை மற்றும் மதுவுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து விடுபடச் செய்து அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவே இந்த விமோச்சனா இல்லம் ஆரம்பிக்கப்பட்டது என்று இல்லத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த இல்லத்தில் இதுவரை மது போதையிலிருந்தும் போதைவஸ்துப் பாவனையிலிருந்தும் 70 பேர் விடுவிக்கப்பட்டு, அவர்கள் வெளியேறி குடும்பத்துடன் இணைந்து வாழ்கின்றனர் என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மது மற்றும் போதை வஸ்துப் பாவனையாளர்கள் அதிகரித்துள்ளனர். இதன் மூலம் வீட்டு வன்முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் ,தற்கொலை போன்றவைகள் அதிகரித்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# ஒருங்கிணைப்பு கூட்டத்தை தமிழில் நடத்துங்கள்

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் வேண்டுகோள்

அம்பாறை,ஓக.7

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இனிவரும் காலங்களில் தமிழ் மொழியில் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா கோரிக்கை விடுத்துள்ளார்.

தவிசாளர் இராசையா, அம்பாறை மாவட்ட செயலருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடத்தப்படுகின்றது. அரச கரும மொழிக் கொள்கை நடைமுறையாக்கம் உரிய முறையில் இங்கு பின்பற்றப்படுவதில்லை.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அநேகமான தமிழ்ப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்ற போதிலும் பெரும்பாலும் தமிழ் மொழிபெயர்ப்பு இடம்பெறாத அவலமே நீடித்து வருகின்றது.

அங்கு இடம்பெறும் நிகழ்வுகளை நோக்கும் போது, வேண்டுமென்றே தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதைக் கண் கூடாகக் காண முடிகின்றது.

கூட்டத்தில் கருத்து வெளியிடும் தமிழ்ப் பிரதிநிதிகளின் பேச்சுக்கள் வேண்டுமென்றே அலட்சியம் செய்யப்படும் நிலைமை உள்ளது.

கடந்த 25 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீர சேகர ஆகியோரின் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டிருந்தும் அது நடைபெறாமல் பிற்போடப்பட்டதற்கான காரணத்தை கேட்டபோது எதுவித பதிலும் தரப்படவில்லை.

**65 வீதமான தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இந்த மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இனி வரும் காலங்களில் தமிழ்மொழியில் நடைபெற ஆவன செய்யப்பட வேண்டும்.**

ஆனால் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ. எம்.மன்சூர், சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறாதது ஏன் என்று கூட்டத்தில் கேள்வி எழுப்பிய போது அது நாளை நடைபெறுமென அமைச்சர் அதாவுல்லா பதிலளித்தார்.

அதிகமான தமிழ்ப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் தமிழ்மொழி பெயர்ப்பு ஏன் இடம்பெறவில்லையெனக் கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள், தவிசாளர்கள் கேள்வியெழுப்பிய போது, தேவையானதை மட்டும் கேட்டால் மொழிபெயர்ப்பு தரப்படுமெனக் கூறப்பட்டது.

எனவே 65 வீதமான தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இந்த மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இனிவரும் காலங்களில் தமிழ்மொழியில் நடைபெற ஆவன செய்யப்பட வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)



[illegible] மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேச [illegible] மரங்களில் வண்ண வண்ண நிறத்தில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு அந்த வீதி விழாக் கோலம் பூண்டுள்ளது.

# பரீட்சை நிலையங்களில் கையடக்கத் தொலைபேசி

அம்பாறை,ஓக.7

அம்பாறை, கல்முனை வலயத்திலுள்ள சில பரீட்சை நிலையங்களில் பணியாற்றும் உதவி மேற்பார்வையாளர், நிலைய ஊழியர் போன்றோரிடம் கையடக்கத் தொலைபேசிகள் இருந்துள்ளன என்று பிரதேச இணைப்பாளர் எம். கே. எம். மன்சூர் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

கல்முனை வலயத்துக்கு பிரதேச மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் மன்சூர் திங்கட்கிழமை சில பரீட்சை நிலையங்களுக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டார்.

அங்கு அவர் தொலைபேசிகளைக் கண்டு அவர்களிடமிருந்து அப்புறப்படுத்தியுள்ளார்.

கையடக்கத் தொலைபேசி வைத்திருந்த நிலையில் பரீட்சைக் கடமையிலீடுபட்டோரது விவரங்களையும் அவர் பரீட்சை ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித் துள்ளார்.

பரீட்சை விதியின்படி மேற்பார்வையாளர் மட்டும் கையடக்கத் தொலைபேசியை வைத்திருக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அம்பாறையில் நெல் அறுவடை மழையால் பாதிப்பு



அம்பாறை,ஓக.7

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பிற்பகல் வேளையில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் சிறுபோக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, நிந்தவூர், சம்மாந்துறை, தமன ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் செய்கை பண்ணப்பட்ட நெல்லின் அறுவடைகளே இவ்வாறு பாதிக்கப்பட் டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெல் அறுவடைக் காலங்களில் இயற்கைச் சீற்றங்கள் நிகழும் போது நெற்செய்கையில் நட்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தாக்குதலை நடத்தியமை கடும் குற்றம்

### வாசுதேவ குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.7

வெலிவேரியாவில் போராட்டக்காரர்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தியமை குற்றச் செயலாகும் என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிற்சாலையால் நீர் அசுத்தமடைவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். எனினும், தொழிற்சாலையின் உரிமையாளர் செல்வாக்குமிக்கவர் என்ற காரணத்தால் இந்த முறைப்பாடுகளை பொலிஸார் உதாசீனம் செய்துள்ளனர். எந்த முறைப்பாடு என்றாலும் அதனை விசாரணை செய்ய வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.

போராட்டக்காரர்களை கலைப்பது அரசின் கடமையாகும், சட்டம், ஒழுங்கை கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்ற வேண்டிய அவசியம் எழுந்திருக்கும். எனினும், இராணுவத்தினரை ஈடுபடுத்தி தாக்குதல் நடத்தியமையை ஏற்றுக் கொள்ள முடியாது.-என்றார். (ச)

# 'சதொச'வுக்குச் சொந்தமான காணிகளில் ஹோட்டல்கள்

### நிர்மாணிப்பதற்கு இந்தியா,மலேசியாவுடன் பேச்சு

கொழும்பு,ஓக.7

கொழும்பு நகரத்தில் உள்ள 'சதொச' நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு காணித் துண்டுகளில் ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.


அதற்கமைய இந்தக் காணிகளில் மலேசியா மற்றும் இந்திய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் முன்வைக்கப்பட்டிருந்த பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றச் செயற்குழு (கோப்) வின் அறிக்கையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பது குறித்து மலேசிய முதலீட்டாளர் களுடன் பேச்சு மேற் கொள்ளப்பட்டுள்ளது.**

இந்தக் காணிகளில் ஒன்றில் ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றை நிர்மா ணிப்பது குறித்து ''சதொச'' நிறுவனம் இந்திய முதலீட்டாளர்கள் தரப்பொன்றுடன் பேச்சு மேற்கொண்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றைய காணியில் 20 அறைகள் கொண்ட ஹோட்டலொன்றை நிர்மாணிப்பது குறித்து மலேசிய முதலீட்டாளர்களுடன்பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று 'கோப்' அறிக்கை தகவல் வெளிப்படுத்தியுள்ளது. (ச-22)



தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு வழங்கிவரும் இலங்கை புலம் பெயர்ந்த உழைப்பாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி வைத்தார். அருகில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா உட்பட பலர் காணப்படுகின்றனர்.

# 2 இலட்சம் ஓ.எல். மாணவர்கள் அ.அட்டைக்கு விண்ணப்பிக்க இல்லை

### ஆள் பதிவுத் திணைக்களம் தகவல்

கொழும்பு,ஓக. 7

எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயதைப் பூர்த்தி செய்துள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளில் இரண்டு லட்சம் பேர் வரையிலானோரின் ஆள் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

இவ்வாறு ஆள் பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத்குமார தெரிவித்தார்.

இந்த விண்ணப்பங்களை அனுப்புவதற்கு வழங்கப்பட்டிருந்த கால எல்லை கடந்த மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்றிருந்தாலும், தொடர்ந்தும் அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

எனினும் சில பாடசாலை அதிபர்கள் அது சம்பந்தமாக எந்தவிதமான அக்கறையும் செலுத்துவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.



எதிர்வரும் 31 ஆம் திகதி 16 வயதைப் பூர்த்தி செய்யும் பாடசாலை விண்ணப்பதாரிகள் 65,000 பேர் வரையிலானோரின் விண்ணப்பங்களே இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச-22)

# நியூஸிலாந்துப் பொருள்களை விநியோகிக்கத் தடை

### பால் உற்பத்திகளில் நச்சுத் தன்மை காணப்பட்டதால் நடவடிக்கை

கொழும்பு,ஓக.7

நியூஸிலாந்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பால் உணவு உட்பட பால் பண்ணை உற்பத்திப் பொருள்களில் நச்சுத்தன்மை இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு உற்பத்தி பொருள்களைச் சந்தைக்கு விநியோகிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நியூஸிலாந்தில் உற்பத்தி செய்யப்படும் சில உணவு வகைகளில் வே புரோட்டீன் கொன்சண்ட் ரேட் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மனிதருக்குக் கேடான பக்றீரியா உள்ளதாக ஆஸ்திரேலிய அரசு சுகாதாரப் பிரிவுகளுக்கு எச்சரித்துள்ளது.

அதனையடுத்து முன்னெச்சரிக்கையாக நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை சந்தைக்கு விநியோகிப்பதை சுங்கப் பிரிவு இடை நிறுத்தியுள்ளது. (ச)

# பொலிஸ் முறைப்பாட்டு நகல்களை உடன்பெறலாம்



கொழும்பு,ஓக.7

பொது மக்களால் செய்யப்படுகின்ற முறைபாடுகளுக்கு உடன் நகலை கொடுப்பதற்கு புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

ஒருவர் தனது தேசிய அடையாளஅட்டையைத் தொலைத்து விட்டால் பொலிஸ் நிலையங்களில் செய்யும் முறைப்பாட்டுக்கான நகலை பெறுவது கடினமான விடயமாக இருந்தது.

இந்த நகல் பிரதியை பெறுவதற்கு பலர் இரு வாரங்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பொதுமக்களின் இந்தச் சிரமத்தைத் தெரிந்து கொண்ட பொலிஸ் மா அதிபர் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு ஆகியவை தொலைந்து விட்டன என்று செய்யப்படும் முறைப்பாடுகளை ஒரு காபன் பிரதியை கீழே வைத்து பொலிஸ் நிலையத்தில் உள்ள உத்தியோகத்தர் பதிவு செய்ய வேண்டும்.

பின்னர் அதனை தனது உயர் அதிகாரியிடம் காட்டி அவரது அனுமதியுடன் அந்த முறைப் பாடு எழுதப்பட்ட காகிதத்தை அந்தப் புத்தகத்தில் இருந்து கிழித்து எடுத்து சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக்காரருக்கு அரை மணித்தியாலத்துக்குள் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளார். (க)

### பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு

# சர்வதேசப் பிரதிநிதிகளை தங்கவைக்க 40 ஹோட்டல்கள் முன்கூட்டியே பதிவு

கொழும்பு,ஓக.7

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இலங்கையிலுள்ள 40 பிரபல ஹோட்டல்கள் முன் கூட்டியே பதிவு செய்யப் பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகத்தின் வெளி விவகாரங்களுக்குப் பொறுப்பான பேச்சாளர் அநுராதாஹேரத் தெரிவித்தார்.

இலங்கை வரவுள்ள சர்வதேசப் பிரதிநிதிகளை தங்க வைப்பதற்காக நீர் கொழும்பு முதல் களுத்துறை வரையுள்ள சகல வசதிகளுடனும் கூடிய ஹோட்டல்களின் அனைத்து அறைகளும் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.



இதேவேளை, பொதுநலவாய உச்சி மாநாட்டையொட்டி எதிர்வரும் நவம்பர் 12 முதல் 14 ஆம் திகதி வரை மூன்று நாள்களுக்கு கொழும்பு கினமன்ட் கிரேண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ள வர்த்தகப் பேரவையில் கலந்து கொள்வோருக்கென அதே ஹோட்டலின் 800 அறைகளும் குறித்த மூன்று தினங்களுக்கும் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று முதலீட்டு ஊக்குவிப்புச் சபை தெரிவித்துள்ளது.

பொது நலவாய உச்சி மாநாடு, அதனுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் பேரவை மற்றும் இளைஞர் பேரவையில் பொது நலவாய அமைப்பின் உறுப்புரிமை வகிக்கும் 53 நாடுகளினதும் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ள நிலையில், வர்த்தகப் பேரவையில் பொது நலவாய அமைப்பில் அங்கம் வகிக்காத நாடுகளைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாணந்துறை நீதிமன்றத் தீர்ப்பு; முன்னோடியாக அமையவேண்டிய வேளை

பரமசிவன் தலையில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் வெளியான தமிழ்ச் சினிமாத் திரைப்படம் ஒன்றின் அர்த்தமுள்ள பாடல் வரிகள் இவை.

பிரபல சிங்கள சினிமாப் படப் பாடகர் தம்பதிகளை, அவர்கள் மீது பெற்றோல் ஊற்றிக் கொளுத்தி விடுவதாக அச்சுறுத்திய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார ரணதுங்கவின் பதவிக் காலத்தில் அவரது பாதுகாப்புப் பிரிவில் பணிபுரிந்த பத்துப் படை அலுவலர்களுக்கு-

பாணந்துறை மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவன்ச வழங்கிய தீர்ப்பு, மேலே குறிப்பிட்ட சினிமாப் பாடலையே ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட பத்துப் படைவீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஏழரை ஆண்டுகள் காலச் சிறைத் தண்டனை விதித்து பாதிப்புற்ற வழக்காளிகளுக்கு தலா இருபது லட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் வேளை, அந்த அதிகாரப் போதையில் மூழ்கி, தாம் எதனையும் எப்படியும் செய்யலாம் என்று எண்ணுவோருக்கு தகுந்த பாடம் புகட்டுவதாக பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பு அமைகிறது.

அதீத அதிகாரம் உள்ளவர்களின் செல்வாக்கைத் தமதாக்கிக் கொண்டு செயற்படும் பிரகிருதிகளுக்குக் காலம் பிந்தியேனும் அதற்கான தண்டனை கிடைக்கும் என்பதற்கான விடய ஆய்வாகவும் இதனைக் கொள்ளலாம்.

நீதிமன்றினால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட படை வீரர்கள் பத்துப் பேரும், எந்தவித கிலேசமும் இன்றி வழக்காளிகளுக்குக் கெடுதல் செய்வதற்கான ''துணிவை''க் கொடுத்தது, தாம் செய்யப்போகும் குற்றத்தில் இருந்து தப்பித்து விடலாம், அதற்கான தண்டனை கிடைப்பதனை அதிகாரப் பீடம் தடுத்துவிடும் என்று தமக்குள் நினைத்திருந்ததும் காரணமாக இருக்கக் கூடும்.

அரசியல் மேடைகளில் நடத்தப்பட்ட இசை நிகழ்வுகளில் அப்போதைய அரசாங்கத்தைக் கிண்டல் செய்யும் பாடல்களை பாடுவதனைத் தடுப்பதே, நீதிமன்றினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டோரின் நோக்கம் என்றும் கொள்ளலாம்.

அப்போதைய, ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது, எதிரணித் தரப்புக்குச் சார்பான பாடல்களை இசைத் தம்பதியினர் இசைத்து வந்தனர். அதனைத் தடுக்கும் நோக்கத்துடனேயே பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப் போவதான மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனநாயகம் நிலவும் எந்த நாட்டிலும், அதன் பிரஜை ஒருவர் தாம் விரும்பும் அரசியல் கருத்தைக் கடைப் பிடிக்கவும், அதனைச் சார்ந்து அல்லது அதன் பொருட்டுச் செயற்படவும் பூரண சுதந்திரம் உண்டு.

எமது நாட்டின் அரசமைப்பில் அதற்குப் பூரணமாக வகை செய்யப்பட்டுள்ளது. அதனை நேர்முகமாகவோ அன்றி மறைமுகமாகவோ தட்டிப்பறிக்க எவராலும் முடியாது; அதிகாரமும் இல்லை.


மேலும், இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால், பிரஜை ஒருவரின், அல்லது பிரஜைகளின் கருத்துச் சுதந்திரத்தை பறிக்க முடியாது. அதற்கு விரோதமாக, கருத்துச் சுதந்திரம் எந்தவகையிலேனும் அன்றி வடிவிலேனும் பறிக்கப்பட்டால், அது சர்வாதிகாரம் தனது தலையை உயர்த்துகின்றது என்ற அபாய நிலை தோன்றுவதற்கான அறிகுறியாகக் கொள்ளத்தக்கது.


அதேவேளை, மக்களால் அளிக்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை தமது சொந்தச் சொத்தாகக் கருதிச் செயற்பட முனையும் தலைவர்கள் பிற நாடுகளில் மக்களினால் கீழிறக்கப்படுவது சகஜமாகி வருகிறது.

அந்த நிலை எங்கள் நாட்டில் ஏற்படாது இருப்பதற்கு, பாணந்துறை நீதிமன்றத் தீர்ப்பு ஒரு முன்னோடியாக அமைய வேண்டும். அதற்கான சமிக்ஞைகளைக் காட்டுவதற்கான பொறுப்பு பதவியில் உள்ள அரசுக்கும் உண்டு.

# வேண்டும் ஒரே குரல்









இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்கின்ற சரத்தை உள்ளடக்கி 1987 இல் உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வரையப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நீர்த்துப் போக அல்லது ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதானது இந்திய மத்திய அரசுக்குப் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், இலங்கையின் இந்த முயற்சிக்கு இந்தியா ஆதரவளிக்கக் கூடாது என அழுத்தம் கொடுக்கின்றன. இலங்கை அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இதுநாள் வரையில் எவ்வித உறுதியான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காததால் இந்திய மத்திய அரசு பெரிதும் அதிருப்தியடைந்துள்ளது.

### தமீழீழக் கோரிக்கைக்கு வாக்கெடுப்பு அவசியம்

இந்த விடயத்தில் மிகவும் கடும்போக்கான நகர்வொன்றை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் கோரியிருந்தார். கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதியிட்டு ஜெயலலிதாவால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தனித் தமிழீழம் ஒன்றைப் பெற்று வாழ்வதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்வதற்கான பரிந்துரையை ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியா முன்மொழிய வேண்டும் எனவும் தமிழ் நாட்டு முதலமைச்சர் கோரியிருந்தார்.

இதேவேளை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியின் கீழ் செயற்படும் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (ரெசோ) கடந்த ஜுலை 16 ஆம் திகதி கூடி இலங்கையில் நவம்பரில் நடக்கவுள்ள பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் எனவும், 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரி இந்திய மத்திய அரசுக்கு அழுத்தத்தை வழங்கும் நோக்குடன் மறுநாள் தமிழ்நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்துவதெனத் தீர்மானித்தது.

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்கும் அதேவேளையில், கடந்த சில மாதங்களாக இத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாட்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயம் தற்போது இலங்கை மற்றும் அனைத்துலக நாடுகளின் ஊடகங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது. ஆனால் இதற்கு முன்னர் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இத்திருத்தச் சட்டம் தொடர்பில் தமது கவனத்தை முன் வைக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

இதே தமிழ்நாட்டு அரசியற் கட்சிகள் இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சில மீறப்பட்ட போது தமது கருத்துக்கள் எதனையும் முன்வைக்காது அமைதி காத்தன.

### வடக்கு கிழக்கை பிரித்த போது எந்த எதிர்ப்பும் இல்லை

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு பிரிக்கப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், 2006இல் வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டு, இரு மாகாணங்களாக மாற்றப்படுவதாக இலங்கை உயர் நீதி மன்றம் அறிவித்த போது இந்த விடயத் தில் இந்திய மத்திய அரசோ தமிழ்நாட்டு அரசியற் கட்சிகளோ எவ்வித எதிர்ப்பையும் காட்டாது அமைதி காத்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு பிரதான அரசியல் நீரோட்டத்துடன் இணைய வேண்டும் என்பதை 13 ஆவது திருத்தச் சட்டம் வலியுறுத்தியதால் விடுதலைப் புலிகள் இதனை முற்றாக எதிர்த்தனர். புலிகளின் கோரிக்கைகள் எவற்றையும் இத்திருத்தச் சட்டம் திருப்திப்படுத்ததால் அவர்கள் இதனை நிராகரித்தனர். ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்பது தமிழ் நாட்டு அரசியலில் மிகப் பெரும் உணர்வலையை ஏற்படுத்துகின்ற ஒன்றாகக் காணப்பட்டது.

இதற்காக தமிழ்நாட்டு அரசியற் கட்சிகள் அனைத்தும் ஒரேவிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்தன. அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தார். 13 ஆவது திருத்தச் சட்டம் வெற்றிபெறுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கையில் செயற்பட்ட அனைத்து தமிழ் ஆயுதக் குழுக்களிடமும் இராமச்சந்திரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையில் தமிழர் வாழும் மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்கி, கருத்து வாக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் கருணாநிதி கோரிக்கை விடுத்திருந்தார். 2012இல் மீண்டும் ரெசோ அமைப்பிற்கு கருணாநிதி புத்துயிர் அளித்த போது, ஈழத்தமிழ் மக்களுக்கான தனித் தமிழீழம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். ஆனால் சில மாதங்களின் பின்னர் ஏற்பட்ட உண்மையான அரசியல் மாற்றங்கள், மற்றும் நடைமுறை உண்மைகள் போன்றவற்றால் கருணாநிதி தான் முன்வைத்த கோரிக்கையிலிருந்து பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

''தமிழ்நாட்டின் பிரதான அரசியற் கட்சிகளின் போக்கானது அரசியல் போட்டித்தன்மையின் விளைவால் மாற்றமுறுகிறது. கருணாநிதியின் தற்போதைய நிலைப்பாடானது, இலங்கையில் இறுதிக்கட்ட போர் நடந்த போது இந்திய மத்திய அரசுக்கு இவர் வழங்கிய ஆதரவின் அடிப்படையில் நோக்கப்பட வேண்டியுள்ளது. அவர் தனது ஆதரவை இந்திய மத்திய அரசுக்கு தொடர்ந்தும் வழங்கி வந்தார். ஆனால் தற்போது மீண்டும் தான் தமிழ் மக்களின் மீட்பர் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்புகிறார். இதனாலேயே இவர் ரெசோ அமைப்பிற்கு மீண்டும் புத்துயிரளித்துள்ளார்'' என அரசியல் வல்லுனரான பேராசிரியர் வி.சூர்ய நாராயணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் செயற்படும் சிறிய கட்சிகள் கடந்த இருபதாண்டுகளாக தாம் கைக்கொண்டு வந்த நிலையிலிருந்து பெரிதும் மாறவில்லை.

ஆனால் ம.தி.மு.க தலைவர் வைகோ, ப.ம.க தலைவர் இராமதாஸ், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் ஆகியோர் ஐ.நா ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு மூலம், இலங்கைத் தமிழ் மக்களுக்கு தன் னாட்சியுடன் கூடிய தனித் தமிழீழம் பெற்றுக் கொடுப்பது உறுதிப் படுத் தப்பட வேண்டும் எனத் தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகின்றனர்.

*(நன்றி: புதினப்பலகை)* ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியவர்கள் துயர் போக்கும் சந்நிதி முருகன்

ந.அரியரத்தினம்

இன்று கொடியேற்றம்





இந்த மண்ணில் வாழ்ந்து வரும் பல்லாயிரக் கணக்கான மக்களின் துன்பங்களைப் போக்கி அவர்களை உய்விக்கின்ற சந்நிதானமாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகிறது. சந்நிதியான் அடியவர்கள் காலம் காலமாகத் தமது குழந்தைகளுக்கு தலை முடி வழித்தல், அன்னச் சோறு ஊட்டுதல் போன்ற பல்வேறு சடங்குகள், சம்பிரதாயங்களை இவ்வாலயத்திலேயே நிறைவேற்றி வருகின்றனர். இவ்வாறானதொரு ஆன்மிகத் தொடர்பு நிலவுவதால், சைவ மதத்தவர் இவ் ஆலயத்தில் பக்தி பூர்வமாக வழிபாடியற்றி வருகின்றனர். தமது வேண்டுதல்களை நிறைவேற்றும் விதத்தில் பல திருமண ஜோடிகளும் எளிமையான முறையில் சந்நிதியான் சன்னிதானத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும் வழமையும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளில் வாழும் சைவ மக்களும் கூட சந்நிதி முருகன் மீது அளவு கடந்த பக்தி கொண்டுள்ளனர். தன்னை நாடி வருகின்ற பல்லாயிரக் கணக்கான அடியார்களின், அல்லல்களைப் போக்குகின்ற கருணைத் தெய்வமாக, சந்நிதி முருகன் விளங்குகின்றான். அதே போல ஞானிகளும், யோகிகளும் நாடி வந்து தவ வாழ்க்கை வாழுகின்ற புண்ணிய புமியாகவும், இவ்வாலயச் சூழல் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

கதிர்காமக் காட்டுப் பகுதியில் வாழ்ந்த கந்தர்வனான ஐராவசு, அங்கே தமது சாபம் நீங்கப் பெற்ற பின், தவ வாழ்க்கை வாழ்ந்து முத்திப் பேறு அடைவதற்காக முதன் முதல் இவ்வாலயம் அமைந்திருக்கும் கல்லோடைப்பகுதிக்கு வந்து தவம் இருந்து, இங்கேயே சமாதி அடைந்ததாக, தல வரலாறு கூறுகிறது. இந்த ஐராவசு என்ற தவ முனிவருடன், தொடர்பு பட்டடதாகவே இங்கேயுள்ள தல விருட்சமான புவரசு மரம் காணப்படுகிறது. எமது நாட்டவர்கள் மட்டுமன்றி, வேறு நாடுகளில் பிறந்து வேறு மார்க்கங்களைக் கடைப்பிடிப்பவர்கள் கூட, நாடி வந்து தவ வாழ்க்கை மேற்கொள்கின்ற வரலாற்றுச் சிறப்பும் இவ்வாலயத்திற்கு உள்ளது.

அந்தகையவர்களுள் ஒருவர் இலங்கையின் மகா தேசாதிபதியாகக் கடமையாற்றியவரும், 1947 ஆம் ஆண்டு இலங்கைக்கு சோல்பரி அரசமைப்பை வழங்கியவருமான, சோல்பரி பிரபுவின் மகனான ஜே.எச்.இராம்ஸ் பொதம் என்பவராவார். இவர் சந்நிதியில் ஆனைக் குட்டி சுவாமிகள் என அழைக்கப் பட்டார். மற்றவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஜேர்மன் சுவாமிகள். இதே போன்று எமது காலத்தில் எம்முடன் வாழ்ந்து சந்நிதியில் சமாதியடைந்தவர் தும்பளையைப் பிறப்பிடமாக் கொண்ட முருகேசு சுவாமிகள். இவர் முற்பிறப்பில் செய்த பூர்வ புண்ணிய பயனால் சந்நிதியானின் முழுமையான திருவருளுக்குப் பாத்திரமாகி ஒரு நடமாடும் தெய்வமாக விளங்கினார். இவருடைய வாழ்க்கைப் பாதை ஏறத்தாழ நாயன்மார்களுடைய வாழ்க்கை போலவே அமைந்திருந்தது. ஆலயத்தில் பூசைகள் அபிசேகங்கள் சிறப்பாக இடம் பெறும் விதத்தில் ஆலயத் திருப்பணிகளுக்காகத் தனது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவு செய்தார்கள். அடியார்கள் துன்பங்கள் கவலைகளைப் போக்குவதற்காக தானும் சந்நிதியானிடம் வேண்டுதல் செய்வார். அவர்களை ஆற்றுப்படுத்தி, அடியார்கள் மகிழ்ச்சியில். மன நிறைவடையும் ஒரு வித்தியாசமான அருளாளராக முருகேசு சுவாமிகள் விளங்கினார். சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தின் புனிதமான அந்த இலையை முருகேசு சுவாமிகள் தாம் பிறரது வீடுகளுக்குச் செல்கின்ற பொழுது, அதனைச் சில அடியார்களுக்கு வழங்குவதுண்டு. இன்றும் சந்நிதிக்கு வழிபாட்டுக்கென வரும் அடியவர்கள் அப் பூவரச மரத்தின் இலைகளைச் சேகரித்து எடுத்துத் தம்முடன் எடுத்துச் சென்று புனிதப் பொருளாகப் போற்றி வருவது வழக்கமாக ஆகியுள்ளது.


சந்நிதியானுடன் இரண்டறக் கலந்த முருகேசு சுவாமிகள், தனது இறுதிக் காலத்தையும் சந்நிதி ஆலயச் சூழலிலேயே நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்து 1999 மார்ச் மாதத்தில் சமாதி அடைந்தார்.

சைவ மக்கள் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட யோகர் சுவாமிகளும், ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் புனிதத்தை நன்கு உணர்ந்திருந்தார்கள். ஒரு முறை யோகர் சுவாமிகள் இவ்வாலயத்திற்குத் தனது அடியார்கள் சிலருடன் ஒரு வாகனத்தில் சென்றுள்ளார். அவ்வாறு ஆலயத்திற்கு வந்து, வீதியில் கால் பதித்தவர், இங்கே வீதியெங்கும் புனிதமாகத் தென்படுகிறதே. எங்கு பார்த்தாலும் சிவமயமாக் காட்சி தருகிறது எனத் தனது சீடர்களுக்கு கூறியுள்ளார்கள். ஆம் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயமும், ஆலயச் சுழலும் ஒரு புண்ணிய பூமியாகும். அது எமது ஊனக் கண்களுக்குத் தெரியாது போகலாம். ஆனால் ஞானிகளின் ஞானக் கண்களுக்கு நன்கு தெளிவாகவே புலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான புண்ணிய பூமியில் கலியுகக் கந்தன் வேல் வடிவில் வீற்றிருந்து, யாமிருக்கப் பயம் ஏன், எனத் தன்னை நாடிவரும் அடியவர்கள் அனைவருக்கும் அபயமளித்துத், தனது வற்றாத திருவருளை அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கின்றான். வாருங்கள். இந்த உற்சவ காலத்தில் அவனிடம் செல்வோம். அவன்தாழ் பணிவோம்.

# பரந்துபட்ட வாசிப்பு ஆளுமைக்கு விருத்தி

சி.நற்குணலிங்கம்



உடல், அறிவு, உணர்வு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து முழுவளர்ச்சி பெறச் செய்வதே கல்வியின் நோக்கமாகும். மனிதனது பூரண வளர்ச்சிக்கு அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாக அமைகிறது. பாடசாலைக் கல்வியின் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் 'அறிதல்' சிறப்புற அமைவதற்கு சுயகற்றல் சூழலை உருவாக்கும் தளமாக நூலகங்கள் விளங்குகின்றன. இந்த நூலகங்களை மாணவர்கள், பொதுமக்கள், குறிப்பாக இளம் சந்ததியினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வளவு தூரம் ஒரு மனிதன் வாசிப்பில் தன்னை ஈடுபடுத்துகிறானோ அவனே முழு மனிதனாகின்றான்.

கற்றல்- கற்பித்தலுக்கு உதவும் ஒரு கருவி நூலகமாகும். மனிதனை மனிதனாக மாற்றும் கல்வியைப் பெற தலைசிறந்து விளங்குவது நூலகமாகும். தேடலுக்கு மிகவும் பொருத்தப்பாடுடைய இடம் நூலகமாகும். எனவே நூலகத்தின் உச்சப் பயன்பாட்டை அனைவரும் பெற்றுப் பயனடைய வேண்டும்.

வாசிப்பதால் கிரகித்தல் திறன், சிந்தனையாற்றல் வளர்ச்சியடைவதுடன் நூல்கள் மீதான கரிசனையும் தோற்றம் பெறுகின்றது. பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் சுய சிந்தனையும் , சுய தேடலும் உள்ளவர்களாக மாற வாசிப்பு உதவுகின்றது. மாற்றங்களை வரவேற்பதற்கும், மாற்றங்களுக்கு எம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் வாசிப்பு அவசியம். அனுபவப் பேறுகளின் நுழைவாயில்களாக அமையத் தக்க நூல்களால் நமது வாழ்க்கைப் போக்கில் மாறுதல்களும் திருத்தங்களும் ஏற்படும். வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படின் அது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துவிடும்.

இளமையில் கையாளும் வாசிப்புப் பழக்கமே கல்வியின் அடித்தளமாகும். நூல்கள் பொருளுணர்ந்து வாசிக்கப்பட வேண்டும். மொழியாற்றலில் முன்னேற்றம் காண வாசிப்பு அவசியம். வாசிப்பு மனதை வளப்படுத்துகின்றது. இவற்றை விட பல்துறைகள் சார் அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம். சிந்திக்கும் ஆற்றல்மிக்க மக்கள் சுயகற்றல் மூலமே உருவாக்கப்படுகின்றனர். அறிவுத்திறன்மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்பி, எழுச்சி பெறச் செய்ய வாசிப்பு அவசியமாகின்றது. வாசிப்பின் அளவை அதிகரிப்பதன் மூலம் திறன்களை, மனப் பாங்குகளை விருத்தி செய்ய, அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோளை சாதித்துக் கொள்ள, உளநலம் ஏற்பட, ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க, சமூக விழுமியங்களை விருத்தி செய்ய, சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

பரந்துபட்டு வாசிப்பதன் மூலம் ஆளுமை விருத்தி ஏற்படுவதுடன் அறிவு வளம் பெருகுகின்றது, அறிவு விருத்தியாக்கப்படுகின்றது, எழுத்தாற்றல் வளருகின்றது, பகுத்து உணரும் பண்பு தோன்றுகின்றது. வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் , புதிய தேடலுக்கும், புதிய சிந்தனைக்கும் வாசிப்பு அவசியமாகின்றது.

நூல்கள் வெளியிடப்படுவதும், அவை வாசிக்கப்படுவதும், அபிப்பிராயங்கள் பகிரப்படுவதும், புதிய கருத்துக்கள் அதன் வழியாக தோற்றம் பெறுவதும், கருத்து மோதல்கள் தோன்றுவதுமான அறிவுசார் செயற்பாடுகள் இடம்பெறுவது ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளங்களாகும். இந்த அடையாளங்கள் எதிர்கால சந்ததியினருக்கும் நூலகங்கள் வாயிலாகப் பேணிப் பாதுகாத்து வழங்கப்பட வேண்டும். புத்தகம் இல்லாத அறை உயிரில்லாத உடல் போன்றது.

ஆழ்ந்து கற்பதற்கும்,கற்றலில் ஆர்வம் ,நடத்தை, உளப்பாங்கு, நுண்மதி, அறிவாற்றல் திறன் என்பவற்றை வளர்த்து நெறிப்படுத்தவும் நூலகம் பயன்படுகின்றது. நூலகத்தினை வயது வேறுபாடின்றி எல்லோரும் பயன்படுத்தி பயனடைவதன் மூலம் மனிதன் நடமாடும் ஒரு நூலகமாக மாற்றமடைகின்றான்.

இலங்கை நாட்டின் அடையாளத்தின் பங்காளர்களாக திறமை மிக்க பிரஜைகள் மூலம் சர்வதேச சமூகத்தின் வெற்றியை நோக்கிய இலக்கை எட்டுதலே கல்வி அமைப்பின் நோக்கமாகும். 21 ஆம் நூற்றாண்டில் அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ளது. இன்று அறிவுமையச் சமூகம் என்பது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது.

அந்த வகையிலே கல்வியின் நோக்கை எட்டுவதற்கும், அறிவுமையச் சமூகத்தில் வாழ்வதற்கும் நூலகங்கள் தளமாக விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை உற்பத்தி பயிற்சி நிலையங்கள் வரணியிலும் வேண்டும்

வரணி, ஓக. 7

பனை உற்பத்திப் பொருள்கள் சார்ந்த பயிற்சி நிலையங்கள் வரணிப் பிரதேசத்திலும் அமைக்கப்படல் வேண்டும் எனபனம் பொருள்சார்ந்த உற்பத்தியாளர்களால் பனை அபிவிருத்திச் சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி நிலையம் அமைக்கும் பட்சத்தில் கூடுதலான பயனாளிகளை இணைத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி, மந்துவில், மிருசுவில், விடத்தல்பளை, எழுதுமட்டுவாழ், கரம்பகம், கொடிகாமம் போன்ற இடங்களில் பனைகள் அதிகம் உள்ளன. இந்தப்பிரதேசங்களில்இருந்து பனம் ஓலைச் சார்வுகள் ஏராளமாக வடமராட்சிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பனம் உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப்படு கின்றன. உற்பத்தி செய்யப்படும் சுளகு நார்க்கடகங்கள் மீண்டும் கொடிகாமம் போன்ற பல பிரதேச வர்த்தக நிலையங்களுக்கு எடுத்துவரப்பட்டு விற்பனையாகின்றன. பனை ஓலையில் இருந்து தயாரிக்கப்படும் பாய்கள், ஓலைப்பெட்டிகள் மற்றும் அலங்கார கூடைகள் மற்றும்பனம்கருப்பட்டி, ஒடியல், புளுக்கொடியல், பனாட்டு போன்ற உற்பத்திகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவையின் சந்தை வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

இந்த விடயத்தில் பனை அபிவிருத்திச் சபை ஊக்கமெடுத்து இந்தப் பகுதி மக்களுக்கு பயிற்சிகளை வழங்கி உற்பத்திப் பொருள்கள் நவீனமயப்படுத்தி தென் பகுதிக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்ய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(எ-122)

# நீதி மீது நம்பிக்கை இழந்ததால் மக்கள் வன்முறையில் நாட்டம்

## விரிவுரையாளர் சர்வேஸ்வரன் கருத்து

யாழ்ப்பாணம், ஓக.7

நீதிமன்றக் கட்டமைப்பில் மக்கள் நம்பிக்கையில்லாமல் போகும்போதே அவர்கள் வன்முறையை நாடுகின்றனர். நீதிமன்றத்தில் காலதாமதம் இல்லாது தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற செயலமர்வில் வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்ற நடவடிக்கைகள் மூலமாக மக்கள் தங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனடிப்படையிலேயே மக்கள் தங்களின் எந்த சட்டரீதியான பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தை நாடுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு கால தாமதம் ஏற்படாதவாறு வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும். நீதிபதிகளின் ஆளுமையில் தான் காலதாமதம் தவிர்க்கப்படுவது தங்கியுள்ளது. அதேபோன்று சட்டத்தரணிகளும் தனித்துப் பணத்துக்காக செயற்படாது மக்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

நீதிமன்றக் கட்டமைப்பில் மக்கள் நம்பிக்கையிழக்கும் போது அவர்கள் வன்முறையை நாடுகின்றனர். எனவே மக்கள் நீதிமன்றக் கட்டமைப்பில் நம்பிக்கையிழக்காதவகையில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்-என்றார். (ச-5)

## பெருந்திருவிழாவை முன்னிட்டு விசேட ஆன்மிக நிகழ்வுகள்



வடமராட்சி, ஓக. 7

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் திருவிழாக்காலங்களில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு விசேட ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு வரிசையில் இன்று புதன்கிழமை வட பிராந்திய சாயிசமித்தி அன்பர்களின் பஜனையும், நாளை வியாழக்கிழமை ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகளின் ''ஆலயவழிபாடும், மஹோற்சவமும்'' என்னும் தலைப்பிலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் ஜே. சந்திரப்பிரகாஷ் வழங்கும் முருகன் பெருமை என்னும் தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும். (ச-8)

# பனை தறிப்பை கட்டுப்படுத்த அபிவிருத்திச் சபை அதிரடி

யாழ்ப்பாணம், ஓக.7

குடாநாட்டில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்களைத் தறிப்பதைக் கட்டுப்படுத்த பனை அபிவிருத்திச் சபை அதிரடி நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறது.

பனை வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் பயன்தரக் கூடிய பனை மரங்களைத் தறிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

வீட்டுக் காணிகளிலோ, வெற்றுக்காணிகளிலோ உள்ளபனை மரங்களைத் தறிப்பதற்கு பிரதேச சபை ஊடாக பனை அபிவிருத்திச் சபையிடம் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக எந்தவித அனுமதிகளும் பெறாது சட்டவிரோதமான முறையில் பனைமரங்களைத் தறிக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பனை அபிவிருத்திச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கினால் அழிக்கப்படும் பயன்தரு பனை வளங்களைப் பாதுகாக்க முடியும். தமது பிரதேசங்களில் அவ்வாறான செயல்கள் இடம்பெற்றால் அது தொடர்பான தகவல்களை இரகசியமான முறையில் வழங்கும் பட்சத்தில் பனை அபிவிருத்திச் சபை உடனடி நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அளவெட்டிப் பகுதியில்27 பனைமரங்களை தறித்த கும்பலில் ஒருவரை கையும் களவுமாக பொலிஸாரின் உதவியுடன் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் கைது செய்தனர்.

தற்போது அதுதொடர்பான முறைப்பாட்டை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் சட்ட ரீதியான அனுமதி பெறாமல் களவாக பனை தறிக்கும் நடவடிக்கைகளைக் கட்டப்படுத்த பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பனை அபிவிருத்திச் சபை கேட்டுள்ளது

இலாப நோக்கம் கருதி எந்தவித அனுமதியும் பெறாது பனை மரங்களைத் தறிப்பதை உடன்நிறுத்துமாறும் சபை கோரியுள்ளது. (வ-14)

# வேட்டையாடப்படும் வேலிகள்

## தென்மராட்சி கிழக்கு மக்கள் முறைப்பாடு

தென்மராட்சி, ஓக.7

வேட்டைக்காரர்களால் வேலிகள் சிதைக்கப்படுவதாக தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகல் வேளைகளில் நாய்களுடன் அலையும் வேட்டைக்காரர்கள் தாங்கள் செல்லும் பாதையில் உள்ள வேலிகளை வெட்டி வீழ்த்தி சேதப்படுத்தி விட்டு செல்கின்றனர்.

வெட்டி வீழ்த்தப்படும் பகுதிகளால் உள்நுழையும் கட்டாக்காலி கால்நடைகள் அங்குள்ளபயிர்வகைகளைஅழித்து வருவதாகவும் தென்னந் தோட்டங்கள் சிலவற்றில் தேங்காய் களவு இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

முயல் மற்றும் உடும்பு ஆகியவை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ள நிலையிலும், வேட்டைக்காரர் தினமும் நாய்களுடன் வேட்டைக்கு அலைவது வழமையான நிகழ்வாகி விட்டது.

அண்மையில் வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட முயல் வீதியைக் கடந்து செல்கையில் வேகமாக வந்த நாய்கள் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிகளுடன் மோதியதில் அதில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# தமிழர்களின் கல்விச் சொத்தை காப்பது அனைவரதும் கடமை



கற்றலுக்குரிய சூழல் சரி யாக இருக்கின்றபோதே மாணவர்கள் சிறப்பான அடைவு மட்டத்தை எட்ட முடியும்.

வலி.வடக்கு, ஓக.6

தமிழ் மக்களுடைய எதிர்கால சொத்தாக அமைவது கல்வியாகும். அந்த வகையில் மாணவர்களுடைய பரீட்சை தற்போது நடைபெறும் வேளையில் எந்த வகையிலும் இந்த மாணவர்களின் பரீட்சைகள் பாதிப்படையாது பார்த்துக்கொள்ள வேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்பும் ஆகும்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி யுள்ள நிலையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அனைவரும் உரிய ஒத்துழைப்பு வழங்குமாறு வலி.மேற்கு கல்வி சுகாதார மேம்பாட்டுக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் வலி.மேற்கு கல்வி சுகாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் அ.சிவானந்தன் நேற்று விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கற்றலுக்குரிய சூழல் சரியாக இருக்கின்றபோதே மாணவர்கள் சிறப்பான அடைவு மட்டத்தை எட்ட முடியும். ஆனால், கடந்த முப்பது வருட காலமாக எமது பிரதேசத்தில் இடம்பெற்ற போர் காரணமாக மாணவர்களின் கற்றலுக்கு சிறப்பான சூழல் அமையவில்லை. இது எமது மாவட்டத்தின் கல்வி நிலையில் பெரியவீழ்ச்சியைஏற்படுத்தியுள்ளது. இந்த வீழ்ச்சியிலிருந்து நாங்கள் மேலெழ வேண்டுமாயின் எமது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குறிப்பாக இந்தப் பரீட்சைக் காலத்தில் இரவிலும் பகலிலும் சீரான மின் விநியோகத்தை வழங்குவதற்கு மின்சார சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்திச் சங்கம் என்பன உரிய கவனம் செலுத்த வேண்டும். காலையிலும் பரீட்சை நிறைவடையும் நேரங்களிலும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

இதேவேளை, பரீட்சைக் காலத்தில் குடாநாட்டு ஆலயங்கள் ஒலிபெருக்கிகளில் பக்திப் பாடல்கள் ஒலிக்க விடுவதை நிறுத்த வேண்டும். அத்துடன் பொது நிகழ்வுகள், பிரசாரங்கள் போன்றவற்றில் ஈடுபடுபவர்களும் தமது ஒலிபெருக்கி பாவனையை நிறுத்த வேண்டும். குறிப்பாக கிராமப் புறங்களிலுள்ள வீடுகளில் இரவு பகலாக பலத்த சத்தத்துடன் ஒலிபெருக்கி சாதனங்கள் ஒலிக்க விடப்படுகின்றன. இவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும். இந்த ஒலிபெருக்கி பாவனை தொடர்பில் பொலிஸார் உரிய அக்கறை எடுக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்வதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

அக்கராயன், ஓக.7
கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் இரண்டு தினங்கள் முகாமைத்துவத்தில் நிதி விருத்தி என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நடைபெற்றுள்ளது.
கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்கள் கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கின் நிறைவில் 54 பயனாளிகளுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
கெங்காதரன் குடியிருப்பு இம்மாஸ் நகர் மக்களை உள்ளடக்கியதாக கெங்காதரன் குடியிருப்பு பொது மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது. (க-18)

## வீட்டுத் திட்டத்துக்கு அபிவிருத்திக்குழு

வவுனியா, ஓக.7
வவுனியா அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கென அபிவிருத்தி குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த வியாழக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் வவுனியா பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.
இந்தக் குழுவின் தலைவராக வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அதிபர் வே.இந்திரனும், உபதலைவராக அபிவிருத்தி உதவியாளர் சு.வரதகுமாரும், செயலாளராக கல்வியியற் கல்லூரி அதிபர் கே.பேனாட்டும் மேலும் நான்கு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது இங்குள்ள வீதியின் சில பகுதிகள் மண் கொண்டு செப்பனிடப்பட்டு வருகின்றன. மின்சாரம் இரண்டு மாதத்தினுள் வரும் எனவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் வீடமைப்புத் திட்டத்துக்குத் தடையாகவுள்ள செயற்பாடுகளைக் களைவதெனவும் அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (க-402)

## மீண்டும் பதிவாளராக நியமனம்


முல்லைத்தீவு, ஓக. 7
கற்சிலைமடு தற்காலிக பிறப்பு இறப்புப் பதிவாளராக மீண்டும் எஸ்.சோமசேகரம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
கற்சிலைமடுவில் பிறப்பு இறப்புப் பதிவாளராகக் கடமையாற்றிய ப.நவரத்தினம் என்பவர் மரணமானதைத் தொடர்ந்து அந்த வெற்றிடத்துக்கு எஸ். சோமசேகரம் என்பவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். ஆனால் புதிதாக பெண் ஒருவர் நியமனம் பெற்றதால் இவர் விலகியிருந்தார். புதிதாக நியமிக்கப்பட்டவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டதால் மீண்டும் எஸ். சோமசேகரம் என்பவர் தற்காலிக அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# நன்னீர் மீன்பிடியின் விருத்திக்கு நடவடிக்கை

அக்கராயன், ஓக.7
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு குளங்களின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கென தலா 15 லட்சம் ரூபா செலவில் மண்டபங்களை அமைப்பது தொடர்பான கூட்டமொன்று கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு பூநகரி கரியாலை நாகபடுவான் குளத்தின் நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர் எஸ். ஜோன்சன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் நன்னீர் மீன்பிடி விரிவாக்க அலுவலர் எஸ். திலீபன் கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு ஓய்வு மண்டபம் அமையவுள்ள இடத்தைத் தெரிவு செய்ததுடன் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். பின்னர் பிற்பகல் 2 மணிக்கு இரணைமடுக் குளத்தின் நன்னீர் மீன்பிடிச் சங்கச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 80 வரையான நன்னீர் மீன்பிடியாளர்கள் கலந்து கொண்டனர்.
கிளநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக நன்னீர் மீன்பிடியாளருக்கான ஓய்வு மண்டபங்கள் தலா 15 லட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மன்னாரில் கைப்பற்றப்பட்டது பெரும் தொகையான கஞ்சா

மன்னார், ஓக.7
மன்னார் பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலத்தினுள் பெரும்தொகையான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
தலைமன்னார், மற்றும் மன்னார் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கஞ்சா அதிகளவில் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாகச் சுமார் 10க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
தென்னிந்தியாவில் இருந்து படகு மூலம் மன்னார் பகுதிக்கு கடத்தி வரப்பட்ட போதே பொலிஸார் கஞ்சாவை கைப்பற்றியதோடு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது.
இதே வேளை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதும் பெருந்தொகையான கஞ்சா மன்னார் நகரில் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவும், சந்தேக நபர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)



நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வருடாந்த சோதனை நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த ஹேரத் ஏற்றுக் கொள்கின்றார். (க-435)

## பாடசாலை மாணவர்களுக்கு நோய்த் தடுப்புக் குளிசைகள்

அக்கராயன், ஓக.7
கிளிநொச்சி வலயத்திலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய குருதிச்சோகை, மஞ்சள் காமாலை ஆகிய நோய்களைத் தவிர்க்கும் வகையில் அதற்கான குளிசைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையின் ஏற்பாட்டில் இந்தக் குளிசைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது பாடசாலை விடுமுறைக் காலம் என்பதால் இந்தக் குளிசைகள் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. போர்ச் சூழல், இடப்பெயர்வு, நலன்புரி நிலைய வாழ்வு போன்ற காரணங்களால் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் குருதிச் சோகை நோய் அதிகளவில் இனங் காணப்பட்டதுடன் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் இந்தக் குளிசைகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

**பாடசாலை விடுமுறைக் காலம் என்பதால் இந்தக் குளிசைகள் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.**

## வேலை தாருங்கள் ஜெபுர வாசிகள் மனு

கிளிநொச்சி, ஓக. 7
கிளிநொச்சி ஜெயபுரம் கிராம மக்கள் பூநகரியின் திக்குவில், செம்மங்குன்றுப் பகுதியில் அமைக்கப்பட்ட மரமுந்திரிகைத் தோப்பை அடிப்படையாகக் கொண்டு தமக்குத் தொழில் வாய்ப்பை வழங்குமாறு ஜனாதிபதியிடம் மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.
இந்த மனுவில்; 1983 ஆம் ஆண்டு ஜெயபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்து தொழில் வாய்ப்புக்கள் இல்லாதவர்களாக ஜெயபுரம் மக்கள் காணப்படுகின்றது. இங்குள்ள மக்களுக்கு வயல் நிலங்கள் கூட வழங்கப்படவில்லை. சுமார் 448 குடும்பங்கள் வசித்து வருகின்ற இந்தக் கிராமத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அடிப்படையாகக் கொண்டு தொழில் வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
மேற்படி மரமுந்திரிகை காணி ஆயிரம் ஏக்கருக்கும் மேலான விஸ்தீரணத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது.
விடுதலைப் புலிகளால் இந்த மரமுந்திரிகைத் தோப்பு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மின்சாரம், வீதிப் புனரமைப்பு ஒட்டுசுட்டானில் இன்னும் இல்லை

### பிரதேச மக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, ஓக. 7
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்படாததோடு, இங்குள்ள பிரதான வீதியொன்றும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கற்சிலைமடு, முத்துஐயன்கட்டு, பண்டாரவன்னி, வேராறு, கனகரத்தினபுரம், தட்டையர் மலை ஆகிய இடங்களுக்கு இதுவரை மின்சார இணைப்பு ஏற்படுத்தப்படாமையால் மக்கள் குப்பி விளக்கின் உதவியுடனேயே காலத்தைக் கழித்து வருகின்றனர். இங்கு வரும் அதிகாரிகள் தொடக்கம் அமைச்சர்கள் வரை எத்தனையோ வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இதுவரை எதுவுமே இடம்பெறவில்லை எனவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
ஒட்டுசுட்டான் கிராமத்துக்கும் முழுமையாக மின்சாரம் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.
இதேவேளை ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதி கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாது காணப்படுவதால் மக்கள் பல்வேறு அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இரவு வேளையில் இந்த வீதியில் பயணிக்கும் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## முல்லைத்தீவில் பெண்கள் கல்லூரி அமைக்குமாறு வேண்டுகோள்

மாங்குளம், ஓக்.7
முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கென தனியானதொரு பாடசாலையை அமைக்குமாறு அதிகாரிகளிடம் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், முல்லைத்தீவு என இரு கல்வி வலயங்கள் உள்ளன. இதில் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 60 பாடசாலைகளில் 4270 மாணவிகளும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள 59 பாடசாலைகளில் 9,634 மாணவிகளுமென மொத்தம் 119 பாடசாலைகளில் 13,904 மாணவிகள் கல்வி கற்கின்றனர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மகளிர் கல்லூரிகள் உள்ளபோதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமே இவை ஆரம்பிக்கப்படாததையிட்டு அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.
பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் கல்வி அமைச்சு இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் இது தொடர்பாக கவனத்தில் எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இதனை விடப் பல மாணவிகள் வறுமை காரணமாகவும், பாடசாலைகள் தொலைவில் காணப்படுவதாலும் தமது படிப்புகளை தொடர முடியாத நிலையில் பாதியில் கைவிடக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
இதனால் இந்தப் பகுதியில் பெண்கள் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படுவதோடு விடுதி வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை தேர்தலையொட்டி சிறகுகள் அமைப்பால் வீதி நாடகம்

கிளிநொச்சி, ஓக.7

வடக்கு மாகாண சபைத் தேர்தலையொட்டி கிளிநொச்சி மாவட்ட ''சிறகுகள்'' பண்பாட்டு மையத்தினர் ''சிரமம் பாராது'' என்னும் வீதி நாடகத்தை நடத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மக்கள் கூடும் இடங்களில் இந்த வீதி நாடகத்தை நடத்தி வருகின்றனர்.

மாகாண சபைத் தேர்தலை நோக்காகக் கொண்டு தேர்தலில் பங்குபற்ற பதிவுகள் மேற்கொள்வது, வாக்களிப்பு, அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த வீதி நாடகத்தை நடத்தி வருகின்றனர்.

ஐந்து மாவட்டங்களிலும் தேர்தலில் அனைவரையும் கலந்து கொண்டு வாக்களிக்கத் தூண்டும் வகையில் இந்த வீதி நாடகம் நடத்தப்பட்டு வருகிறது. பெருமளவு மக்களும் அதனை ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர். (வ-9)

## ஆன்மிக அறநெறி மையமாக உருவாகும் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயம்

வலி. வடக்கு, ஓக. 7

யாழ்.மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயம் ஆன்மிக அறநெறி மையமாக உருவாகி வருகின்றது. இந்த ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பு மேற்கொண்டு வருகின்ற அறப்பணிச் செயற்பாடுகளால் பிரதேச மக்கள் பெரும் நன்மையடைந்து வருவதாக பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாண்டவெட்டை, காட்டுப்புலம், வறுத்தலை போன்ற பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதார வசதிகளை மேம்படுத்தும் முகமாக அவர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து மருத்துவ முகாம்களை நடத்துதல், பொதுமக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு முருங்கை மரக் கன்றுகள் மற்றும் பப்பாசி போன்ற பழமரக் கன்றுகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. (எ-86)



தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாவகச்சேரி பிரதேச சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்த தரம் 5 பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத் தரங்கு இடம்பெற்றது. கருத்தரங்கில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். (வ-9)

## மாணவர் ஆளுமை மேம்பாட்டு செயலமர்வு தென்மராட்சியில்

தென்மராட்சி, ஓக. 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் பகுதித் தலைவர்களுக்கான வழிகாட்டலும், ஆலோசனைகளையும், பிரிவு பொறுப்பாசிரியர்களுக்கான மாணவர் ஆளுமையை மேம்படுத்தும் செயலமர்வு அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற செயலமர்வுக்கு வளவாளர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி செ.சிவரூபன், யாழ். மாவட்ட தாய் சேய் நல பொறுப்பதிகாரி வைத் தியக் கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர், யாழ்.மாவட்ட பாடசாலைகள் சுகாதாரம் பேணல் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி வீ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் தொடர்பான விரிவான கருத்துரைகள் அங்கு வழங்கப்பட்டன. (வ-9)

## கைத்தொழில் கண்காட்சி கைதடியில் இன்று

புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம்,ஓக.7

வடமாகாண உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் மாகாண கைத்தொழில் கண்காட்சி இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய தினங்களில் கைதடி நவீல்ட் பாட சாலையில் இடம்பெறவுள்ளது.

அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், தொழிற்றுறைத் திணைக்களம் ஆதியன பங்குபற்றவுள்ளன. இதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஆளு நரின் செயலாளர் ஆர்.விஜய லட்சுமி ஆகியோர் கலந்து கொள்வர். (வ-14)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். முக்கிய நபர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**இடபம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.



**மிதுனம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். தடைப்பட்ட வேலைகளை விடாமுயற்சியால் முடிப்பீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.



**கடகம்:** அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் கவனமுடன் செயற்படுங்கள்.



**சிங்கம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**கன்னி:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

### நாளை

ஆடி-23 வியாழக்கிழமை 08.08.2013

திதி: துதியை பி.இ. 05.53 வரை

நட்சத்திரம்: மகம் பி.இ. 12.29 வரை

சுபநேரம்: 07.34 - 09.04 வரை

இராகுகாலம்: 01.34 - 03.04 வரை



**துலாம்:** உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** பழைய நினைவுகளில் மூழ்குவீர்கள். திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை ஓரளவு குறையும்.



**தனுசு:** புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.



**மகரம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**கும்பம்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியயவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.



**மீனம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் சிக்கல்கள் தீரும். சோர்வால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 | 2 | 5 |
| 9 | 5 | 2 | 4 | 8 | 7 | 1 | 6 | 3 |
| 3 | 6 | 8 | 2 | 5 | 1 | 7 | 9 | 4 |
| 7 | 9 | 1 | 3 | 6 | 2 | 4 | 5 | 8 |
| 5 | 2 | 4 | 7 | 1 | 8 | 6 | 3 | 9 |
| 8 | 3 | 6 | 5 | 4 | 9 | 2 | 1 | 7 |
| 2 | 1 | 3 | 8 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 6 | 7 | 5 | 1 | 9 | 4 | 3 | 8 | 2 |
| 4 | 8 | 9 | 6 | 2 | 3 | 5 | 7 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | | 3 | | 1 | |
| 7 | 3 | 1 | | | 9 | 2 | 4 | 5 |
| 9 | | | 1 | | 2 | | | |
| | 7 | 4 | | | | | | 2 |
| | 9 | | 6 | | 7 | | 8 | |
| 2 | | | | | | 3 | 9 | |
| | | | 7 | | 4 | | | 3 |
| 3 | 1 | 9 | 2 | | | 5 | 7 | 4 |
| | 6 | | 3 | | | 1 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.



கொடிகாமம் ரயில் நிலையப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. வடமராட்சிப் பிரதேச ரயில் பயணிகள் பஸ் மூலம் வருகை தந்து கொடிகாமம் பகுதியில் இருந்தே தென்பகுதிக்கான பயணத்தை மேற்கொள்வர். கடந்த போர்ச் சூழல் காரணமாக இந்த ரயில் நிலையம் அழிவுகளைச் சந்தித்திருந்தது. தற்போது அழிவடைந்த கட்டடப் பகுதிகள் அகற்றப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந-122)

## மல்லாகத்தில் விபத்து ஓட்டோ சேதம்

இராணுவ பஸ்ஸொன்றும் ஓட்டோவொன்றும் மோதுண்டதில் தெய்வ தீனமாக யாருக்கும் காயங்கள் ஏற்பட்டாத போதிலும் ஓட்டோவின் பின்புறம் சேதம் அடைந்துள்ளது.
நேற்றுப் பகல் 11.00 மணியளவில் மல்லாகம் காங்கேசன் துறை வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.
சோடாக் கம்பனி வீதிக்கு திரும்ப முற்பட்ட ஓட்டோவை பின்னால் வந்த இராணுவ பஸ் மோதியதாகத் தெரிவிக் கப்பட்டது. உடனடியாக குறிப்பிட்ட இடத் துக்கு விரைந்த தெல்லிப்பழை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன் இராணுவப் பொலிஸாரும் விசாரணையை மேற்கொண்டுள்ளார்கள். (ஒ-86)

## அடுத்தவரை அடித்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக. 7
மற்றொருவரை அடித்துக் காயப்படுத்தியவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமும், ஒத்தி வைத்த சிறையும் விதித்தது நீதிமன்று.
காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த குறித்த நபர் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக மற்றொருவருடன் முரண்பட்டதுடன் அவரை அடித்துக் காயப்படுத்தியுமுள்ளார்.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.
இதனையடுத்து அவருக்கு அபராதமும் 6 மாதச் சிறைத் தண்டனையும்விதித்துஅதனை 5 வருடத்துக்கு ஒத்தி வைத்தது நீதிமன்றம். (த-4)

## ரூ. 50 லட்சம் மோசடி இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 7
தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு கூறி 50 லட்சம் ரூபாவைப் பெண்ணொருவர் கொடுத்தனுப்ப, அதனை அந்தப் பெண்ணின் கணக்கில் வைப்பிலிடாமல் தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு மோசடி செய்த இளைஞர் ஒருவரை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.
இன்று அவரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்புத்துறை, ஆனந்தன் வடலி வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். தனது நெருங்கிய உறவினரான குறித்த பெண்ணின் பணத்தையே இவர் இவ்வாறு மோசடி செய்துள்ளார்.
குறித்த பெண்ணின் மூத்த மகன் வெளிநாட்டில் உள்ளார். மகன் அனுப்பிய பணத்தை வீட்டில் வைத்திருந்த அவர் அதனை வங்கியில் வைப்பிலிடுமாறு கூறித் தனது வங்கிக் கணக்கு இலக்கத்தையும் கொடுத்து அனுப்பியுள்ளார். அதனைப் பெற்றுச் சென்ற குறித்த இளைஞன் பணத்தை பெண்ணின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடவில்லை. பல முறை கேட்டபோதும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்துள்ளார் அந்த இளைஞன்.
அதனால் வேறு வழியின்றி குறித்த பெண் பொலிஸில் கடந்த முதலாம் திகதி முறைப்பாடு செய்துள்ளார். அதன்படி நம்பிக்கைத் துரோகம், குற்ற முறையிலான ஆதனக் கையாடலும் பிரிவின் கீழ் குற்றம் சாட்டி இளைஞன்கைது செய்யப்பட்டான் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

## சமய சந்நிதிகளில்

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் நடைபெற்றுவரும் ஜோதிலிங்க இரதபவனியில் இன்று புதன் கிழமை வடமராட்சி காலை 7 மணிக்கு நெல்லண்டை பத்ரகாளி அம்மன் ஆலயத்திலும் பி.ப. ஒரு மணிக்கு கும்பமணல் கற்கும்ப அம்மன் கோயிலும் மாலை மணிக்கு புட்டலைப் பிள்ளையாரசு ஆலயத்திலும் இடம்பெறவுள்ளது. வலிகாமம் பகுதியில் காலை 7 மணிக்கு நகுலேஸ்வர ஆலயத்திலிருந்து திருப்பவனியும் பி.ப. ஒரு மணிக்கு மாதகல் அரசடிப் பிள்ளையார் ஆலயத்திலும் இரவு பனிப்புலம் அம்மன் ஆலயத்திலும் இடம்பெறும். கிளிநொச்சிப் பிரதேசத்தில் காலை 7 மணிக்கு திருவையாறு பிள்ளையரசு ஆலயத்திலும் நண்பகல் 12 மணிக்கு வட்டக்கச்சி கந்தசாமி ஆலயத்தில் பி.ப. 1.30 இற்கு ஐயப்பன் ஆலயத்திலும் பி.ப. 3 மணிக்கு மாவடி அம்மன் ஆலயத்திலும் மாலை 6 மணிக்கு சிவசக்தி அம்மன் ஆலயத்திலும் இரவு கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்திலும் ஸ்ரீ சோமநாதர் இரத பவனி காலை மற்றும் மாலை கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திலும் நடைபெறும். (ஒ-14)

★ ★ ★

துன்னாலை வடக்கு ஸ்ரீ மிந்திரன் அம்மன் ஆலய வருடாந்தப் பெரும் திருவிழாவில் நாளை வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப் பூர தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-8)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்ஷி சமேத காயாரோகண சுவாமிகள் ஆலய அம்பாளுக்கு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். (ந-7)

## திருடர்கள் கைவரிசை

சாவகச்சேரி வடக்கு இருவத்திப் பிள்ளையார் ஆலயம் மற்றும் அதற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் என்பன சனிக்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளன.
ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் திருடப்பட்டதுடன், ஆலயத்தில் வைக் கப்பட்டிருந்த எழுந்தருளி விக்கிரகத்தை திருடர்கள் திசை மாற்றி வைத்து விட்டும் சென்றுள்ளனர். அத்துடன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையமொன்றும் உடைக்கப்பட்டு கிற்காட், பிஸ்கட் பெட்டிகள், சோப் வகைகள் உட்பட சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளன. திருட்டுச் சம்பவம் தொடர் பாக சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
10.05.1930

மறைவு
08.07.2013

அமரர் கலாபூசணம்
செல்லப்பா நடராசா

கடந்த (08.07.2013) அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம், குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த எமது தந்தை செல்லப்பா நடராசா அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், தொலைபேசி, தந்தி, இணையத் தள மூடாக அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள், அஞ்சலிப் பிரசுரம் அச்சிட்டு வழங்கியவர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ மான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (05.08.2013) திங்கட்கிழமை நடைபெற்றதோடு, இன்று (07.08.2013) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரது வீட்டில் நடை பெற இருப்பதால், உற்றார், உறவினர்கள், நண்பர்களை அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (30202) (6.3)

குடும்பத்தினர்.

## நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் மத்தியஸ்தர் சங்கத் தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடை பெற்றது.
தலைவராக பா.முகுந்தன், செயலாளராக ச.கர்ணாநந்தன், பொருளாளராக ம.மனோராஜ், உபதலைவராக ம.சதீஸ் கரன், உப செயலாளராக எஸ்.சிவச்செல்வன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக கமல், சுபேந்திரா, நாகராசா, சஞ்சயன், ஜெயப்பிரதாபன், ரூபவர்ணன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-422)

## சீரற்ற காலநிலை தொடரும்

கொழும்பு,ஒக.7
புத்தளத்திலிருந்து பொத்துவில் ஊடாக கொழும்பு மற்றும் காலி வரையான கடற் பிரதேசங்களில், கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்தப் பிரசேங்களில் மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
இதேவேளை மத்திய, சப்ரகமுவ, மேற்கு, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் பருத்தித்துறை மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் போதனாசிரியராகக் கடமையாற்றும் திருமதி V. நீலாதேவி அவர்களின் அன்புத் தந்தை
கணபதிப்பிள்ளை கந்தசாமி
அவர்கள் 23.07.2013 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (C/10782) (6.3)

பிரதேச செயலரும்
அனைத்து ஊழியர்களும்.

கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக (கிராம அபிவிருத்தித் திணைக்களம்) கடமையாற்றும் திருமதி ஸ்ரீரஞ்சினி ஸ்ரீகரன் அவர்களின் அன்புத் தந்தை
கணபதிப்பிள்ளை கிருஷ்ணன்
அவர்கள் 31.07.2013 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (C/10781)(6.3)

பிரதேச செயலரும்,
அனைத்து
ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் சேவை

நல்லூர் பிரதேச சபையின் மக்களை நோக்கி என்ற செயற்பாட்டின் கீழ் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.
இந்த நடமாடும் சேவை மணியந்தோட்டம் 6 ஆம் குறுக்குத் தெரு முன்பள்ளியில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும்.
இந்த நடமாடும் சேவையால் இதில் அரியாலை, மணியந்தோட்டம், உதயபுரம், பூம்புகார் பகுதி மக்கள் பயனடைவர் என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்துள்ளார். (ந-7)




புலோலியூர் பரா.ரமேஸ் எழுதிய ''அன்புப் பிள்ளைகளே'' சிறுவர் பாடநூல், இறுவட்டு ஆகியவற்றின் வெளி யீட்டு விழா புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது நூலாசிரியர் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ந-8)

## பூநகரியின் புகழ் மாலை

கிளி/ பூநகரி மகா வித்தியாலயத்தில் கலை கலாசார பேரவையின் ஏற்பாட்டில் பூநகரியின் புகழ்மாலை இறுவட்டு வெளியீடு கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.
பூநகரி சரவணப் பொய்கை குடும்பத்தினர் தயாரித்து தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி கணேஷின் இசையில் உருவான கிராமிய பக்திப் பாடல்கள் அடங்கிய இந்த இறுவட்டில் அடங்கியுள்ள பாடல்களை தென்னிந்தியக் கலைஞர்கள் பாடியிருக்கின்றார்கள்.
இந்த வெளியீட்டு நிகழ்வின்போது தென்னிந்தியக் கலைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.

## மடுத் திருவிழா நேற்று ஆரம்பம்



குருநகர், ஓக.7
மடுத்திருப்பதியின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. எதிர் வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறு நாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை திருநாட்திருப்பலிகளும் நடைபெறும். அன்று காலை முதலாம் திருப்பலி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.
ஆலயத்தில் ஆராதனைகள் வழமைபோல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடைபெறும். (ந-51)

## சிறுவர் சபை அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.7
வேலணை பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் சபை திங்கட்கிழமை அமைக்கப்பட் டுள்ளது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போதே சிறுவர் சபை அமைக்கப்பட்டுள்ளது. (ந-7)

## டெங்குக் கட்டுப்பாட்டு கூட்டம் இன்று

நல்லூர் பிரதேச செயலகத்தின் டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.
பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளை கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## கவிதைச் செயலமர்வு

வட மாகாண பண்பாட்டலு வல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன் கர வெட்டிப் பிரதேச செயலகத் தில் கவிதைச் செயல மர்வு நடைபெறவுள்ளது.
இந்தச் செயலமர்வு தகுதியான வள வாளர் களைக் கொண்டு பத்து அமர்வுகளாக நடை பெறும்.
இதில் கலந்து கொள்ள விரும் பும் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கீழ்வரும் பகுதி களைச் சேர்ந்த ஆர்வ முடைய வர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ந)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.7
கிளிநொச்சி மாவட்ட தொழில் பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையால் ஆரம்பிக் கப்படவுள்ள புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தாதி உதவியாளர், கணினி வன்பொருள் தொழில்நுட்பம், தட்டச்சாளர்கள் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட முகாமையாளர், ஷைற்றா, ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் எ.எம்.அல்பிரட் தெரிவித்துள்ளார். (ந-14)



Amāna Takaful
குருத்ததுணை
பெற்றோர்கான காப்பீடு
உலகையே ஒளிமயமாக்கிய தாய் தந்தையின் பாசத்திற்கு நன்றியை ஈடாக்க
உங்களின் அன்பார்ந்தவர்களுக்காக விசேடமாக
உருவாக்கப்பட்ட காப்புறுதி (55)*
* நிபந்தனைகளுக்குட்பட்டது
Amāna Takaful
தொடர்புகளுக்கு: +94 11 750 1000
நாடெங்கிலும் உள்ள எங்கள் கிளை வலையமைப்பின் ஊடாக
(C/10838)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலி பணநோட்டுக்கள் வைத்திருந்தவர் கைது

கொழும்பு,ஓக.8

கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் 93 போலி இரண்டாயிரம் ரூபா பணநோட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குருவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 32 வயதானவர் என்று புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இவ்வுலகிற்கு
22.01.1992

இறையடிக்கு
07.08.2012

**செல்வன் கந்தசாமி மதுஷன்**

நீ எங்கே? நீ எங்கே? மது நீ எங்கே!
உன்னைக் காணத் துடிக்கும்
உறவுகள் இங்கே!
நாம் வாழ்ந்த ஊரை விட்டு
நாம் போகவில்லை சகோதரா!
நீ போனது எங்கே?.

194A, ஸ்ரீராமபுரம்,
வவுனியா.

அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கை

(35218)(4.6.3)

### கண்ணீரோடு 24ஆவது பிறந்த தினமும் நான்காண்டு நினைவும்

முத்தாக 07.08.1989



வித்தாக 19.01.2009

**சிறிணிவாசன் சுபோதினி**

4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு



கண்முடித்தூங்குமா -எங்கள் கண்கள்
எங்கு திரும்பினாலும் நீதானே தெரிகிறாய்
எங்கள் எண்ணமெல்லாம் உன் வண்ணம் தான்
ஊரும் பாரும் வியந்திருக்க-காலம்
எல்லாம் நீ இருப்பாய் என்றிருக்க
விழ்ந்தாயோ மண்ணில்-எத்தனை
சொந்தம் இருந்தென்ன உன்னைப்போல் ஓர்
பிள்ளை வருமா-கண்ணீரோடு
காத்திருக்கிறோம் இன்னும் ஓர் பிறப்பிருந்தால் பிறந்துவா-எங்கள்
அன்புக் குழந்தையாய்.

உன் நினைவால் வாடும்
அப்பா க.சிறிணிவாசன்
(சாலை முகாமையாளர் இ.போ.ச முல்லைத்தீவு)
அம்மா, தம்பி.

(30278)(10,6,3)

### ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
15.04.1941

மறைவு
07.07.2013

**திருமதி இராசரட்ணம் யோகமலர்**

கடந்த (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.08.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும் கடந்த 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அன்னாரது இறுதிக்கிரியையின் போது நேரில் கலந்து கொண்டவர்களுக்கும்,தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதுக்கோயிலடி,
கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு.
கொக்குவில். (30258)(11.5.6) குடும்பத்தினர்.

# சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்க கிடைத்தது அனுமதி

திருகோணமலை,ஓக.7

சம்பூர் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.



திருகோணமலை, சம்பூரில் 500 மெகாவோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய அனல் மின் நிலையத்தை இந்தியா அமைக்க உள்ளது.

இலங்கை மின்சாரசபை இந்திய அரசின் உதவியுடன் மின் உற்பத்தி நிலையப் பணிகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பூர் அனல் மின் நிலைய திட்டம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளின் பின்னரே குறித்த திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவுடனான இந்தத் திட்டத்திற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ச)

## போதைப் பொருள் குற்றங்களுக்காக கைதாவோர் அதிகம்

**சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல்**



கொழும்பு,ஓக.7

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவிக்கின்ற கைதிகளில் 64 வீதமானோர் போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக தண்டனை வழங்கப்பட்டவர்கள் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் நெரிசல் ஏற்படுவதற்கு இதுவும் ஓர் காரணமாக அமைந்துள்ளதுஎன்றுசிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரி வித்தார்.

பிரதேச ரீதியில் கணிக் கப்படும் போது, கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான போதைப் பொருள்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## வெளிநாடு சென்ற பேராசிரியர்களை நாட்டுக்குத் திருப்பி அழைக்கத் தீர்மானம்

கொழும்பு,ஓக.7

வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பல்கலைக்கழக பேராசிரியர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உடன்படிக்கைகளின் அடிப்படையில் கடந்த 30 வருடங்களுக்குள் பேராசிரியர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஷெனிகா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

அவர்களில் பெரும்பாலானோர் நாட்டுக்கு மீண்டும் திரும்பவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம், கிழக்கு ஆகிய பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

> யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பேராசிரியர்கள் நாட்டுக்கு திரும்பும் பட்சத்தில் அவர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### நினைவழியா ஓராண்டு





**மரியதாஸ் நேவிஸ் டெல் றொக்சன்**

தோற்றம் 26.02.1976
மறைவு 08.08.2012

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

வாழ்வும் சாவும் நன்றே என்பதை நிருபித்த மரியதாஸ் நேவிஸ் டெல்றொக்சனின் ஓராண்டு நினைவு திருப்பலி பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 08.08.2013 வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு நடைபெறும்.

இந் நினைவு திருப்பலியிலும்,அதனைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர் - பாசையூர்.

(30296)(10,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**சந்திரசேகரம் ஸ்ரீதரன்**

அவர்களின் பாசமிகு தந்தை

**சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
(சி/10786) (4.6.3) **பிரதேச செயலகம், வேலணை.**

---

# 33ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
12.12.1952

உதிர்வு
07.07.2013

## திருமதி தவராசா சந்திரா

**பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய்**
**குடும்பத்தின் தலைவியாய் எங்களை வழி நடத்திய தெய்வமே!**
**மாதம் ஒன்று நகர்ந்தாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது.**
**எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து**
**ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த 07.07.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி தவராசா சந்திரா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(07.08.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பாரதி வீதி,நாயன்மார்கட்டு.** (30298)(3.5.6) **குடும்பத்தினர்.**

---

# நாரைப் பறவைகளை சுட்டவர் மாட்டினார்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, கண்ணகிபுரத்திலுள்ள வயல் பிரதேசத்தில் நாரைப் பறவைகளைத் துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படும் ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து சட்ட விரோத துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து கண்ணகிபுரம், ஆணைப்பாவெளி வயல் பிரதேசத்தில் கடற்படையினர் மறைந்திருந்தபோது நாரைப் பறவைகளைத் துப்பாக்கியினால் சுட்டுவீழ்த்தியதாகக் கூறப்படும் ஒருவரை கடற்படையினர் கைது செய்தனர் என்று பொலிஸார் கூறினர்.

(ச)

---

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் உட்பட வட மாகாண நகரங்களுக்கிடையிலான நகராந்திர பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சகல பஸ் வண்டி உரிமையாளர்களுக்குமான விசேட அறிவிப்பு**

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்திற்கான நகராந்திர பயணிகள் போக்குவரத்து சேவையில் காணப்படுகின்ற பிரச்சனைகள் தொடர்பில் கலந்தாலோசித்து அக்குறித்த சேவையை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் பஸ் உரிமையாளர்களுடனான விசேட கலந்தாலோசனையொன்றை நடத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

திகதி : 15-08-2013
நேரம் : மு.ப. 10.00
இடம் : தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

அக்குறித்த பாதையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் (பயணிகள் சேவை அனுமதிபத்திரத்துடன் / அனுமதிப்பத்திரம் இன்றி) இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இக் கலந்தாலோசனையில் பஸ் வண்டியின் உரிமையாளர் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்பதோடு எக்காரணம் கொண்டும் பஸ் உரிமையாளரின் பிரதிநிதியாக வருபவர் இக்கலந்தாலோசனைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

மேலும் இக் கலந்தாலோசனைக்கு சமூகமளிக்க தவறும் பஸ் உரிமையாளர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முன்னுரிமை வழங்கி செயற்படாது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
இலக்கம் 241,
பார்க் வீதி.
கொழும்பு - 05.

---

# 21ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## முருகர் வைத்தியலிங்கம்



தோற்றம் 05.06.1927
மறைவு 18.07.2013

அப்பா எங்களைத் தவிக்கவிட்டு திடீரென்று
இறைவனடி சேர்ந்தீரே!
பிள்ளைகள் நாங்கள் கடல் கடந்து
பறந்தோடி வந்தோம் அப்பா!
எங்களை அரவணைக்க யாருமில்லை
உங்கள் பேரப்பிள்ளைகளையும் தவிக்கவிட்டு
தனியே சென்றீர்

கடந்த 18.07.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் முருகர் வைத்தியலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.08.2013) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* **இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**466/2, முதலாம் ஒழுங்கை,**
**சஞ்சீவன் கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிள்ளைகளும்,**
**பேரப்பிள்ளைகளும்.**

(30302)(10,6,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைப் பிரதிநிதிகளுக்கான நேர்முகத் தேர்வு

தென்னிலங்கையிலுள்ள பிரபல்யம் வாய்ந்த கம்பனி ஒன்றுக்காக யாழ். குடாநாட்டில் பணிபுரியக்கூடிய விற்பனைப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பொருட்டு மேற்படி நேர்முகத் தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை (08.08.2013) காலை 10 மணிக்கு இல.469, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள லங்கா டைல்ஸ் காட்சியறையில் நடைபெறும்.

**தகுதியும் ஆர்வமும் உடையோர் உரிய ஆவணங்களுடன் குறித்த நேரத்திற்கு சமூகம் தரவும்.**

(சி/9774)

## பதவி வெற்றிடம்- கூலித் தொழிலாளர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரர்கள் களஞ்சியத்திலிருந்து பொருள்களை ஏற்றி இறக்கக்கூடிய உடல்கட்டான தகைமை உடையவர்களாக இருத்தல் வேண்டும். தகுதியும் அனுபவமும் உடையவர்கள் கீழ் குறிப்பிடப்பட் டுள்ள முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

**நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்**
**இல. 92 C, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/9775) (16,16)

## புதிய வீடு உடன் விற்பனைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கும் மனோகராத் தியேட்டர் சந்திக்கும் இடையில் கில்னர் லேனில் கிணறு, நீர்த்தாங்கி, மின்சாரம், சுற்றுமதில், பல்கனி, 5 றூம், மாபிள் பதிக்கப்பட்ட சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு..

(30385) (16,16,14) **தொடர்பு: 077 9088 564**

## புதிய வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரபல பாடசாலைகளுக்கும் கச்சேரி அண்மையிலும் அமைந்துள்ள வீடு ஒன்று விற்பனைக்குண்டு. 2 பரப்பும் 2 குளியும் கட்டுக் கிணறு சுற்றிவர மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 0773098388, 0212051064**


முதலாம் பக்கத் தொடர்ச்சி

# இராணுவ விசாரணையை ஒருபோதும் ஏற்கமுடியாது

ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெலிவேரியவில் சுத்தமான குடிதண்ணீர் வேண்டுமெனப் போராடிய மக்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அப்பாவி மாணவன் ஒருவனும், வேலைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மக்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் இருக்கும்போது இராணுவத்தை ஈடுபடுத்தியது ஏன்?

மக்களின் ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்காக தண்ணீர் பிரயோகம், புகைக்குண்டுப் பிரயோகம், தடியடிப்பிரயோகம், இறப்பர் தோட்டா பிரயோகம் என பல வழிமுறைகள் இருக்கின்றபோது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது ஏன்? ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது ஏன்?

அத்துடன், இச்சம்பவம் தொடர்பிலான இராணுவ விசாரணையை ஏற்கமுடியாது. சுயாதீன விசாரணைக்குழு அமைக்கப்பட்டு நாட்டுக்கு உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும். அந்த மக்களின் சுத்தமான குடிதண்ணீர் கோரிக்கைக்குத் தீர்வு வழங்கப்படவேண்டும்.

வெலிவேரிய சம்பவத்தில் பொதுமக்கள் எவரும் இராணுவம் மீது தாக்குதல் நடத்தவில்லை; பெற்றோல் குண்டுகளை வீசவில்லை; துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை; நாம் இராணுவத்தைக் குற்றம்சாட்டவில்லை. அதற்கு உத்தரவிட்ட அதிகாரிகளைத்தான் குற்றம் சாட்டுகின்றோம்.- என்றார். (த-சி)

# நட்பு நாடாக இலங்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது

பட்டுள்ளதை உங்களுக்கு நான் எழுதிய கடிதங்களில் தெரிவித்து இருந்தேன்.

ஆனால் மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அப்பாவி தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் தொடர்ந்து வாடி வருகிறார்கள்.

இந்த நிலையில் கடந்த 3ஆம் திகதி இராமேஸ்வரத்தில் மீன் பிடிக்கச் சென்ற 20 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அத்துமீறிச் செயற்பட்டுச் சட்ட விரோமாக கடத்திச் சென்றுள்ளனர்.

மத்திய அரசின் இந்த உறுதியற்ற நடவடிக்கையால்தான் சிங்கள ராணுவம் துணிச்சல் கொண்டு தொடர்ந்து அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு மத்திய அரசு தூதுவர்கள் மட்டத்தில் தலையிட்டு உறுதியான பதில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாது என்று தூதுவர் மூலம் கடுமையாகக் கண்டிக்கவேண்டும். - என்றுள்ளது. (த)

# தொலைபேசி அழைப்பினால் பறிபோனது 16 ஆயிரம் ரூபா

அதில் கிடைக்கும் பணத்தில் தவணைக் கட்டணம் செலுத்தி வந்தார்.

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் அந்த இளைஞனுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் 'டயலொக்' பரிசுத் திட்டத்தில் உங்களுக்கு 5 லட்சம் ரூபா கிடைத்துள்ளது. இந்தத் தொகையினைப் பெற பின்வரும் மூன்று தொலைபேசி இலக்கங்களுக்கு 16 ஆயிரம் ரூபாவினை 'ஈ - இஸட்' (EZ) மூலம் அனுப்பி வைக்குமாறு கூறப்பட்டுள்ளது.

அதனை நம்பி செயலில் இறங்கிய இளைஞர் வேலைத் தளத்திலிருந்து புறப்பட்டு நுணாவில் மேற்கில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றார். அங்கு ஓட்டோவுக்கான தவணைக் கட்டணம் செலுத்த வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு சென்று யாழ்ப்பாணத்தில் உள்ள 'பூட் சிற்றி' ஒன்றுக்குச் சென்று 'ஈ - இஸட்' மூலம் குறித்த இலக்கங்களுக்குப் பணத்தை அனுப் பினார்.

அதன் பின்னர் வேலைத் தளத்துக்குச் சென்ற போது அங்கு பணியில் ஈடுபட்டிருந்த நண்பர்கள் அது குறித்து அவரிடம் விசாரித்து உள்ளனர். இதன் பின்னரே இவர் ஏமாற்றப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து இளைஞர் அழைப்பு விடுவிக்கப்பட்ட தொலைபேசி இலக்கத்துடனும் வழங்கப்பட்ட மூன்று தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொண்ட போது அவை அனைத்தும் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இளைஞர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடச்சென்ற வேளையில் இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று முறையிடுமாறும் கூறியதால் அவர் கண்ணீருடன் யாழ்ப்பாணம் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)


## கணக்கு உதவியாளர்/ எழுதுவினைஞர்/ விற்பனையாளர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கணக்கியலில் தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்தும் கோரப்படுகின்றன. விற்பனைத் துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். கிளிநொச்சி நகரப் பகுதிக்கு அருகில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-**
**நாராயணா செரமிக் யுனிற்**
**இல. 113, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

விண்ணப்ப முடிவு திகதி:- 13.08.2013 (சி/9776) (16,16)

## புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான வருடாந்த இலவசக் கருத்தரங்கு



காலம் : 10/08/2013 (சனிக்கிழமை)

யாழ் - கோப்பாயில்

இடம்: கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபம்

நேரம் : காலை 09.00 மணி தொடக்கம் 02.00 மணிவரை

வளவாளர்கள்

பி. அம்பிகைபாகன், ரீ. பேரின்பராஜா

(மூத்த பிரபல ஆசிரியர்)

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடநெருக்கடிகளையும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 09/08/2013 முன்னதாக 077 9122918 / 077 0711850 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முற்பதிவுகளை செய்துகொள்ளவும். பாடசாலை ரீதியில் பங்குகொள்ளும் மாணவர்கள் பாடசாலைஊடாக முற்பதிவினை மேற்கொள்ளமுடியும்.

ஒழுங்கமைப்பு

மதுரம் இன்ஸ்ரிடியூட் (டச்சு வீதி, கோப்பாய் தெற்கு)

கற்பகாஸ் கலாசார கழகம் (கோப்பாய் தெற்கு)

முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் (கோப்பாய் தெற்கு)

தொடர்புகளுக்கு

011 5738855 / 071 6850005

ஊடக அனுசரணை உதயன்


## மரண அறிவித்தல்

### தம்பிராசா செல்வக்குமார்



மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா செல்வக்குமார் கடந்த 29.07.2013 ஓமானில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.08.2013) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் புத்தளம் சேனைக்குடியிருப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, 5ஆவது ஒழுங்கை,
அநுராதபுர வீதி,
புத்தளம்.

தகவல்:
குடும்பத்தினர்.


(30299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சென்றலின் அதிரடியில் மண்டியிட்டது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஓக.8

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடந்தும் பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகமும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில்துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளைஇழந்து 153ஓட்டங்களைப் பெற்றது.

அதில் அன்ரூ 63 ஓட்டங்களையும், யசிந்தன் 29ஓட்டங்களையும்,றோகான் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக சாள்ஸ், கோபி ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சௌமிதரன், வதுஷன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

154 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அதில் ஜேம்ஸ் 41 ஓட்டங்களையும், யூலியஸ் 27 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக றஜீவ்குமார் 4 இலக்குகளையும், றோகான் 3 இலக்குகளையும், சுவாதிஸ், யசிந்தன், சலிஸ்ரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற-23)

# கிரிக்கெட் சபையின் நற்பெயர் முக்கியம்

## ராகுல் ராவிட் கருத்து

இந்திய கிரிக்கெட் தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்க கிரிக்கெட் சபையின் நற்பெயர் முக்கியமானது என இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.



இந்தியக் கிரிக்கெட்டின் அண்மைக்கால குழப்பங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வாண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் போது ஆட்டநிர்ணம் இடம் பெற்றதாக ராகுல் ட்ராவிட் தலைமை தாங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வீரர்கள் மூவர் கைது செய்யப்பட்டதோடு, அவ்வணியின் உரிமையாளர் ராஜ்குந்த்ரா மீதும் சூதாட்டக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ராகுல் ராவிட், ''இந்தியாவில் ஏராளமான இரசிகர்கள் கிரிக்கெட்டை பின்பற்றுகின்றனர். அதன் காரணமாகவே கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவில் அதிகம் உருவாகின்றனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கைகள் சிறப்பாக அமையாதுவிடின் இந்திய கிரிக்கெட்டின் மீதான நற்பெயர் இல்லாது போகும். அது சிறப்பானதல்ல" என்று தெரிவித்தார்.(ற)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்:

பி.ப 4மணி

வல்வை விளையாட்டுக் கழகம் எதிர் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகம்.(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஓக.7

ஸ்ரீலங்கா கிரிக்கெட சபை நடத்தும் 17 வயதுப் பிரிவினருக்கான பிரிவு III இற்க்கான கிரிக்கெட் சுற்றுத் தொட ரில் 2ஆவது சுற்றுத் தொடரில் இன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தவரோ தயக் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணி மோதவுள்ளது.

(ற-23)



பாட்டா மற்றும் சண்டேரைம்ஸ் பத்திரிகை இணைந்து நடத்திய 'பாடசாலை பையன் 2013' கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்றது. அதில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு கிரிட்கெட் அணியினர் வடமாகாணத்தில் சிறந்த கிரிக்கெட் அணியாகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட அணி வீரர்களுடன் பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுநர். (ற-23)

# வென்றது சென்.லூட்சியஸ்



யாழ்ப்பாணம், ஓக.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் பள்ளிமுனை சென்.லூட்சியஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியஸ் விளையாட்டுக்கழகமும் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

அதில் மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற)

# மைக்கலை வீழ்த்தியது கரவெட்டி ஞானம்ஸ்

பருத்தித்துறை, ஓக. 7

பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினரால் வடமராட்சி, விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் சம்பியனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கரவெட்டி ஞானம்ஸ் அணியின் தலைவர் சுகந்தன் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதையடுத்துக் களமிறங்கிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணியின் ஓட்ட வேகம் பந்துப் பரிமாற்றம் ஒன்றுக்கு 10 ஆகக் காணப்பட்டது.

எனினும் ஆட்டத்தின் இறுதி நேரத்தில் ஞானம்ஸ் அணியினரின் ஓட்டவேகம் கட்டுப்படுத்தப்பட்டது. இறுதியில் ஞானம்ஸ் அணியினர் 4.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றனர்.



ஞானம்ஸ் அணியின் சார்பாக [illegible] 18 ஓட்டங்களையும், சேந்திரன் 17 ஓட்டங்களையும், கீதன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மைக்கல் அணி சார்பாக கபிலன் 2 இலக்குகளையும், பிரணவன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 62 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மைக்கல் அணியினர் ஆரம்பத்திலேயே இலக்குகளைப் பறிகொடுத்தனர். அதனால் இக்கட்டான நிலையில் காணப்பட்ட மைக்கல் அணிக்கு அச்சுதன் கை கொடுத்தார்.

எனினும் மறு முனையில் எந்தவொரு வீரரும் ஒத்துழைப்பு வழங்கத் தவறியதால் மாலி சந்தி மைக்கல் அணியினரின் ஓட்ட எண்ணிக்கை மந்த கதியில் சென்றது.

முடிவில் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவு பெற 3 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்ற மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகினர்.

அந்த அணியின் சார்பாக அச்சுதன் 23 ஓட்டங்களையும், தினோஜன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஞானம்ஸ் அணியின் குணதீபன் 2 இலக்குகளையும், துவிகரன் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் அணியின் குணதீபன் தெரிவு செய்யப்பட்டார்.

(ற-34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி

தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது 20/20 போட்டியில் ஆறுதல் வெற்றியை பெற்றது இலங்கை.


ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆயினும் முதலாவது பந்திலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட்ஸை குலசேகரவின் பந்தில் ஓட்டமெதனையும் பெறாமலேயே இழந்தது தென்னாபிரிக்கா. அதன் பின்னர் மற்றைய துடுப்பாட்ட வீரரான டீகொக் 16 ஓட்டங்களுடன் மென்டிசின் பந்தில் வீழ்ந்தார். இதனால் குறைந்த ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்கா சுருண்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அணித் தலைவர் பிளஸிஸு"ம் டுமினியும் இணைந்து இலங்கைப் பந்து வீச்சாளர்களை திணறடித்தனர். இருவரும் இணைப்பாட்டமாக 112 ஓட்டங்களைப் பகிர தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. மிகச் சிறப்பாக ஆடிய பிளஸிஸ் 65 பந்துகளில்3 சிக்ஸர்கள் அடங்கலாக 85 ஓட்டங்களை பெற்றிருந்த



போது லக்மாலின் பந்தில் இலக்குச் சிதறி வெளியேறினார். தொடர்ந்து அதிரடியில் குதித்த டுமினி அரைச் சதம் கடக்க தென்னாபிரிக்க அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. டுமினி ஆட்மிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் குலசேகர, லக்மால், மென்டிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.


164 ஓட்டங்கள்என்றஇலக்கை துரத்தத் தொடங்கிய இலங்கை அணிக்கு டில்சானும், மஹேல ஜெயவர்த்தனவும் சிறப்பான அடித்தளம் இட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 77 ஆக இருந்த போது பர்னலின் பந்தில் வீழ்ந்தார் மஹேல (33 ஓட்டங்கள்). அண்மைக்காலமாக தொடர்ந்து சொதப்பி வரும் குசல் பெரேரா நேற்றும் ஒரு ஓட்டத்தோடு நடையைக் கட்டினார். அதன் பின்னர் களமிறங்கிய அணித் தலைவர் சந்திமால், மத்தியூஸ் ஆகியோர் தலா 14 ஓட்டங்களோடு பவிலியன் திரும்பினர். எனினும் மறு முனையில் சிறப்பாக ஆடி அரைச் சதம் கடந்திருந்த டில்சானுடன் இணைந்து கொண்டார் திஸரபெரேரா. வந்த வேகத்திலேயே பெரேரா எல்லைக் கோட்டை நோக்கி அடிக்கடி பறக்க வைக்க வெற்றி இலங்கையின் பக்கம் வந்து சேர்ந்தது. 18.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தது இலங்கை.

களத்தில் 51 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 74 ஓட்டங்களுடன் டில்சானும், 11 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களுடன் திஸர



பெரேராவும் ஆட்டமிழக்காது இருந்தனர். பந்து வீச்சில் வைவேச 2 இலக்குகளையும் பர்னல், தஹீர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் வீழ்த்தினர். நேற்றைய போட்டியில் ஆட்டநாயகனாக டில்சானும், தொடர் நாயகனாக டுமினியும் தெரிவானார்கள். தொடரை 2:1 என்ற ரீதியில்தென்னாபிரிக்கா தன்வசமாக்கிய. (ங)

## ரூனியை விற்காத செல்சி



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் வீரர்களுக்கான பரிமாற்றத்தில் மன்செஸ்ரர் யுனைற்றற் அணியின் வீரர் வெய்ன் ரூனிக்கு முன்வைக்கப்பட்டிருந்த செல்சி அணியின் 30 மில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ் பெறுமதி கொண்ட பரிமாற்றக் கோரிக்கை மன்செஸ்ரர் யுனைற்றற் அணியால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

செல்சி அணி இதற்கு முன்னதாக 20 மில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்ஸ்களுக்கு ரூனியை மாற்றித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அந்தக் கோரிக்கை ஏற்கனவே நிராகரிக்கப்பட்டிருந்தது. இதனால் கோரிக்கைத் தொகையை செல்சி அணி 30 மில்லியன் பவுண்ட்ஸாக அதிகரித்திருந்தது. எனினும் இந்தக் கோரிக்கையையும்

மன்செஸ்ரர் யுனைற்றற் அணி நிர்வாகம் நிராகரித்துள்ளது.

மன்செஸ்ரர் யுனைற்றற்றின் முன்னாள் பயிற்றுவிப்பாளரான சேர் அலெக்ஸ் பேர்ஹு"சனு டன் வெய்ன் ரூனிக்கு முரண்பாடுகள் காணப்பட்டிருந்தது. ஆயினும் தற்போது புதிய பயிற்றுவிப்பாளரான டேவிட் மொயஸ் ரூனியை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. (ங)

# ஆஸியின் வெற்றிக் கனவு தகர்ந்தது மழையால்




இங்கிலாந்து-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் 3ஆவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றி வாய்ப்புக் காணப்பட்ட போதிலும், மழை காரணமாக முடிவேதும் எட்டப்படாததால் ஆஸியின் வெற்றிக்கனவு தகர்ந்தது.

ஓல்ட் ட்ரஃபோர்ட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க்கின் 187 ஓட்டங்கள், ஸ்டீவன் ஸ்மித்தின் 89 ஓட்டங்கள், கிறிஸ் றொஜர்ஸின் 84 ஓட்டங்கள், மிற்சல் ஸ்ரார்க், பிரட் ஹடின் ஆகியோர் ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்த 66, 65 ஓட்டங்கள் என்பவற்றின் துணையோடு 7 இலக்குகளை இழந்து 527 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிறேம் ஸ்வான் 5 இலக்குகளையும், ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

> பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹரிஸ் 2 இலக்குகளை யும், பீற்றர் சிடில் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மைக்கல் கிளார்க் தெரிவானார்.



தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, கெவின் பீற்றர்சனின் 113 ஓட்டங்கள், அலஸ்ரெயர் குக்கின் 62 ஓட்டங்கள், இயன் பெல்லின் 60 ஓட்டங்கள் என்பவற்றின் மூலம் 368 ஓட்டங்கள் என்ற கௌரவமான இலக்கை எட்ட முடிந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 4 இலக்குகளையும், மிற்சல் ஸ்ரார்க் 3 இலக்குகளையும், றயன் ஹரிஸ் 2 இலக்குகளையும், நேதன் லையன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

159 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி டேவிட் வோணரின் 41 ஓட்டங்கள், மைக்கல் கிளார்க்கின் ஆட்டமிழக்காத 30 ஓட்டங்களின் துணையோடு 7 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிரெஸ்னன், ஜேம்ஸ் அன்டர்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் ப்ரோட், கிறேம் ஸ்வான் இரு வரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

332 ஓட்டங்களை 98 பந்துப் பரிமாற்றங்களில் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 20.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போது மழை குறுக்கிட்டது. அதன் பின்னர் மீண்டும் போட்டியை ஆரம்பிக்க முடியாது போக, போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.


பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹரிஸ் 2 இலக்குகளையும், பீற்றர் சிடில் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மைக்கல் கிளார்க் தெரிவானார்.

இந்தத் தொடரில் மூன்று போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில் 2:0 என்ற பீதியில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. இன்னும் இரண்டு போட்டிகளே மீதமுள்ளன. குறித்த இரண்டு போட்டிகளையும் ஆஸ்திரேலியா வென்றாலும் கூட தொடர் சமநிலையிலேயே முடிவடையும் என்பதால் ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து தக்கவைத்துக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான நேரத்தில் சரியான வெற்றி



''மேற்கிந்தியத் தீவுகளுக் கெதிராக அதன் சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணி ஒருநாள் சர்வ தேசப் போட்டித் தொடர், 20/20 சர்வதேசப் போட் டித் தொடர் என்பவற்றில் பெற்றுக்கொண்ட வெற் றிகள் சரியான நேரத்தில் கிடைத்துள்ளன. இவை சோர்ந்துபோய் இருந்த பாகிஸ்தான் அணிக்கு பலம் ஊட்டும்''- இவ் வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர்.

அண்மைக்காலத்தில் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளத் தவறிவந்த பாகிஸ்தான் அணி, தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளிலும் தொடர் தோல்விகளைப் பெற்ற தால் கடும் அழுத்தத்திற் குள்ளாகியிருந்தது.

இந்த நிலையில் மேற்கிந் தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர், 20/20 சர்வதேசப் போட்டித் தொடர் ஆகியவற்றில் பாகிஸ்தான் அணி மிகச் சிறப்பான பெறுபேறு களை வெளிப்படுத்தி இரண்டு தொடர்களையும் கைப்பற்றியிருந்தது.

**ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர், 20/20 சர்வதேசப் போட்டித் தொடர் ஆகியவற்றில் பாகிஸ்தான் அணி மிகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியது**

இது தொடர்பாகக் கருத் துத் தெரிவித்த அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோர், ''சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் பெறுபேறு களையடுத்து பாகிஸ்தான் அணி மீதும், என் மீதும் தேவையற்ற அழுத்தங் கள் ஏற்பட்டன. இந்த அழுத்தங்கள் என்னை மட்டுமல்லாது அணியில் உள்ள வீரர்களையும் கடு மையாகப் பாதித்திருந் தது. இதன் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் சிறப்பாகச் செயற்படுவது அவசிய மானதாகக் காணப்பட் டது. தற்போது அங்கு கிடைத்துள்ள வெற்றிகள் அழுத்தத்தைப் போக்கி சரியான பாதையில் அணியை கொண்டு செல்ல உந்து சக் தியை வழங்கியுள் ளது."-என்றார். (ந)

## நான் நேர்மையானவன்



ஐ.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணய சூதாட்டத்துக்காகத் தன்னை யாரும் அணுகியிருக்கவில்லை என ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜித் சண்டிலா தெரிவித்துள்ளார். ஆட்ட நிர்ணயக் குற்றச் சாட்டின் காரணமாகக் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் இடம்பெற்ற ஐ.பி.எல். தொடரில் ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியின் வீரர்களான ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீத் சவான் ஆகியோர் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்துக் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதில், ஸ்ரீசாந்த், அங்கீத் சவான் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், பிணையைக் கோராத காரணத்தால் அஜித் சண்டிலா தொடர்ந்தும் சிறையில் காணப்படுகிறார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சண்டிலா, '' ஆட்ட நிர்ணய சூதாட்ட சர்ச்சை குறித்துத் எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 2 ஐ.பி.எல் பருவங்களில் எனது சிறப்பான பெறுபெறுகளை மக்கள் பார்வை யிட்டுள்ளனர். அவர்களுக்கு கிரிக்கெட் மீதான எனது அர்ப்பணிப்பு உணர்வு தெரியும். நான் நேர்மையா னவன். ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டுக்கள் என்னை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.''-என்றார். (ந)




**ஆசனப்பதிவுகள்**
(யாழ்-கதிர்காமம் பஸ் சேவிஸ்)
கதிர்காமம்- யாழ்ப்பாணம் தினமும் செல்லும் பேருந்துக்கான ஆசனப் பதிவுகள்.
**பதிவுகளுக்கு அழையுங்கள்**
**வரணி ஆசனப் பதிவகம்** 021 222 2868
174, கபாஸ் கபே கட்டடம் 021 490 0955
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 077 6048 921
கட்டணம் 880/= மட்டுமே
30290)(10.16.14)
தினமும் எமது சேவைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 5.45 மணி கதிர்காமத்தில் இருந்து இரவு 11.00 மணி

**அனேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க.....**
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும் வருடாவருடம் 5000திற்கும் அதிகமான மாணவர்களைச் சந்திக்கும் நாடெங்கிலுமுள்ள வெற்றித்தேர்வு வளவாளர்கள் கலந்துகொள்ளும்
**மாபெரும் கருத்தரங்கு**
காலம் :
**09.08.2013 வெள்ளி மு.ப 9.00 - பி.ப 2.30 வரை**
இடம்:
**வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்**
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக்கொண்ட மாதிரி வினாப்பத்திரம் பரீட்சையாக நடாத்தப்பட்டு மதிப்பீடு செய்து Multi Media Projector மூலம் விரிவான விளக்கங் களுடன் தெளிவுபடுத்தப்படல். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.
அனுமதிக்கட்டணம் ரூபா 200.00 மட்டுமே!
நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.
பங்குபற்றிச் சித்தியடையுங்கள்!
தொடர்புகளுக்கு:
0775388471, 0773126807, 0779543956
உங்களின் வெற்றியே! எங்களின் இலக்கு!

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0213671111

**CHEMISTRY**
உயர்தர இரசாயனவியல் மாணவர்களே!
தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளியா, பாடத்திட்டங்களில் போதிய அறிவின்மையா, கவலையை விடுங்கள். குறைந்த காலத்தில் பாடத் திட்டங்கள் தனியாகவோ, குழுவாகவோ பூர ணப்படுத்தப்பட்டு அதிகளவு பயிற்சி வினாக்கள் பயிற்றுவிக்கப்படும். உடனடியாக அழையுங்கள்.
0786406092 P.KARAN
(தேசிய பாடசாலை இரசாயனவியல் ஆசிரியர்)

**Zenith Surveys (pvt) Ltd**
548/2, பிரதான வீதி, பருத்தித்துறை
சகல நில அளவை வேலைகளுக்கான நிறுவனம்
021 226 3171 - 0777242516
0772370396
eMail:- contact@zenithsurveys.com
web:-www.zenithsurveys.com.

**விற்பனைக்கு**
தரமான கொங்கிறீற் கல் விற்பனைக் குண்டு. விலை 36/- உங்கள் இடத்தில் விநியோகம் செய்வதற்கு விலை 42/-
தொடர்பு: 0786155929, 0213205939

**மெய்யியல்**
கருத்தரங்கு
பேராதனை - G.A.Q.
By: N.PIRATHEEPAN B.A. (Phi-spe) M.A.
9, 10/08/2013 (வெள்ளி, சனி)
8a.m. - 2p.m.
அக்கடமி ஒவ் லொஜிக்

**வயது ஒரு தடையா!**
65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!!
குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.
* 2 வார பயிற்சிக் காலமுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:-யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி, வவுனியா.
அடிப்படைத் தகைமைகள்:
★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
★ 18வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.08.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல. 4466
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(34271)(5-6-7)

**ஏமாறாதீர்கள்!!**
நீங்கள் ஆங்கிலம் கற்கும் முறைமை
**தவறானது!**
ஒரு குழந்தை தன்தாய்மொழியினை பேசப்பழகிய பின்னரே எழுதவும்,வாசிக்கவும் கற்றுக்கொள்கிறது.ஆனால் நீங்கள் ஆங்கிலம் கற்கும்போது மட்டும் ஏன் இலக்கணத்தை, முதலில் கற்கிறீர்கள்? இலக்கண சிந்தனை உங்கள் கதைத்தலை தடைசெய்யும்!!
நாம் முதலில் சரளமாக ஆங்கிலம் பேசப்பழக்கிய பின்னரே ஏனையவற்றை கற்பிப்பதனால் 3 மாதங்களில் தமிழைப்போல-சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும் எந்தவொரு பரீட்சையை எதிர்கொள்ளவும் முடிகிறது.
Spoken English
ஆரம்பம் - 08.08.2013 திங்கள் ,புதன்
பிரிவு I 8-10.00 பிரிவு II 11.00-1.00
பிரிவு III 2-4.00 பிரிவு IV 4.00-5.30
IELTS,A1,B1
பரீட்சைக்கான சனி,ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் 10.08.2013 சனி 3.00 PM
Fluency spoken உடன் Listening, Reading,Writing பயிற்சிகள்
No 1 ஆங்கிலப் பயிற்சி மையம் SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4587


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து செல்வது அதை நேசிப்பது போன்ற அளவு உண்மையானால் உயிர் கூடுவதிலும் பிரிவதிலும் அர்த்தம் உண்டு.
-தாகூர்

# புதன் பொய்கை

A

உதயன் | ஓகஸ்ட் 07 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# குயிலும் நாமும்...

■ ராஜராஜன்

அண்மையில் பிரசுரமான தினசரிப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியத் தலையங்கத்தில் பெண் குயில்கள் பரத்தையர் போன்று செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவொரு புதிய கண்டுபிடிப்பெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இதற்கான ஆதாரங்கள் முழுமையாகத் தரப்படவில்லை. குயில்கள் தமக்கெனச் சோடிகளை சேர்த்துக் கொண்டு வாழும் வழக்கம் இல்லாததன் காரணமாக இவற்றுக்குரிய கூடுகளை அமைப்பதற்கு ஆண் குயில்கள் முன்வருவதில்லை எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் ஆண் குயில்களைக் கவருவதற்காகவே பெண் குயில்கள் கூவுவதாகத் தெரிவிக்கப்பட்டதை நம்புவதற்கு எமது மனம் மறுக்கின்றது.

ஏனென்றால் குயிலின் அந்த இனிமையான குரல் விரசம் நிறைந்தது என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதிகாலை வேளையில் எங்கோ தூரத்தில் நிற்கும் மரத்தின் கிளையில் அமர்ந்தவாறு குயிலொன்று கூவுகின்ற அந்த இனிமையான குரலோசை எமது நெஞ்சங்களைக் குளிர வைக்கின்றது. இதன் காரணமாகவே பெண் குயில்கள் மீது தெரிவிக்கப்படும் அவதூறுகளை நம்புவதற்கு எமக்கு முடியவில்லை.

இந்தச் சிறிய குயிலின் மீது இவ்வளவு அக்கறை காட்டும் நாம் எமது சமுதாயத்தின் மீது அந்தளவுக்கு அக்கறை கொள்கின்றோமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. ஏனென்றால் தற்போதைய மனிதர்கள் சகல வகைகளிலும் தம்மைச் சுருக்கியவாறு ஒரு வட்டத்தினுள் வாழ்வதைக் காண முடிகின்றது. அயல் வீட்டாருக்குத் துன்பம் ஏற்படும் வேளையில் கூட திரும்பிப் பாராத மனோநிலை எம்மவரிடையே தற்போது காணப்படுகின்றது. இது சுயநலமா, அச்ச உணர்வா என்பதை எளிதில் கண்டுபிடிக்க இயலவில்லை. எல்லாமே மூடு மந்திரமாக எமக்குத் தெரிகின்றன.



### எப்படி மாறியது இந்தச் சமூகம்

தற்போதுள்ள எமது சமூக அமைப்பிலே மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர். கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம் என்பன எம்மை விட்டுத் தூர விலகிச் சென்று வெகுநாள்களாகிவிட்டன. தட்டிக் கேட்பதற்கு உரியவர்கள் இல்லாததால் ஏற்பட்டதுதான் இந்த நிலை. ஒரு காலத்தில் எமது மண் சந்தித்த பேரவலங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. வெடியோசைகள், விமானக் குண்டு வீச்சுக்கள், சீறிப் பாய்ந்து வரும் ஷெல்கள், எப்போதும் எமது உயிர் பிரியலாம் என்ற உயிரச்சம், முழு வயிறும் நிரம்பும் அளவுக்கு உணவு கிடைக்காத நிலை, இரவில் வெளிச்சத்தையே காணாத கண்கள், வெளியுலகில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்துகொள்ள முடியாத அவல நிலை இவைதான் அன்றைய எமது மக்களின் வாழ்வியல் முறையாக அமைந்திருந்தன. ஆனால் அந்த மக்கள் இத்தகைய அவல நிலைக்குள் தள்ளப்பட்டிருந்த போதிலும் தமது நெறிகளில் இருந்து ஒருபோதுமே பிறளவில்லை- பிறள முடியவில்லை. அத்தகைய கட்டுப்பாடுகள் இங்கு விதிக்கப்பட்டதுடன் அவை கடுமையாகப் பாதுகாக்கவும்பட்டன.

### பறிபோனது பெண்களின் சுதந்திரம்

அன்று நடுநிசி வேளையிலும் பெண்கள் ஆண் துணையின்றித் தனித்துச் சென்றனர். வீடுகளின் வெளிக் கதவுகளைப் பூட்ட வேண்டிய அவசியமே எழவில்லை. ஆடம்பரம் இல்லாத சிக்கன வாழ்க்கைமுறை மக்களிடத்தில் அமைந்திருந்தது. திக்குத் திசையில்லாது அலைந்து திரியும் இளைஞர் கூட்டம் அன்றிருக்கவில்லை. அவர்கள் ஏதோவொரு பணியில் ஈடுபடுத்தபட்டனர். ஆனால் இன்று இவற்றுக்கெல்லாம் என்ன நடந்தது? இந்த மனிதர்கள் ஏன் திடீரென மாறினார்கள்? என்பது புரியவில்லை. இவர்கள் மாற்றப்பட்டார்கள் என்பதுதான் உண்மை.

தறிகெட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கிவிட்டால் அதனை தமது இஷ்டம் போல தமது வலைக்குள் வீழ்த்தி விடலாம் என்ற நோக்குடன் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

என்னவெல்லாம் நடக்கக் கூடாது என நாம் நினைக்கின்றோமோ அவையெல்லாம் எமது கண்முன்னால் தாராளமாகவே இடம்பெறுகின்றன.

பெண்கள் பகலில் கூட அச்சமின்றி வெளியில் செல்ல முடியாத நிலை. பெண்களைப் பெற்றவர்கள் எந்த நேரமும் வயிற்றில் நெருப்பை கட்டிக் கொண்டிருக்கும் அவல நிலை. சந்திகளில் கூடி நின்று கொக்கரிக்கும் இளசுகள். வீதிகள் தோறும் வீசப்பட்டிருக்கும் வெற்று மதுப் போத்தல்கள், பியர் ரின்கள் அவற்றைத் தேடியலையும் வியாபாரிகள். இதுவே இன்றைய நிதர்சன நிலை. உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணமே இன்றி மாற்றானின் பொருள்களை காவு செய்து வாழும் இழிநிலை- ஏமாற்று வஞ்சகம், காழ்ப்புணர்வு ஆகியவை நிறைந்த மனிதர் கூட்டம்.

### தொடரும் கடன் தொல்லை, தற்கொலைகள்

எம்மவரின் இன்றைய அவல நிலைக்கு இன்னுமொரு உதாரணத்தையும் கூற முடியும். கடனுக்குப் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட பலர் அதனைத் திரும்பிச் செலுத்த முடியாத நிலையில் தற்கொலை செய்வதையும் தலைமறைவாவதையும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இதில் வர்த்தகர்களே அதிகளவில் ஈடுபடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சகல பொருள்களும் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும்போது வர்த்தக நிலையங்களை எவர் நாடிச் செல்வர்? இந்தியாவிலிருந்து வருகை தந்து இங்கு கிடைக்காத பொருள்களை ஓரளவு மலிவாக விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராக முறைப்பாடு தெரிவிக்கும் வர்த்தகர்கள் வீதியோரத்தில் குந்தியிலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக வாயைத் திறப்பதே இல்லை. இதன் விளைவுகளை அவர்களே அனுபவிக்கின்றனர்.

### போதைக்கு அடிமையாகும் மாணவர்கள்

சமீப நாள்களாக செய்தியொன்று குடாநாட்டைக் கலக்கி வருகின்றது. பாடசாலை மாணவர்கள் போதைப் பாக்குக்கு அடிமையாகிவிட்டார்கள் என்பதுதான். அந்தச் செய்தி - இதுவொரு மோசமான செய்தியாக இருந்தபோதிலும் இதன் மீது நாம் காட்டுகின்ற அக்கறை மிகக் குறைவாகவே உள்ளது. எமது இளம் சமுதாயத்தை வேருடன் பிடுங்கியெறிந்து விடக் கூடிய இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்கு நாம் அனைவருமே ஒன்றிணைந்து போராடியிருக்க வேண்டும். ஆனால் நாம் தொடர்ந்து மௌனம் காத்து வருகின்றோம். இதன் மூலமாக எமது சமூகத்தின் மீதான அக்கறையின்மை துலாம்பரமாகத் தெரிகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடி, கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி' என்ற மகாகவி பாரதியாரின் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

ஒரு காலகட்டத்தில் வீரத்துக்கு அஞ்சாமைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய எம்மினம் இன்று கோழைகள் போன்று கூனிக் குறுகி நிற்கும் கேவலமான நிலையை எண்ணிப் பார்ப்பதற்கே நெஞ்சம் வெட்கப்படுகின்றது.

எமது உரிமைகளைப் பெறுவதற்காகவே பல்லாயிரக் கணக்கானவர்கள் தம்மை வேள்வித் தீயாற்றில் ஆகுதியாக மாற்றியதை நாம் இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் மறந்து போனோம் என்பது தெரிய வில்லை. ஒருவனிடத்தில் உள்ள அனைத்தும் இழக்கப்பட்ட நிலையில் எஞ்சி நிற்பது அவனது மானம் மட்டும் தான். ஆனால் இதற்குக் கூட எம்மவர் சிலர் விலைபேசி நிற்கின்றனர். இதுதான் தாங்க முடியாத சோகத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு சிறிய பெண் குயிலைப் பற்றிய தகவலால் வேதனையில் ஆழ்ந்து விடும் நாம் மிகப் பெரிய எமது சமுதாயத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டாமா? இப்போது இந்தச் சிந்தனை எழாதுவிட்டால் எப்போதுமே அதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்காது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்து விளக்கின் தெய்வீகத் தன்மை

'குத்து விளக்கு' தெய்வீகமானது. அது தெய்வ அம்சம் பொருந்தியது என்பர். இதன் அடிப்பாகம் பிரம்ம அம்சம் எனவும், நீண்ட நடுப்பகுதி மகாவிஷ்ணு அம்சம் எனவும், மேற்பகுதி சிவ அம்சம் எனவும் கூறப் படுகிறது. விளக்கில் ஊற்றும் நெய் - நாதம், திரி - பிந்து, சுடர் - அலை மகள், சுடர் - கலை மகள், தீ - மலை மகள் இப்படி அனைத்தும் சேர்ந்ததே குத்து விளக்கு என்பர். இந்த விளக்கை நன்கு மஞ்சள் தடவி, குங்குமமிட்டு, பூச்சுற்றி அலங்காரம் செய்ய வேண்டும்.

பஞ்சுத் திரிதான் விளக்கேற்ற மிகவும் உகந்தது. மெல்லிய திரிகளாகத் திரித்து வைத்துக்கொள்ள வேண்டும். திரிக்கும் போது ஒரு பக்கம் மட்டுமே உருட்ட வேண்டும். குத்துவிளக்கின் ஐந்து முகங்களையும் ஏற்றித் தொழுவது நலம் தரும். முதலில் எண்ணெய் அல்லது நெய் ஊற்றிய பிறகு தான் திரியிட்டுத் தீபம் ஏற்ற வேண்டும்.

குத்து விளக்கைத் துலக்கிச் சுத்தப்படுத்தும் பணியைச் செய்ய குறிப்பிட்ட நாள்கள் உண்டு. ஞாயிறு, திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்களில் மட்டும்தான் குத்து விளக்கைத் தேய்த்துச் சுத்தப்படுத்தல் வேண்டும்.

திங்கள் நடு இரவு முதல் புதன் நடு இரவு வரை குபேர தன தாட்சாயணியும், குககுரு தன தாட்சாயணியும் குத்து விளக்கில் பூரணமாகக் குடியிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே இந்த நாள்களில் விளக்கைத் தேய்த்துக் கழுவுவதால் இந்தச் சக்திகள் விலகிப் போகும் என நம்புகின்றனர். வெள்ளியன்று கழுவுவதால் அதில் குடியிருக்கும் குபேர சங்க நிதியட்சிணி விலகிப் போய் விடுவாள் என்பதும் மக்களின் பரவலான நம்பிக்கை.

விளக்கை முதலில் நீரால் கழுவிப் பின்பு எண்ணெய்ப் பிசுக்கு நீங்கும் வண்ணம் தேங்காய் நார் கொண்டு பச்சைப்பயறு, வெந்தயம், பச்சரிசி, எலுமிச்சைத் தோல் சேர்த்து அரைத்த சிகைக்காய்ப் பொடி போட்டுத் தேய்க்க வேண்டும். கடைசியில் எலுமிச்சைச் சாறு ஊற்றி சுத்தப்படுத்தித் தண்ணீர் ஊற்றி நன்கு சுத்தப்படுத்த வேண்டும்.

ஞாயிறன்று விளக்கைத் துலக்கி தீபம் ஏற்றுவதில் கண் சம்பந்தமான நோய்கள் அகலும். மனம் நிலைப்பட திங்கள் அன்று தீபம் ஏற்ற வேண்டும்.

'குரு பார்வை' இருந்தாலும் கடினமான வேலைகளையும் கூட எந்தவிதப் பிரச்சினையுமில்லாமல் எளிதாகச் செய்ய முடியுமே! வியாழன் அன்று தீபமேற்றினால் 'குருவின் பார்வையும் - அது தரும் கோடி நன்மையும்' எமக்குக் கிடைக்கும்.

வாகன விபத்துக்களைத் தவிர்க்க உதவுவது தான் சனியன்று விளக்கைத் துலக்கி நாம் ஏற்றும் தீபம். ஏனைய நாள்களில் விளக்கைத் துலக்காமல் தீபம் ஏற்றலாம்.



விளக்குத் துலக்காத நாள்களில் விசேஷமான நோன்பு, பூசைகள் வந்தால், விளக்கை நீரில் கழுவித் துடைத்து விபூதி கொண்டு தேய்த்துச் சுத்தமான துணியால் விளக்கைத் துடைத்து தீபம் ஏற்றலாம்.

விளக்கில்லாத கோயிலில் ஏதாவது ஒரு திசையில் பஞ்சுத் திரி போட்டுத் தீபம் ஏற்றினால் சூரிய பகவானின் பூரண அருள் கிடைக்கும். இது ஞாயிற்றுக்கிழமைகளில் செய்யப்பட வேண்டிய ஒன்று. தாமரை நூல் தீபம், மனதுக்குப் பிடித்த துணையுடன் இணைத்து வைக்கும்.

வாழைத் தண்டின் நூலில் திரி செய்து தீபம் ஏற்றுவது மக்கட் பேற்றைத் தரும். வெள்ளெருக்குப் பட்டையில் திரித்துத் தீபம் ஏற்றுவது



காற்றின் பாதிப்பை விலகச் செய்யும்.

பஞ்சமித் திதியில் விளக்கேற்றுவது அகால மரணத்தைத் தவிர்க்கும். புதிதாக நெய்த பருத்தி ஆடையில் அரைத்த சந்தனம், பன்னீர் சேர்த்துத் தடவிக் காய வைத்து அதைத் திரியாக்கி வடக்கு முகமாக வைத்து, 'பஞ்ச தீப' எண்ணெய் ஊற்றித் திருவாதிரை நட்சத்திரத்தன்று தொடர்ந்து ஓராண்டு விளக்கேற்ற நோய்களின் வேகம் குறையும். பல காலமாக கிட்டாமலிருந்த பணம் தேடி வரும். இது அருந்ததிக்குச் சாவித்திரி தேவி அருளிய வாக்கு.

ஒரு தீபம் ஏற்றுவது தவறு. சிறிய ஜோதி விளக்கானாலும் இரண்டு திரி போட்டு இரண்டு தீபம் ஏற்ற வேண்டும். இது குடும்பத்துக்குப் பல நலன்களைக் கொண்டு வந்து சேர்க்கும்.

# அரச வம்ச நலனுக்காக பலிகொடுக்கப்பட்ட சிறுமிகள்

## மம்மிகள் குறித்த ஆராய்ச்சியில் தகவல்

பிரிட்டன் நாட்டின் பிராட்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மம்மிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது ஆய்வில் இன்கா இன குழந்தைகளின் 3 மம்மி உடல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வகை மம்மிகள் ஆர்ஜெண்டினா நாட்டின் மலைப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டன. அவை கடந்த 1999 ஆம் ஆண்டு வெளிக்கொண்டு வரப்பட்டன. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு இன்கா வம்சத்தை விரிவுபடுத்துவதற்காக சடங்குகள் நடத்தப்படும். வழக்கு இருந்தது. அப்பொழுது, உடலில் குறைபாடுகள் இல்லாத குழந்தைகளை உள்ளூர் பிரபுக்கள் சிலர் சேர்ந்து தேர்வு செய்து கொள்வார்கள்.

குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படும். அவர்களுக்கு தங்கம், வெள்ளி, செம்பு மற்றும் சிப்பிகள் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிறிய வகை மனிதன் மற்றும் லாமா விலங்கு ஆகியவற்றின் உருவங்கள் பரிசாகக் கொடுக்கப்படும். பின்னர் அவர்கள் தங்களது சொந்த இன குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். மலைக் கடவுளான லல்லாய்லாகோ எரிமலையில் பலியிடப்படுவதற்கு முன்பாக அவர்களுக்கு உரிய மரியாதைகள் வழங்கப்படும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த 3 பேரினது மம்மிகளும் மிக குறைந்த வயது கொண்ட சிறுமிகளுடையவை. அவர்களில் மூத்த சிறுமிக்கு வயது 13க்குள் இருக்கும். இன்கா வம்சத்தை விரிவுபடுத்துவதற்காகவும், அரசாட்சியின் நலனுக்காகவும் இன்கா குழந்தைகள் பலியிடப்பட் டுள்ளனர்.

இந்த சிறுமிகளின் உடல்கள் கட்டப்பட்ட நிலையில் கிடைத்துள்ளன. அவர்களது தலை முடியை வைத்து மேற் கொண்ட ஆய்வில் இறப்பதற்கு முன்பாக அவர்களுக்கு போதைப் பொருள் மற்றும் அற்கஹோல் கொடுக்கப்பட்டுள்ளன. அதுவும் பல மாதங்களாக இது நடைமுறையில் இருந்துள்ளது.

அவர்களில் 13 வயது சிறுமி இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து அதிக அளவு அற்கஹோல் மற்றும் கோகா இலைகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளன என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. மக்காச் சோளத்தை நொதிக்க வைத்து சிச்சா எனப்படும் அற்கஹோல் கலந்த பானம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு நடுங்கும் குளிரைத் தாங்கும் சக்தி ஓரளவுக்குக் கிடைத்துள்ளது. அதனுடன் இறப்பு தள்ளிச் சென்றதாகவும் கூறப் படுகிறது.

எனினும் கொடுமையான முறையில் கொல்லப்பட்டதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

இதுகுறித்து ஆண்ட்ரூ வில்சன் என்ற ஆய்வாளர் கூறுகையில், 3 சிறுமிகளில் 13 வயதுச் சிறுமிக்கு மற்ற இருவரைக் காட்டிலும் சற்று



அதிகமான அளவுக்கு போதை நிறைந்த கோகா இலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சடங்குகளை நிறைவேற்றவும், அவர்களை அமைதிப்படுத்துவதற்காகவும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் அவர்கள் பனி படர்ந்த ஆண்டிஸ் மலை பகுதியில் விடப்பட்டுள்ளனா.

**13 வயது சிறுமி இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து அதிக அளவு அற்கஹோல் மற்றும் கோகா இலைகள் ஆகியவை கொடுக்கப்பட்டு உள்ளன என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்கற்களால் அமையப்பெற்ற தேவாலயம்

பரிஸ்–மொன்மார்த் (Montmarte) மலை உச்சியில் அமைந்திருக்கும் தேவாலயம், வெண்கற்களால் கட்டப்பட்ட கண்களைக்கவரும் அதி அற்புத கட்டடக் கலை நுட்பம் நிரம்பிய ஒரு தேவாலயம் இதுவாகும்.


1870/71 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற பரிஸ் கொம்யூன் எழுச்சியின்போது இடம் பெற்ற துன்பியல் சம்பவங்களுக்கு பிராயச்சித்தமாக இந்தத் தேவாலயம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தேவாலயங்களின் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்றத்தால் 1873 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்க 1876 ஆம் ஆண்டில் இந்தத் தேவாலயத்தின் கட்டட வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 1919 இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நான்கு சிறிய கூம்பக வடிவிலான கோபுரங்களையும், நடுப்பகுதியில் பெரிய கோபுரத்தையும் கொண்டுள்ள இவ் ஆலயத்தின் பின் பகுதியில் 94 மீற்றர் உயரமான மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்துள்ளது.

உலகில் மிகப்பெரிய மணிகளில் ஒன்றான19 தொன் நிறையுடைய மணி ஒன்றும் கோபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இத் தேவாலயத்தின் உட்பகுதியில் இருந்து படிகள் மூலம் சுமார் 475 மீற்றர் விசாலமான நிலக்கீழ்த் தளத்துக்கு செல்ல முடியும். உள்ளே தீட்டப்பட்டுள்ள சித்திரங்களும், சிற்பங்களும், ஒளிதெறிக்கும் கண்ணாடி வேலைப்பாடுகளும் வியப்பூட்டும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வெளியே நின்று பரிஸ் நகரின் வனப்பை பல கிலோமீற்றர் தூரத்துக்கு பார்த்து ரசிக்க முடியும். மலை உச்சியில் இருக்கும் இத்தேவாலயத்துக்கு படிக்கட்டுகள் மூலமாகவோ தானியங்கி சாதனங்கள் மூலமாகவோ செல்ல முடியும்.



"

**தேவாலயங்களின் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்றத்தால் 1873 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்க 1876 ஆம் ஆண்டில் இத் தேவாலயத்தின் கட்டட வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 1919 இல் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு சிறிய கூம்பக வடிவிலான கோபுரங்களையும், நடுப்பகுதியில் பெரிய கோபுரத்தையும் கொண்டுள்ள இந்த ஆலயத்தின் பின் பகுதியில் 94 மீற்றர் உயரமான மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்துள்ளது.**

# கண்காட்சியில் விருது பெற்ற கமரா


கடந்த வாரம் நடந்த லாஸ் வேகாஸ் நுகர்வோர் கண்காட்சியில் டமாக்கோ நிறுவனத்துக்கு அதன் புதுமையான தொழில்நுட்பத்துக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. டமாக்கோ நிறுவனம் வழங்கிய புதிய கமரா மூலம் அது ஏற்கனவே மக்கள் மத்தியில் பிரபலமாகி இருக்கிறது. விருது வாங்குவதற்கு மிக முக்கிய காரணம் என்னவென்றால் டமாக்கோ வழங்கும் டமாக்ராபி ஆகும்.

இந்தப் புதிய தொழில் நுட்பம் பனோமோர்ப் தொழில் நுட்பம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது இது ஒரு 14 மெகா பிக்சல் டமாக்கோ 360 இமேஜர் ஆகும். அதன் மூலம் 360 டிகிரியிலும் கூட படம் எடுக்க முடியும். மேலும் டமாக்கோவில் எடுக்கப்பட்ட படங்களை கணினி அல்லது ரேப்லெட்டுகளில் பார்க்கும்போது அந்தப் படங்களை இந்த பக்கமும் திருப்ப முடியும் நகர்த்தவும் முடியும்.

அதாவது ஓர் அறையைப் படம் எடுத்திருந்தால், கர்சர் மூலம் அந்த படத்தில் உள்ள சகல பகுதிகளையும் பார்க்க முடியும். அதாவது அந்தப் படத்தை மேலே, கீழே, பின்புறம் மற்றும் முன்புறம் ஆகிய சகல பக்கங்களிலும் திருப்ப முடியும்.


இந்த கமராவின் முக்கிய அம்சம் என்னவென்றால் இதில் ஸ்கை 360 டிகிரி, க்ரவுண்ட் 360 டிகிரி மற்றும் நீள்வாக்கு மற்றும் படுக்கை பனோரமிக் மோட் போன்ற வசதிகள் உள்ளன.

இந்தக் கமராவில் இருக்கும் இன்டர்னல் பொசிசன் சென்சார்கள் இதன் மோடுகளை முடிவு செய்கின்றன. அதனால் இதைப் பயன்படுத்துவோர் இதை எந்த வொரு கோணத்திலும் பயன்படுத்த முடியும். அவ்வாறு



எடுக்கப்பட்ட படத்தை சிறந்த படமாக மாற்ற முடியும். இந்த கமராவில் இருக்கும் புதிய தொழில் நுட்பம் முற்றிலும் வித்தியாசமானதாகும். அதாவது மிகவும் பிரபலமான மைக்ரோசாப்ட் போட்டோசின்த் தொழில் நுட்பத்துக்கு முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. இந்த புதிய கமரா இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் சந்தைக்கு வரும் என்று தெரிகிறது. இதன் விலை ரூ.10,000 இற்குள் இருக்கும் என்று தெரிகிறது.

# உங்களுக்காக சில மணித்துளிகள்...!



அதிகாலையில் எழுந்து பரபரப்பாக அலுவலகம் செல்லும் நகர வாழ்க்கையில் தினம் தினம் ஒரே மாதிரி செய்வது போராடித்து விடும். இதனால் உடலும், மனமும், சோம்பிவிடும். மன ரீதியாகவும், உடல்ரீதியாகவும் புத்துணர்ச்சிபெற அன்றாடம் செய்யும் அலுவல்களை சற்றே மாற்றிச் செய்ய வேண்டும் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள். இது எமது வாழ்க்கையையே மாற்றும் வல்லமை படைத்தது என்கின்றனர் அவர்கள்.

**எழுதுங்கள் நல்லது**

கணினி மயமாகிவிட்ட இன்றைய வாழ்க்கையில் பேனா பிடித்து எழுதுவது என்பதே மறக்கடிக்கப்பட்டுவிட்டது. வீட்டிலும், அலுவலகத்திலும் எழுதுவது என்பது மாறி, டைப் செய்வதே அவசியம் என்றாகிவிட்டது. எனவே ஒரு மாற்றத்துக்கு பேனா பிடித்து குறிப்புப் புத்தகங்களில் எழுதிப் பார்ப்பது நல்லது. ஓவியராக இருந்தால் அழகான ஓவியம் ஒன்றை வரைவது மனதுக்கு மாற்றத்தைத் தரும். தினசரி போராட்டமான வாழ்க்கையில் இருந்து இது ஒரு மாற்றத்தை உண்டாக்கும்.

**பிறந்தநாளுக்கு ஒரு மரம்**

ஒவ்வொரு பிறந்தநாளின்போதும் ஒரு மரம் நடுவதைத் திட்டமாகக் வைத்துக்கொள்ளவேண்டும். இது நமது வாழ்க்கை முறைமையில் நல்ல தொரு மாற்றத்தை ஏற்படுத்தும். இது சுற்றுச்சூழலுக்கு நன்மை தருவதோடு மனதுக்கும் மகிழ்ச்சியை அளிக்கும். மரம் வளர்ப்பது ஆத்ம திருப்தியை ஏற்படுத்தும்.

**மனதுக்கு இதமான பயணம்**

வாரம் ஒருமுறையாவது காரை விடுத்து பஸ்ஸில் பயணம் செய்யலாம். தனியாகச் சென்று பழகிய எமக்கு சக அலுவலக நண்பர்களுடன் சேர்ந்து பஸ்ஸில் பயணிப்பது மகிழ்ச்சியான மாற்றத்தைத் தரும். இதனால் எரிபொருள் மிச்சப்படுவதோடு சுற்றுச்சூழலுக்கும் நன்மை செய்தது போலாகும்.

**எமக்காக ஒருநாள்**

தினம் 24 மணி நேரத்தையும், அலுவலகம், வாழ்க்கைத்துணை, நண்பர், குடும்பம், செல்லப் பிராணிகள் என பல விதத்தில் நேரத்தை செலவழிக்கிறோம். எமக்காக என்று சில மணித்துளிகள்கூட செலவழிப்பது கிடையாது. எனவே எம்முடைய மனதைப் புத்துணர்ச்சியாக்க நமக்காக சில நிமிடங்களை தினசரி செலவழிக்க வேண்டும் என்கின்றனர் உளவியலாளர்கள்.

**விடுமுறை தினத்தை வீணாக்க வேண்டாம்**

விடுமுறை தினம் என்பது வீணாக்க அல்ல. எந்த ஓர் இடையூறும் இன்றி அந்த நாளைக் கழிக்க வேண்டும். அப்பொழுதுதான் அடுத்த வாரத்திற்கான தினங்களைப் புத்துணர்ச்சியோடு கழிக்க முடியும்.

**சிரிப்பு மருந்து**

சிரிப்பு என்பது மிகச்சிறந்த மருந்து. தினமும் இறுக்கமாக இருப்பதைக் கலைக்கவும், மனஅழுத்தம், வலிகளை மறக்கவும், சிரிப்பு உதவுகிறது. மனம் விட்டுச் சிரித்தால் கவலைகள் மறக்கப்படும். எனவேதான் வாய்விட்டு சிரிக்க உளவியல் வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர்.

**புத்துணர்ச்சி தரும் இசை**

இதமான இசையைக் கேட்பது மனதுக்கு புத்துணர்ச்சி தரும். அமைதியான முறையில் இசையைக் கேட்பது மன அழுத்தம் தரும் ஓமோன் சுரப்பைக் கட்டுப்படுத்தும். எனவேதான் அன்றாட அலுவல்களினால் ஏற்பட்ட சிக்கல்களைக் களைய இசையைக் கேட்க வலியுறுத்துகின்றனர் உளவியலாளர்கள்.

**நடத்தல் அவசியம்**

'வோக்கிங்' என்பது உடலுக்கு புத்துணர்ச்சி தரும். இது நோய் ஏற்படுவதில் இருந்து பாதுகாக்கும் என்பது மருத்துவர்களின் அறிவுரை. அதனால்தான் மருத்துவர்கள் நடப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்துகின்றனர். வீட்டுக்குள்ளேயே [illegible] உபகரணத்தை வைத்து வீட்டுக்குள் நடப்பதை வி[illegible] வெளியில் நடக்க வலியுறுத்துகின்றனர்.

**தினம் ஒரு நற்செயல்**

இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்பதைப்போல [illegible] ஒரு நன்மை. யாருக்காவது ஒரு உதவி செய்ய வேண்டும். [illegible] மனதுக்குப் புத்துணர்ச்சி தருவதோடு வாழும் வாழ்க்கைக்[illegible] அர்த்தத்தைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினசரி 'செல்போன்' பேசினால் புற்று நோய்






தினமும் செல்போன் பேசுவோருக்கு உடலில் பாதிப்புகள் ஏற்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் அவை உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில், இஸ்ரேலில் உள்ள டெல்அவில் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானி யனிவ் ஹம்ஷானி தலைமையிலான குழுவினர் ஒரு புதிய ஆய்வு நடத்தினர்.

அந்த ஆய்வில் அதிக நேரம் செல்போன் பேசுபவர்களை புற்று நோய் தாக்கும் அபாயம் உள்ளது என்று தெரியவந்துள்ளது. இவர்களால் நீண்ட நேரம் செல்போன் பேசுபவர்களிடமும், செல்போன் பேசாதவர்களிடமும் இருந்து எச்சில் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

அவர்களில், அதிக நேரம் செல்போன் பேசுபவர்களுக்கு புற்று நோய் ஏற்படுவதற்கான அறிகுறி இருப்பது தெரிய வந்தது. செல்போன் பேசும் போது காதுகளின் அடியில் உள்ள சுரப்பிகள் மற்றும் திசுக்கள் பாதிக்கப்பட்டு மரபணுக் கோளாறினால் புற்று நோய்க் கட்டிகள் ஏற்பட வாய்ப்பு உருவாகும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.




# பறக்கும் சைக்கிள்

உலகின் முதல் பறக்கும் சைக்கிளை பிரிட்டனைச் சேர்ந்த 2 வடிவமைப்பாளர்கள் தயாரித்துள்ளனர்.

சாதாரண சைக்கிளுடன், இறகுகள் பொருத்தப்பட்டு இறகுகளில் உள்ள காற்றாடியை சுழல வைக்க இயற்கை எரிசக்தி பெறப்படுவதன் மூலம் இயங்க வைக்கப்படும். இந்தச் சைக்கிள், திறந்த வெளியில் இருந்து உயர கிளம்பி 40 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு 'லைசென்ஸ்' தேவையில்லை. தேவையான தூரம் பறந்த பின்னர் சைக்கிளில் உள்ள பாரச்சூட்டை மடக்கி விட்டால் ஆர்ப்பாட்டமின்றி தரையில் இறங்கி சாதாரண சைக்கிளாக இதனை ஓட்ட இயலும் என்பது குறிப்பிடத்தக்கது.

திறந்த வெளியில் இருந்து உயரக் கிளம்பி 40 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

# பார்வையற்றோருக்கு வருகிறது புதிய கருவி




கண் பார்வையில்லாதவர்கள் புறக் காட்சிகளைக் காணத்தக்க வகையில் அதி நவீன கருவியை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர். கண் பார்வையற்றவர்கள் புறக் காட்சிகளைக் காணத்தக்க வகையில் நவீன கருவிகளை உருவாக்குவது குறித்து ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தினர்.

அவர்களது ஆராய்ச்சியின் பயனாக, காதில் பொருத்தப்படும் விசேட கருவியின் உதவியுடன் காட்சிகளைக் கண்டனுபவிக்கத் தக்க வகையில், புதிய கருவியை உருவாக்கியுள்ளனர்.

இந்தக் கருவி குறித்து ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அமிர் அமேதி தெரிவித்ததாவது:

கண் பார்வையற்றோரின் காதுகளில் பொருத்தப்படும் இந்தக் கருவி, காட்சிகளின் ஒளி அலைகளின் அதிர்வுகளை உள்வாங்கி அதை ஒலி அலைகளாக பதிவு செய்யும் தன்மை கொண்டது. இந்தக் கருவிகளில் பொருத்தப்பட்டுள்ள கமெராக் [illegible] ஒளி மற்றும் ஒலியியல் மொழிகள் எழுதப்பட்டுள் [illegible] எனவே இவை உள்வாங்கிய ஒளி அலைகளை [illegible] எழுத்துகளாக மாற்றி மூளைக்கு அனுப்புகிறது. [illegible]யில் உள்ள காட்சிப் பதிவுகளை அறியும் [illegible], இவை மீண்டும் ஒளி அலைகளாக [illegible] செய்யப்படுவதால் இந்த கருவியின் மூலம் [illegible]வையற்றோரும் புறக் காட்சிகளைக் காண [illegible] என்றார்.


# நட்சத்திரங்கள் ஒன்றோடொன்று மோதியதால் உருவானதே தங்கம்



பூமியில் கிடைக்கும் தங்கம் ஒரு காலத்தில் மிகுந்த அடர்த்தி வாய்ந்த நட்சத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு அழிந்ததால்தான் உருவானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


இரண்டு பெரிய நியூறோன் நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியமையால் தான் தங்கம் உருவாகக் காரணம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இந்த நியூறோன் நட்சத்திரங்களின் மோதலால் ஏற்பட்ட தங்கத்தின் எடை 10 [illegible] சமமானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராயச்சித்தம்



குறிஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராம வாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான். பஞ்சாயத்திலும் கிராம வாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின் வீட்டிற்கு வந்த முனுசாமியின் மனச்சாட்சி அவனை உறுத்தியது. கிராமவாசி மீது தான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயசித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். ''துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒரு கிராமவாசி மீது வீண் பழி சுமத்திவிட்டேன். அது எனது மனதை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!'' என்று கேட்டான். துறவி சிறிது நேரம் யோசித்து விட்டு, ''இன்று இரவு ஐந்து கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டு விட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்,'' என்று கூறினார்.


முனுசாமியும் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான். பின் மறுநாள் சென்று துறவியை பார்த்தான். ''துறவியாரே! என் பாவம் கழிந்து போய் இருக்குமா இந்நேரம்?'' என்று கேட்டான். உடனே துறவி, ''முனுசாமி! நீ இப்போது அந்த கிராமவாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டுக்கு முன்னால் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக் கொண்டு வா'' என்று கூறினார். முனுசாமி மிகுந்த ஆவலுடன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சுகூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்து போய்விட்டிருந்தது. அதனைக் கண்ட முனுசாமி திடுக்கிட்டான். மீண்டும் துறவியிடம் ஓடி வந்தான்.

''துறவியாரே! நேற்றிரவு நான் கிராம வாசி வீட்டின் முன்னால் போட்டு விட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சு கூட இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?'' என்று கேட்டான். துறவி சிரித்து விட்டு, ''முனுசாமி! நீ விரித்துப் போட்டு விட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வர முடியாத பஞ்சைப் போன்றதுதான் உன் பழிச் சொற்களும். அவற்றையும் இனி திருப்பி எடுக்க முடியாது. ஆனால், நீ செய்த தவறை எண்ணி மனம் வருந்தினால், அதுவே உன் பாவத்திற்கு தகுந்த பிராயச்சித்தம். உன் பாவங்கள் பஞ்சைப் போலவே பறந்துவிடும். எனவே, இறைவனிடம் உன் தவறுக்காக வருந்தி மன்னிப்பு கேள். அதுவே நீ பாவத்திலிருந்து தப்புவதற்கான ஒரே வழி,'' என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் அவன் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டு விட்டான். நல்லவன் என்று உலகம் அவனை வாழ்த்தியது. பிறர் மீது வீண்பழி சுமத்துவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்பதை முனுசாமியும் உணர்ந்து கொண்டான்.

## அறிந்து கொள்ள சில தகவல்கள்

- 1857 - தபால் முத்திரை இலங்கையில் அறிமுகம்
- 1858 - தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது
- 1992 - முதல் தனியார் தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது
- 1931 - தினகரன், வீரகேசரி பத்திரிகைகள் ஆரம்பம்
- 1864 - 'உதயதாரகை' என்ற முதலாவது தமிழ் மொழிப் பத்திரிகை ஆரம்பம்
- 1925 - வானொலி சேவை மும்மொழிகளில்
- 1950 - தேசிய திரைப்படத் தொழில் ஆரம்பம்
- செய்மதி தொடர்பு நிலையம் 107 நாடுகளுடன் தொடர்புபட்டது
- 1982 - அஞ்சல் சேவை தனியார் துறையுடன் இணைக்கப்பட்டது.



## பழைமையான தேசியக் கொடி

டென்மார்க் நாட்டின் தேசியக் கொடி மிகவும் பழைமையானது. சிவப்பு பின்புறத்தில் வெண்மை நிற ஸ்கெண்டிநேவியன் சிலுவை அடையாளத்தைக் கொண்ட இந்தக் கொடி, 14 ஆம் நூற்றாண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

சி. சிந்து,
சுதுமலை.

## கிரேக்கரும் கடவுளும்

- புதன் - தொழிலின் கடவுள்
- வெள்ளி - காதல் மற்றும் அழகின் கடவுள்
- செவ்வாய் - போரின் கடவுள்
- வியாழன் - உயிர்கள் அனைத்திற்கும் கடவுள்
- சனி - உழவின் கடவுள்
- யூரேனஸ் - சொர்க்கத்தின் கடவுள்
- நெப்தியூன் - கடலின் கடவுள்
- புளூட்டோ - பாதாளத்தின் கடவுள்

## 3 இதயங்கள் கொண்ட மீன்



கணவாய் எனப்படும் மீன் இனம் முன்று இதயங்களைக் கொண்டது. கடல் வாழ் மீனினங்களில் இது ராஜா எனவும் கருதப்படுகிறது. இந்த மீன், ஸ்குவிட் மற்றும் ஆக்டோபஸ் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

மேலும் கணவாய் மீனுக்கு மிகப் பெரிய இதயம் உள்ளது. உண்மையில் இதற்கு ஒரு இதயம் அல்ல மூன்று இதயங்கள்.

இந்த மீனின் அங்கம் தட்டையாக இருப்பதால் கடலில் வாழ்வதற்கு ஏற்றதாக உள்ளது. இவை மொலஸ்க்ஸ் மற்றும் சிறிய மீன்களை வேட்டையாடக்கூடியது. கணவாய் மீன்கள் பிற இன மீன்களிடம் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளத் தன் நிறத்தை பின்புல நிறத்துக்கு ஏற்ப மாற்றும் இயல்புடையது.

### நீல நிற இரத்தம்

கணவாய் மீனின் ரத்தத்தில் செப்பு உலோகம் அதிகமாக இருப்பதால் ரத்தத்தின் நிறம் பச்சையும் நீலமும் கலந்த நிறமாகத் தோன்றும். இதன் காரணமாகவே இதை ராஜா மீன் என்கின்றனர்.

தன் நிறமிப் பையை சரிப்படுத்துவதன் மூலம் தன் நிறத்தை இதனால் மாற்ற முடிகிறது. நிறமிப் பைகள் சிறியவை, ஆனாலும் பல வண்ணங்களைக் கொண்டு காணப்படுகின்றன. எதிரி மீன்கள் தன்னைத் தாக்கும்போது கறுப்பு நிற திரவத்தை வெளியிட்டு தாக்கும் இனத்திடம் இருந்து தற்காலிகமாக தப்பிக்கும் தந்திரம் உடையவை, இந்தக் கணவாய் மீன்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07/08/2013

# வரலாற்றில் மறைந்து கிடந்த அற்புத மனிதர் நல்லதம்பி



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தை ஈழத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் முன்னோடியாக விளங்குகின்ற நிறுவனமாகக் கொள்ளலாம். அத்தோடு இது பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உருவாக மூல காரணமாக இருந்த நிறுவனமுமாகும். இந்த நிறுவனம் கடந்த முப்பது வருடங்களுக்கு முன் ஆரம் பிக்கப்பட்டு தொடர்ச்சியாகத் தமிழர் துயர் துடைக்கும் பணியில் பாடுபட்டு வந்துள்ளது; தொடர்ந்து பணி தொடர்கிறது

தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (Tamil Refugees Rehabilitation Organization (T.R.R.O) என்ற பெயரில் இந்த நிறுவனத்தைப் பதிவு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதைய அரசு தமிழர் என்ற பெயரை நீக்கினால் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற அழுத்தத்தைக் கொடுக்கத் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பின்னர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமாக (The Refugees Reha-bilitation Organization) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1982 ஆம் ஆண்டு ஜுன் 22 ஆம் திகதி கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருந்த கே.சி.நித்தியானந்தா, கந்தசாமி, விஸ்வலிங்கம் போன்றவர்களுடன் அ.நல்லதம்பியும் இணைந்து செயலாற்றியுள்ளார். அதன் ஆரம்ப நாள்முதல் தாம் இறக்கும் வரை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அங்கமாக இருந்து தனது 94 ஆவது வயதில் இறைபதம் எய்தினார்.

தமிழர் வரலாற்றில் 'அகதிகள்' என்ற பெயர் அவர்கள் இனக்கலவரங்களின் போது அடித்துத் துரத்தப்பட்டதிலிருந்து மெல்ல வலுவாக தமிழர் வாழ்வில் உட்புகுந்து கொண்டது. 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது தென் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த தமிழர்களுக்குத் துணையாய் நின்று குறிப்பாக கிளிநொச்சியில் பல பகுதிகளில் குடியேற்றங்களை உருவாக்கி அகதிகளாய் வந்தவர்களுக்கு வாழ்வளித்தவர்களில் நல்லதம்பியும் ஒருவராக இருந்திருக்கிறார்.

## நீத்தார் நயப்புரை

அன்றிலிருந்து இலங்கை இராணுவம் வடமராட்சியில் நடத்திய 'ஒப்பரேசன் லிபரேசன்' தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக உதவி வழங்கியமை, இந்திய இராணுவத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி வழங்கியமை, தீவக இடம்பெயர்வு, லீப் போவேட் தாக்குதல் இடப்பெயர்வு, 1995 நடந்த மிகப்பெரும் மனித அவலமான யாழ்ப்பாண இடப்பெயர்வு, 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வு போன்ற பல இடர்களில் தாய் தன் குட்டிகளை காவிச்சென்று பாதுகாப்பது போன்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தை பாதுகாத்து மக்களுக்கு சேவையாற்றிய பெரியவர் நல்லதம்பி.

1986 ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியர் அமரர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் தலைவராக இருந்த காலகட்டத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப தலைவராக கடமையாற்றியவர். மிக நெருக்கடியான காலத்தில் குடாநாட்டு விவசாயத் துறை வளர்ச்சிப் படிகளுக்கு உறு துணையாக நின்றார். இவரைப் பல விவசாய சங்கங்கள் இன்றும் மதிப்புடன் நினைவு கூருகின்றன.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவராக இருந்து நிவாரணப் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுத்திருக்கிறார். அதன் பின்னர் மூப்புக் காரணமாக ஆளுநர் சபை அங்கத்தவராக இருந்து பணிபுரிந்திருக்கிறார்.

யாழ்.மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவராகவும் பணி புரிந்தவர். லயன்ஸ் கழகத்தில் சுன்னாகம் பிரிவில் இருந்து மக்கள் பணி செய்திருக்கிறார். திருஞானசம்பந்தர் சிறுவர் இல்லத்தை ஸ்தாபித்து நடத்தியவர்.

சுயகௌரவம் மிக்க நல்ல மனிதர். மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர். இவரது வீட்டுக்குச் செல்கின்ற எவரும் உணவு அருந்தாது திரும்ப முடியாது. அவரது விருந்தோம்பல் பண்பை அவரது சுற்றமும் நண்பர்களும் எப்போதும் நினைவு கூருவார்கள்.

தனது பணியை முடித்து இறைபதம் அடைந்த அற்புத மனிதர் அ.நல்லதம்பி மனிதர்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கவர்.

**தே.தேவானந்த்,**
பணிப்பாளர்,
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,யாழ்.பல்கலைக்கழகம்.

# அழிவடைந்த மம்மூத் யானை இனத்தை மீள உருவாக்க முயற்சி



பல்லாண்டுகளுக்கு முன்பு 'மம்மூத்' என்ற யானை இனம் வாழ்ந்துள்ளது. அந்த இன யானைகள் நீண்ட தந்தங்கள் மற்றும் உடலில் அடர்ந்த ரோமங்களுடன் கூடியது.

தற்போதுள்ள யானைகளை விட அவை உருவத்தில் மிகப் பெரியவைகளாக இருந்தன. இயற்கையின் பல்வேறு மாற்றங்களால் அந்த யானை இனம் படிப்படியாக அழிந்து விட்டது. அந்த யானை இனத்தை மீண்டும் உருவாக்குவதற்கு விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற் கொண்டுள்ளனர்.

எடின்பர்க்கைச் சேர்ந்த விஞ்ஞானி வில்முட் தலைமையிலான குழுவினர் 1996ஆம் ஆண்டில் 'டொலி' என்ற ஆட்டுக் குட்டியை 'குளோனிங்' முறையில் உருவாக்கினர். அது 'ஸ்டெம்செல்'கள் மூலம் உருவாக்கப்பட்டது.

அதேமுறையில் மீண்டும் மம்மூத் யானை இனத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதுள்ள குளோனிங் முறையை விட அதிநவீன தொழில்நுட்பத்துடன் திசு செல்களை 'ஸ்டெல்செல்களாக மாற்றி அந்த இன யானையை உருவாக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவலை 'டொலி' ஆட்டை குளோனிங் முறையில் உருவாக்கிய விஞ்ஞானி வில்முட் ஓர் ஆய்வுக் கட்டுரையில் வெளியிட்டுள்ளார்.

# வாசகர் திருமுகம்

## பாடசாலையின் பாதுகாப்புக்கு காவலாளியை நியமிப்பார்களா?

1852ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கில் முதன்முதலில் உருவாக்கப்பட்டதும் நீண்ட கல்விப் பாரம்பரியம் கொண்டதுமான பாடசாலை உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகும்.

அரசின் ஆயிரம் பாடசாலை திட்டத்தில் இந்தப் பாடசாலை உள்ளீர்க்கப்பட்டு, சுவிஸ் நிறுவனத்தின் பங்களிப்புடன் சகல வளங்களுடன் 1AB பாடசாலையாக மிளிர்கிறது. ஆனால் இந்தப் பாடசாலைக்கு காவலாளியொருவர் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

ஆவணி விடுமுறையில் பாடசாலையின் பாதுகாப்புத் தொடர்பில் வடமராட்சி கல்விச் சமூகத்தினர் அச்சம் கொண்டுள்ளனர். உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து காவலாளி ஒருவரை காலதாமதமின்றி நியமிக்குமாறு வேண்டி நிற்கின்றனர்.

**புஷ்பகுமார், கரவெட்டி.**

## சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட வேண்டுமா?

இலங்கையின் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் தமிழரின் இரு கண்கள். எமது தேசத்தின் தியாகங்களுக்கும், சிந்திய குருதிகளுக்கும், இழப்புகளுக்கும் என்றோ ஒரு நாள் விடிவு கிடைத்தே ஆக வேண்டும். அதற்காக தமிழன் ஒற்றுமையாக வாக்களித்து ஒப்பற்ற தமிழ் அணியைப் பலப்படுத்த வேண்டும். விலைபோகாத தேசியப் பற்றுடன் இருக்கின்ற வேட்பாளர்களைத் தெரிவு செய்யவேண்டும்.

தமிழனின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பலர் சுயேச்சைக் குழுவில் பணத்துக்காக களமிறங்கினார்கள். இவர்களுள் நாவலாசிரியர்கள், கவிஞர்கள், பதிவாளர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தினர், அரச ஊழியர்கள், சாதாரண தொழிலாளர்கள் எனப் பலர் போட்டியிட்டு தோல்வி அடைந்தனர். யாழ்ப்பாணத்து இலக்கியவாதிகள் சிலர் சுயேச்சையாகப் போட்டியிட்டது வெட்கக் கேடான விடயம்.

''தமிழரின் உடல்கள் குண்டுகள் வெடித்து சிதறியிருக்கலாம். ஆனால் வாக்குகள் சிதறக் கூடாது'' என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

கடந்த தேர்தலில் சுயேச்சை குழுக்கள் போட்டியிட்டு தோல்வி அடைந்து அவமானப்பட்டன.

சலுகைக்காக சலூட் அடிப்பவன் தமிழனல்ல, அவன் உரிமைக்காக உயிர் விட்டவன் என்பதை உலகறியச் செய்வோம். சுயேச்சைகளாய் போட்டியிடுவதை தவிர்ப்போம். தமிழனின் ஒற்றுமையை வலுப்படுத்துவோம்.

"தர்மத்தின் வாழ்வதனை சூது கௌவும், தர்மம் மறுபடியும் வெல்லக் காண்போம்''

**ஜே.அலன், யாழ்ப்பாணம்.**

## ஆசீர்வாதப்பர் வீதியை புனரமைப்பார்களா?

யாழ்.அரியாலை கனகரத்தினம் வீதிக்கும் கச்சேரி நல்லூர் வீதிக்கும் இடையேயுள்ள பிரதான குறுக்கு வீதி ஆசீர்வாதப்பர் வீதியாகும். 750 மீற்றர் நீளமான இந்த வீதி பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்த வீதியால் பிரயாணம் செய்பவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதுடன் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுகின்றது.

மழை காலத்தில் இந்த வீதியில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியைத் திருத்திப் புனரமைத்து தரும்படி யாழ்.மாநகர சபைக்குப் பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மாநகர சபையை வேண்டுகிறோம்.

**கா.தில்லையம்பலம், அரியாலை.**

## நிலையான ஆசிரியர் இன்மையால் மாணவர் பாதிப்பு

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் கடந்த சில ஆண்டுகளாக இடைநிலை வகுப்புகளுக்கான பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் கடமை நேரங்கள் அடிக்கடி மாற்றம் செய்யப்படுகின்றன.

ஒரு பாடத்துக்கு ஒரு தவணைக் காலத்துக்குள்ளே நான்குக் மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பித்திருக்கிறார்கள். உரிய பாடங்களுக்கு உரிய துறைசார்ந்த ஆசிரியர்கள் இல்லாது இடைநிலை வகுப்பு மாணவர்களது கற்றல் வளர்ச்சியற்று குறைபாட்டுடன் நடைபெறுகிறது.

நிர்வாக ரீதியில் உள்ள குறைபாட்டால் மாணவர் கல்வி பாதிக்கப்படுகிறது. தொடர்ந்து கொண்டிருக்கும் உள்ளக ஆசிரியர் இடமாற்றங்கள் பொறுப்பற்ற விதத்தில் அமைவதே கல்வி வீழ்ச்சிக்கு பிரதான காரணி என பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைக் கல்வியை மட்டுமே நம்பி இருக்கும், போரினால் தமது ஆரம்பக் கல்வியை சிறப்பாகப் பெற்றிராத மாணவர்களே தற்போதைய இடை நிலை வகுப்புக்களில் கற்கின்றனர். அவர்களது கல்வி விருத்திக்கு நிரந்தரமான பாட ஆசிரியர் அவசியம் என்பது பெற்றோர்களது விருப்பமாகும்.

உரிய அதிகாரிகள் பொதுப் பரீட்சை வகுப்புகளில் காட்டும் அக்கறை போல் இடை நிலை மாணவர் கல்விச் செயற்பாட்டையும் சீர் செய்து தரவேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கேட்டுள்ளனர்.

**பெற்றோர்.**

## செப்பனிடப்படாத வீதியால் மக்கள் அவலம்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிநகர் கிராம சேவையாளர் பிரிவில் இதுவரை வீதிகள் தார் இட்டு திருத்தம் செய்யப்படவில்லை. நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், கரும்புள்ளியான் போன்ற கிராமங்களின் போக்குவரத்தை மல்லாவி நகருடன் இணைக்கும் பாரதி நகர் பிரதான வீதி பெரும் குன்றும் குழியுமாகப் பல வருடங்களாக காணப்படுகிறது.

இதனால் வைத்திய சாலைக்கு அவசரமாக இரவு வேளையில் கொண்டு செல்லப்படும் நோயாளர்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

200 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வரும் இந்தக் கிராமம் மல்லாவி நகரின் எல்லைக் கிராமமாக இருக்கிறது.

மல்லாவி நகர் எல்லை கடந்த கிராம வீதிகள் பலவும் தார் வீதியாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இந்தக் கிராமம் புறக்கணிக்கப்பட்டுள்ளதா என்று அந்தப் பகுதி மக்கள் கேட்கின்றனர் இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கேட்கின்றனர்.

**மல்லாவி, பொதுமகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை அதிகரிப்புக்கு

## பருவ நிலை மாற்றங்களும் காரணமாம்



உலக வெப்பமயமாதல் அதிகரித்து வருவதால், கடந்தாண்டு திடீரென ஏற்பட்ட பேரழிவுகளால், இரண்டு கோடி மக்கள் வீடிழந்துள்ளனர். இவ்வாறு பருவநிலை மாற்றத்தால் அகதிகளாக மாறியோர் பலர் தங்கள் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து வளமான பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களில், பெரும்பாலோர் ஏற்கனவே மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிகளுக்குச் சென்றுள்ளதால் அங்கு கூடுதல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பொதுவாக பெரும்பாலான நாடுகள் சுற்றுச் சூழல் பாதிப்பால் ஏற்படும் இடம் பெயர்தலை தங்கள் நாட்டுக்குள்ளேயே சமாளித்துக் கொள்கின்றன. ஆனால், சிறிய தீவுகள், கடல் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் போது சர்வதேச அளவில் இடம் பெயரும் நிலை உண்டாகிறது. மேலும், அடுத்த 40 ஆண்டுகளில், 100 கோடி மக்கள் வரை இடம்பெயர்வர் என கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் இயற்கைப் பேரழிவுகளின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகி உள்ளது. இவ்வாறு தொடர்ந்து ஏற்படும் பருவநிலை மாற்றங்களால் இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகளவிலான வெப்பநிலை 2 டிகிரி சென்ரிகிரேடு முதல் 5 டிகிரி சென்டிகிரேடு வரை அதிகரிக்கலாம் என்றெல்லாம் முன்னரே செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் அமெரிக் காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி மார்செல் பர்கே தலைமையிலான குழுவினர் நடத்திய ஆய்வின் முடிவில் உலகம் முழுவதும் வன்முறைகள் அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணம், பருவநிலை மாற்றம் என்று தெரியவந்துள்ளது.

அதாவது உலகத்தில் வெப்பநிலை அல்லது மழை என்பவற்றில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும் உலகளவில் பல்வேறு நாடுகளிடையே தாக்குதல்கள், மனிதர்களிடையே பாலியல் பலாத்காரங்கள், கொலைகள் ஆகியவை அதிகரிக்கின்றன.



உச்சபட்சமாக இரு குழுவினரிடையே மோதல்கள், நாடுகளிடையே போர் ஆகியவையும் கூட இடம்பெறுகின்றன.

உலகம் முழுவதும் 60 இடங்களில் ஆய்வு நடத்தப்பட்டு இந்த முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பல நூறு ஆண்டு புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு அவை இறுதியாக்கப்பட்டுள்ளன. பருவநிலை மாற்றத்துக்கும் பிரச்சினைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் சமீபத்தில் வறட்சி ஏற்பட்டபோது அங்கு தாக்குதல் சம்பவங்கள், பலாத்காரங்கள், கொலைகள் அதிகரித்தன. இதே போன்று அமெரிக்காவிலும் இடம்பெற்றன. வெப்ப நிலை அதிகரிக்கும்போது மனித மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வன்முறைகள் ஏற்படுகின்றன என்று தெரியவந்துள்ளது. உதாரணமாக 2 டிகிரி சென்டிகிரேட் வெப்பநிலை உயர்ந்தாலே தனிப்பட்ட குற்றங்கள் 15 சதவீதம் அதிகரிப்பதும் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் 50 சதவீதம் வரை அதிகரிப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவை பொறுத்தவரையில் சமீபத்தில் வறட்சி ஏற்பட்டபோது அங்கு தாக்குதல் சம்பவங்கள், பலாத்காரங்கள், கொலைகள் அதிகரித்தன. இதே போன்று அமெரிக்காவிலும் இடம்பெற்றன. வெப்ப நிலை அதிகரிக்கும்போது மனித மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வன்முறைகள் அதிகரிக்கின்றன

# அணிகலன்கள் ஏன் அணியப்படுகின்றன?

### மெட்டி அணிவது ஏன்?

பெண்களின் கருப்பை நரம்புகளுக்கும் கால் விரல் நரம்புகளுக்கும் ஒருவித தொடர்பு உள்ளது. கால் விரலில் மெட்டி அணிவதால் கருப்பையின் நீர்ச் சமநிலை எப்போதும் பாதிப்படைவதில்லை.அது மட்டுமின்றி வெள்ளியில் செய்த மெட்டியைத் தான் அணிய வேண்டும். ஏனெனில் வெள்ளியில் இருக்கக் கூடிய




ஒருவித காந்த சக்தி காலில் இருக்கும் நரம்புகளில் இருந்து உடலில் ஊடுருவி நோய்களுக்கு நிவாரணம் செய்யும் ஆற்றல் கிட்டுகிறதாம். பெண்கள் கர்ப்பம் அடையும்போது மயக்கம், வாந்தி, சோர்வு, பசியின்மை ஏற்படும்.

கர்ப்பகாலத்தின் போது இந்த நரம்பை அழுத்தித் தேய்த்தால் மேற்கண்ட நோவுகள் குறையும். இதனை எப்போதும் செய்துக் கொண்டு இருக்க முடியாது என்பதற்காக வெள்ளியிலான மெட்டி அணி வித்தார்கள். காரணம், நடக்கும்போது இயற்கையாகவே மெட்டி நரம்பை அழுத்தி, உராய்த்து நோவைக் குறைக்கிறது. கருப்பை பாதிப்புகள் ஏதும் வரக்கூடாது என்பதால்தான் காலில் மெட்டி அணியும் பழக்கத்தை நம் முன்னோர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள்.

### கொலுசு அணிவது ஏன்?

கொலுசு கொஞ்சம் விவகாரமான விஷயம். பொதுவாக, உடல் ரீதியாக ஆண்களைவிட பெண் களுக்கு உணர்ச்சி அதிகம். அந்த உணர்ச்சி ஆண்களை விட மிஞ்சி விடக்கூடாது என்பதற்குதான் இந்த கொலுசு.

உணர்ச்சிகள் பெருவிரலிருந்து தொடங்கி குதிக்கால் பின் நரம்பு



வழியாக உச்சம் தலைக்கு ஏறுகிறது. வெள்ளிக்கொலுசு குதிக்கால் நரம்பினை உரச, உரச உணர்ச்சிகள் குறைந்து கட்டுப்படுகிறது. சில விவகாரமான விடயங்கள் இலை மறை கனியாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படி மறைவாக வைத்தனர் நமது முன்னோர்கள்.

### மோதிரம் அணிவது ஏன்?


விரல்களில் மோதிர விரலில் அணியப்படும் மோதிரம், இருதய நோய், வயிற்றுக் கோளாறுகள் போன்ற நோய்களை நீக்குகிறது. ஆண் பெண் இன விருத்தி உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறது. சுண்டு விரலில் மோதிரம் அணியக் கூடாது. இதனால் இதயசக்தி ஓட்டம் தடைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லட்சம் எலும்புகள் வொஷிங்டன் நோக்கி

## மாபெரும் கவன ஈர்ப்பு கண்காட்சி



10 லட்சம் எலும்புகள் என்ற கருத்தை முன் வைத்து நயோமி நேடலி என்ற மனித உரிமை ஆர்வலர் மற்றும் கலைஞர் ஒருங்கிணைப்பு செய்த திறந்த வெளிக் கண்காட்சி உலகின் கவனத்தை ஈர்த்தது. அமெரிக்காவின் மாநிலத் தலை நகரங்களில் இந்த திறந் வெளிக் கண்காட்சி நடைபெற்றாலும் இறுதியில் அமெரிக்காவின் தலை நகரான வொஷிங்டனில் தேசிய சந்தையில் மிகப் பெரிய அளவில் இந்த கவன ஈர்ப்பு நடைபெற்றது. மூன்று வருடங்களாகத் திட்டமிடப்பட்ட இந்த கருத்தியல் கண்காட்சி ஜூன் 8-10 வரை பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏராளமான தன்னார்வத் தொண்டர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள் என பல்லாயிரம் பேர் இந்த செயற்பாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இந்த கவன ஈர்ப்பு கண்காட்சியை ஏற்படுத்தக் காரணம் உலகெங்கும் நடைபெறும் இனப்படுகொலை பற்றிய செய்தியை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காகத் தான்.



சூடான், சோமாலியா, சிரியா, பர்மா, கொங்கோ, சாட் போன்ற நாடுகளில் நடந்த நடக்கின்ற இனப்படு கொலையை மக்கள் அறிவதற்கும் அப்போது கொல்லப்பட்ட மக்கள், தப்பித்து வெளியேறிய மக்களின் நினைவாகவும் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது. எனினும் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலை பற்றி இந்த அமைப்பினர் குறிப்பிடவில்லை. இலங்கை அரசின் ராஜ தந்திரத்தால் இலங்கை தொடர்ப்பான செய்தி மறைக்கப்பட்டதா எனத் தெரியவில்லை.

சாட்சிகள் இல்லாத இனப் படுகொலை என மேற்கத்திய ஊடகங்களால் கருதப் படும் தமிழினப் படுகொலை இந்த நூற்றாண்டின் கோர மான இனப் படுகொலை யாகும். நியாயமாக தமிழ்நாட்டில் பத்து லட்சம் எலும்புகளுடன் தமிழர்கள் கவன ஈர்ப்பு நிகழ்வை உருவாக்கி இருக்க வேண்டும். இன்னொரு விடயத்தையும் இந்த அமைப்பினர் கவனிக்க தவறி விட்டனர். ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடு களில் அமெரிக்கா மிக மோசமான இனப்படு கொலையை நிகழ்த்தி உள்ளது . இதைப் பற்றிய குறிப்புகளும் இந்தக் கண்காட்சி அமைப்பினர் சுட்டிக் காட்டத் தவறி விட்டனர். எனினும் நேடலி தெரிவிப்பது, இனி வரும் காலங்களில் வரும் இளம் தலை முறை இனப்படு கொலையின் கொடுமையை உணரவேண்டும். உலகில் எங்கும் இனப் படுகொலை மற்றும் பெரிய ளவிலான மனித உரிமை மீறல்கள் நடைபெறக் கூடாது என்பதை நினைபடுத்தவே இந்த கண் காட்சியை உருவாக்கி உள்ளோம் என்பது தான்.

நாகரமான எந்த ஒரு சமூகமும் இனப்படு கொலையை ஏற்காது. இந்தியாவின் துணையுடன் நடந்த தமிழினப் படுகொலையாகட்டும் காஷ்மீர், குஜராத், பஞ்சாப் ஆகிய இடங்களில் நடந்த நடக்கின்ற இனப்படுகொலை யாகட்டும் இந்தியா இது வரை தார்மீகப் பொறுப்பு ஏற்க வில்லை. இன்னும் நாக ரீக மான சமுதாயக் கட்டமைப்பை இந்தியா ஏற்கவில்லை என்றே தெரிகிறது. அதனால் தான் மாவோ போரா ளிகளை ஒடுக்கும் பச்சை வேட்டையை இந்தியா இன்னும் ஊக்குவிக்கிறது.

இந்த சர்வதேச கவனஈர்ப்பு இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுக்கு கொடுக்கப்பட்ட பெரும் சவுக்கடி தான் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும் இந்தக் கண் காட்சி அமைப்பினர் ஆபிரிக்க நாடுக ளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை இந்திய , இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு கொடுத்திருக்கலாம் என்பதே தெற்காசிய மனித உரிமை ஆர்வலர் களின் கருத்தாக உள்ளது.

**உலகில் எங்கும் இனப்படுகொலை மற்றும் பெரிய ளவிலான மனித உரிமை மீறல்கள் நடைபெறக் கூடாது என்பதை நினைபடுத்தவே இந்த கண் காட்சியை உரு வாக்கி உள்ளார்கள்.**

# ஊதுபத்தி புகையும் கூட எமக்கு பகையே

உலக அளவில் புகையிலை பாதிப்பால் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்குதான் ஒவ்வொரு நாட்டின் அரசுக்கும் அதிகம் செலவாகிறது.காரணம் இந்த புகையால்தான் ஆறு நொடிக்கு ஒருவர் இறப்பை தழுவுகிறார்கள். பொதுவாக புகையிலை என்றதும் நினைவுக்கு வருவது சிகரெட். இதில் உள்ள நிக்கோடின் என்ற நச்சுப்பொருள்தான் புகைப் பவர்களை அடிமையாக்குகிறது. ஒரு சிகரெட்டில் 4 ஆயிரம் வேதிப்பொருள்கள் கலந்துள்ளன. இவற்றில் 43 பொருள்கள் புற்றுநோய் ஏற்படுத்தக்கூடியவை. தற்போது உலகளவில் 6 நொடிக்கு ஒருவர் புகையி லையால் உயிரிழக்கின்றார்.மேலும் ஆண்டுக்கு 60 லட்சம் பேர் புகையிலை மற்றும் சிகரெட்டால் இறக்கின்றனர். 2030 இற்குள் இது ஒரு கோடியாக அதிகரிக் கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதில் 70 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் உள்ளனர்.

இதற்கிடையில் ஊதுபத்திகளை அதிகளவில் பயன்படுத்துவதால் வீட்டுக்குள்ளே காற்று மாசடைந்து நுரையீரல் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஓர் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சமயச் சடங்குகள் நடக்கும் போதும் வாசனைக்காகவும் ஊதுபத்திகள் கொளுத் தப்படுகின்றன. ஐக்கிய அரபு குடியரசில் 94 சதவீத வீடுகளில் ஊதுபத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.



இதுபோன்ற ஊதுபத்தி புகையால் கண், மூக்கு, தொண்டையில் பிரச்சினைகள், தோலில் எரிச்சல், ஆஸ்துமா, தலைவலி, இதயக்கோளாறுகள் ஏற்படு கின்றன. நுரையீரல் செல்லின் கட்டமைப்பு முறையி லேயே மாற்றம் ஏற்படுகிறது. சுவாசம் தொடர்பான நோய்களால் ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சம் பேர் இறக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

முக்கியமாக சமைக்கும் அடுப்பிலிருந்து எழும் புகையால் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. ஊதுபத்தியும் கார்பன் மோனாக்சைடை வெளியிட்டு அதேபோன்ற காற்று மாசை ஏற்படுத்துகிறது.இந்நிலையில் ஊதுபத்திகளை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தின் கொள்ளைநோய்கள் ஆராய்ச்சி துணை பேராசிரியர் காரின் யேத்ஸ், அதே பல்கலைக்கழகத்தில் பணி யாற்றும் சிலர் சேர்ந்து ஆய்வு மேற்கொண்ட னர். ஆய்வுக்கென்று சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அறை யில் ஊதுபத்திகள் கொளுத்தி வைக்கப்பட்டன. ஐக்கிய அரபு குடியரசில் சாதாரணமாக வீடுகளில் எந்தளவுக்கு ஊதுபத்தி பயன் படுத்தப்படுமோ அதே அளவிலான ஊதுபத்திகள் புகையவிடப்பட்டன. அந்த அறையில் மனித நுரையீரல் செல்கள் வைக்கப் பட்டிருந்தன. 3 மணி நேரத்துக்கு புகை அந்த செல்களை சூழ்ந்து இருக்கும்படி செய்யப்பட்டது. பின்னர் புகையால் எழுந்த துகள்கள் படியும் வகையில் 24 மணி நேரத்துக்கு அந்த செல்கள் பாதுகாக்கப் பட்டன. ஆய்வின்போது ஊதுபத்தியிலிருந்து வெளியாகும் காபன் மோனாக்சைடு, சல்பர் டை ஒக்சைடு, நைதரசன் போமால்டிஹைடு ஆகிய வாயுகளின் அடர்த்தி குறித்தும் ஆராயப்பட்டது. பின்னர் அந்த செல்லை ஆராய்ந்தபோது சிகரெட் புகையால் ஏற்படும் அத்தனை பாதிப்புகளும் அந்த செல்களில் இருப்பது தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST. ANTHONY'S HOME MART

SINCE 1942

## புதிய வாழ்க்கைக்கு நவீன தெரிவுகள்





70 வருட காலமாக இலங்கையர்களின் நம்பிக்கையை வென்ற நிர்மாணத்துறை சார்ந்த தயாரிப்புகளை வழங்கும் சென். அந்தனீஸ் ஹார்ட்வெயார் கிளிநொச்சியில் தனது புதிய காட்சியறையை எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்கிறது.

புதிய வாழ்க்கைக்கு உகந்த அனைத்துவிதமான நவீன நிர்மாணத் தயாரிப்புகளையும் ஒரே கூரையில் கீழ் கொண்ட **Home Mart** காட்சியறைக்கு விஜயம் செய்து உங்கள் வாழ்க்கையில் புது மலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய நிர்மாணத்துறை சார்ந்த தயாரிப்புகளை மனம் விரும்பியதை போல் தெரிவு செய்யுங்கள்.

ST. ANTHONY'S HOME MART

முகவரி: சென்.அந்தனீஸ் ஹோம் மார்ட், ஏ9 வீதி, கிளிநொச்சி. தொ.பேசி:021-57676720, தொ.நகல்: 021-5676721

WATERTEC Simply Better · PRINCE · CROWN · Husqvarna · DARI · COTTO · KAILT · 7CF · VENUS · solar · KENT Mineral RO

St.Anthony's Hardware (Pvt) Ltd.

சென்.அந்தனீஸ் ஹோம் மார்ட். ஏ9 வீதி. கிளிநொச்சி. தொ.பேசி:021-57676720. தொ.நகல்: 021-5676721

www.stanthonys.lk

*Reaching for Excellence*



www.senfin.com

## இவ் அனைத்து வேலைகளையும் மிக இலகுவாக செய்திடலாம்

இப்பொழுது செங்கடகல பினான்ஸிலுள்ள உங்களது சேமிப்பிற்கு உயர் வட்டியும், கூடவே VISA டெபிட் கார்ட்டினையும் பெற்றிடுங்கள்




உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி
**9.9%**
*சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

ஒரு வருடத்திற்கான நிலையான வைப்பிற்கு உயர் வட்டி
**14.20%**
*சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

45 வருட கால அனுபவத்துடன் அசையாத ஸ்திரத்தன்மையுடன்

நவீன வசதிகளையும், உயர் அனுகூலங்களையும் பெற்றிட இன்றே செங்கடகல பினான்ஸினை நாடுங்கள்.

### நிலையான வைப்புத் திட்டங்களுக்கான தற்போதைய வட்டி விகிதங்கள்

| காலம் | மாதாந்தம் | A.E.R. | முதிர்வுறும் போது | A.E.R. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 12.50% | 13.24% |
| 3 மாதங்கள் | | | 13.25% | 13.92% |
| 6 மாதங்கள் | | | 13.50% | 13.96% |
| 1 ஆண்டு | 13.25% | 14.09% | 14.20% | 14.20% |
| 2 ஆண்டுகள் | 13.25% | 14.09% | 14.70% | 13.75% |
| 3 ஆண்டுகள் | 13.25% | 14.09% | 14.70% | 12.95% |
| 4 ஆண்டுகள் | 13.25% | 14.09% | 15.00% | 12.47% |
| 5 ஆண்டுகள் | 13.25% | 14.09% | 15.20% | 11.97% |

*நிபந்தனைகள் உண்டு

விபரங்களை அறிய: ஈஷா - 077 3 090 370, நுவன்திகா - 077 3 090 350, ஷெரீன் - 077 3 090 356

Est.1968

**SL BBB+ Fitch Rating Lanka Limited**

செங்கடகல பினான்ஸ்
நேர்த்தி தவறாதது

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 29.12.1968. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 301 937
மின்னஞ்சல்: senk@senfin.com இணையத்தளம்: www.senfin.com

(C/10832)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் நடையாகவே உலகை வலம் வந்த முதலாவது நபர்



விமானத்தில் செல்லாது உலகின் உள்ள 201 நாடுகளையும் சுற்றிப் பார்த்த முதல் நபராக லிவர்பூலை சேர்ந்த கிரஹம் ஹோக்ஸ் சாதனை படைத்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்த ஹோக்ஸ் மொத்தம் ஆயிரத்து 426 நாள்கள் (4 வருடங்கள்) 160,000 மைல்கள் பயணித்து இந்தச்சாதனையை படைத்திருக்கிறார். ஆனால் இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது எந்த ஒரு நாட்டுக்கும் இவர் விமானம் ஒன்றின் மூலம் வான்வழியாக பயணிக்கவில்லை.

பஸ், கார், ரயில், கப்பல் என பொதுமக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தும் ஒன்றிலோ அல்லது கால் நடையாகவோ என இப்படித் தான் இவருடைய போக்குவரத்து இருந்திருக்கிறது.

ஒரு வாரத்துக்கு 100 அமெரிக்க டொலர்கள் செலவு செய்வது என்பது தான் இவரது நிதி அறிக்கை.

தென் அமெரிக்க நாடான உருகுவேயில் தனது பயணத்தைத் தொடங்கி இறுதியாக உலகில் உருவான புதிய நாடான தென் சூடானில் வெற்றிகரமாக முடித் திருக்கும் கிரஹம் ஹோக்ஸ் தனது பயண அனுபவத்தை 'நேஷனல் ஜியோகிரோஃபி' ஊடகத்துக்கு ஆவணத் தொகுப்பை வழங்கியிருக்கிறார்.

அதற்கு முன்னர் 4 நிமிடங்கள் கொண்ட ஒரு காணொலியை உருவாக்கி இணையத்தில் உலாவவிட்டிருக்கிறார். இதில் அவர் சென்ற 201 நாடுகளையும் வரிசையாகச் சொல்கிறார்.

ஒரு தொப்பியும் குறுந்தாடியுமாய் இவர் ஆரம்பித்த பயணத்தில் வடகொரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குள் நுழைவதற்குக்கூட கஷ்டப்படவில்லையாம்.

ஆனால் தென் பசுபிக் ந ா நௌரு, மாலைதீவு, செய்ச்செல்ஸ் போன்ற நாடுகளுக்குச் செல்ல மிகவும் கஷ்டப்பட்டாராம்.

உலகின் அத்தனை நாடுகளையும் இவ்வாறு கஷ்டப்பட்டு சுற்றிவந்த ஒருவராக கிரஹம் ஹோக்ஸ் இருப்பதால் இவருக்கு வாழ்த்துக்கள் குவிகின்றன சமூக வலைத் தளங் களில்.

அதில் பலர் 'உங்களைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது. ஒரு அற்புதமான அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்கள்' என வாழ்த்துகிறார்கள்.

மேலும் இப்படி அத்தனை நாடுகளுக்கும் சென்று வரவேண்டும் எனத் துடிப்பவர்களுக்கு ஹோக்ஸ் வழிகாட்டியாகவும் இருக்கப் போகிறார்.


இடர்கள் குறைந்த,
வரிகள் அற்ற
நிலையான வருமான
வழியொன்றில்
முதலீடு செய்யும் இலாவகமான
முறையை நீங்கள் அறிவீர்களா?

இலவசக் கருத்தரங்கு

சிறந்த வருமானத்தை* வழங்கும் நிலையான வருமான வழியொன்றில் முதலீடு செய்யும் முறை சம்பந்தமாக நாம் நடத்தும் இலவச கருத்தரங்கில் பங்குபற்றி புதிய முதலீட்டு வழி பற்றிய சகல புதிய தகவல்களையும் அறிந்துகொள்ளுங்கள்.

| திகதி | இடம் | விபரங்களுக்கும் பதிவிற்கும் | நேரம் |
|---|---|---|---|
| ஒகஸ்ட் 10 | கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ் - கிளை, 147- 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | தொலைபேசி: 021-2221455 0777-822014 | மு.ப. 9.00 – நண்பகல் 12.00 |

*தற்போதய திறைசேரி உண்டியல் வீதத்தைவிடக் கூடுதலானது.
CSE COLOMBO STOCK EXCHANGE
SAATCHI & SAATCHI
(C/10824)

செலான் வங்கி ஊடாக உங்களுக்கும் ஹொண்டா ட்ரீம் யுகா மோட்டார் சைக்கிள்
லீசிங், கடன் அல்லது கடனட்டை இவற்றில் உங்களுக்கு இலகுவான மீளச்செலுத்தும் முறையை தெரிவு செய்யுங்கள்




SMART lease
LOAN

நீங்களும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட வசதிகளின் ஊடாக எந்தவொரு ஹொண்டா மோட்டார் சைக்கிளையும் கொள்வனவு செய்ய முடியும்.
அருகிலுள்ள ஹொண்டா விநியோகஸ்தர் நிலையத்திற்கு அல்லது செலான் வங்கி கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

லீசிங் வசதிகள் மற்றும் கடன் வசதிகள் 2 மாதங்களுக்கு கணக்கிடப்பட்டுள்ளத
*நிபந்தனைகளுக்கு உட்பட்ட

HONDA
இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
பிரதான காரியாலயம்: 718/7, மருதானை வீதி, கொழும்பு 10.
மோட்டார் சைக்கிள் காட்சியறை: 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-7607200

செலான் டவர்ஸ், இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94 11 2456000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல்: info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating "A-(lKa)"
நிறுவன பதிவிலக்கம்: PQ 9
செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.
www.facebook.com/SeylanBank
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

0215671111
advt@uthayan.com
உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org